விலை: 30
பக்கங்கள்: 28

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 313 புரட்டாதி 19ஆம் நாள் வெள்ளிக்கிழமை 05 ஒக்ரோபர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

குருப்பெயர்ச்சி பலன்கள் - 2018
பக் - 22

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனா? விக்கிக்கு நேற்று வந்த திடீர் சந்தேகம்

யாழ்ப்பாணம், ஒக். 5
தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தா அல்லது வேறு நபர்களா என்ற சந்தேகம் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு இப்போது வந்துள்ளது. நேற்றைய தினம் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். சம்பந்தன் மௌனம் காப்பதனால் நன்மை ஏற்படுமென்பதனை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் வடமாகாண >> 24

வடக்கு மாகாண சபையின்

# 5ஆவது அமைச்சர் மீதும் மோசடிக் குற்றச்சாட்டு

அவரைப் பதவி துறக்கவும் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 5
வடக்கு மாகாண சபையின் பதவிக் காலம் முடிவடைவதற்கு இன்னும் சில வாரங்களே இருக்கும் நிலையில் மீண்டும் அதிகார மோசடிக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. சுகாதார அமைச்சராகக் கடமையாற்றும் ஜி.குணசீலன் மீது இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.
வடக்கு மாகாண சபை அமைச்சர்கள் மீது ஏற்கனவே சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்கள் காரணமாக ஏற்கனவே 4 அமைச்சர்கள் பதவியை இழந்த நிலையில் தற்போது 5ஆவது நபர் மீதும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. >> 25

வடக்கு மாகாண சபையின்

## குறைநிரப்பு நியதிச் சட்டத்துக்கு ஆளுநர் அனுமதி வழங்க மறுப்பு

அமைச்சரவை மறுசீரமைக்கப்படாததால்

யாழ்ப்பாணம், ஒக். 5
வடக்கு மாகாண அமைச்சரவை தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய இடைக்காலக் கட்டளை நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனால் அமைச்சரவைக் கூட்டம் நடத்த தடை விதிக்கப்பட்டது. இவ்வாறானதொரு நிலையில், ஆயிரத்து 606 மில்லியன் ரூபா >> 25

## சம்பிரதாய அமர்வில் தேநீர் விருந்துபசாரம்

யாழ்ப்பாணம், ஒக். 5
வடக்கு மாகாணசபையின் சம்பிரதாயபூர்வ அமர்வு எதிர்வரும் 23ஆம் திகதி இடம்பெறவுள்ளது. அன்று மாலை மாகாணசபை உறுப்பினர்களுடனான தேநீர் விருந்துபசாரத்துடன் சபையின் செயற்பாடுகள் யாவும் நிறைவுக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. >> 25

## மாகாணசபைத் தேர்தலை உடன் நடத்தவேண்டும்

மைத்திரியை விளாசிய வடக்கு மாகாணசபை

யாழ்ப்பாணம், ஒக். 5
மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்தவேண்டும் என்று வடக்கு மாகாண சபையில் நேற்றுக் கோரிக்கை விடுக்கப்பட்டது. மகிந்த அணி மாகாணசபை உறுப்பினர், தர்மபால செனவிரட்ன சபையில் இந்தக் கோரிக்கையை >> 25

## 5 ஈச்சரங்களையும் புனித தலங்களாக அறிவிக்கவேண்டும் என்று தீர்மானம்

வடக்கு மாகாணசபையில் ஏகமனதாக நிறைவேறியது

யாழ்ப்பாணம், ஒக். 5
இலங்கையில் உள்ள ஐந்து ஈச்சரங்களையும், புனித தலங்களாக அரசு அறிவிக்கவேண்டும் எனக் கோரும் தீர்மானம் வடக்கு மாகாணசபையில் ஏகமனதாக நேற்று நிறை >> 25

## வடக்குச் சபையின் காலம் முடிந்ததும் ஆளுநர் அரசியல் செய்யப்போகிறார்

சபை உறுப்பினர்கள் கொதிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 5
வடக்கு மாகாண சபையின் ஆயுள் காலம் முடிவடைந்த பின்னர், ஆளுநர் இங்கு அரசியல் செய்யப் போகின்றார். கொழும்பு அரசின் ஆளும் கட்சியின் விருப்பங்களை அவர் நிறைவேற்றப் போகின்றார். இவ்வாறு வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்கள் நேற்றுத் தெரிவித்தனர்.
வடக்கு மாகாண >> 24

## விக்கி – டெனிஸ் சட்ட மோதலால் 400 பேரினது பணி அந்தரத்தில்

சபையில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக். 5
கொழும்பு அரசினால் 400 சுகாதாரத் தொண்டர்களுக்கு நியமனம் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டபோதும், வடக்கு >> 25

## மைத்திரி – மகிந்த புரிந்துணர்வு ஊடாகவே தீர்வு சாத்தியமாகும்

இப்படிச் சொல்கிறார் எஸ்.பி. திசநாயக்க எம்.பி.

யாழ்ப்பாணம் ஓக் 5
பெரும்பான்மை சிங்கள மக்களின் ஆதரவின்றி வடக்கு மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகான முடியாது. மைத்திரி, மகிந்த புரிந்துணர்வினூடாகவே சிங்கள-மக்களின் ஆதரவை பெறமுடியும். அத்துடன் >> 25

## நெல்சிப் மோசடி

## உள்ளூராட்சி சபைத் தலைவர், செயலாளரிடம் மேன்மிகை அறவீட்டுக்கு மாகாணசபை ஒப்புதல்

கணக்காய்வாளர் திணைக்களம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 5
நெல்சிப் திட்டத்தை முன்னெடுத்ததில் இடம்பெற்ற ஊழல் மோசடி தொடர்பில், பருத்தித்துறைப் பிரதேச சபை, வல்வெட்டித்துறை நகர சபை தலைவர் மற்றும் செயலரிடம் மேன்மிகை அறவீடு மேற்கொள்ள >> 23



## இனி மக்கள் இயக்கமே

அமெரிக்காவிடம் விக்கி தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ஓக் 5
மக்கள் இயக்கத்தினை வலுப்படுத்தி மக்களுடன் இணைந்து செயற்படுவதே எனது நோக்கம் என அமெரிக்க நாட்டின் இலங்கைக் >> 24

## மறுவாழ்வு தொடர்பில் அறிவுறுத்தல் வரவில்லை

அரச சட்டத்தரணி கைவிரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 5
தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தில் 6பேருக்கு மறுவாழ்வு வழங்க சட்டமா அதிபர் இணக்கம் தெரிவித்திருந்தபோதும், அவர்களில் இருவரின் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மறுவாழ்வு >> 24

குடாநாட்டு குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க

## பாலியாற்றுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வடக்கு மாகாண சபை ஒருமனதாக முடிவு

யாழ்ப்பாணம், ஒக். 5
யாழ்ப்பாணத்தின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பாலியாற்றிலிருந்து கடலுக்குச் செல்லும் உபரிநீரை குடாநாட்டுக்குக் கொண்டுவரும் திட்டமுன்மொழிவை நடைமுறைப்படுத்து >> 24

அதிகபட்ச வட்டி வீதம்
உங்களுடைய நிலையான வைப்பிற்கு அதிகபட்ச வட்டி வீதம்
DFCC நிலையான வைப்பு
06 மாத நிலையான வைப்பு 11.5% வ.வி.வீ 11.83%
03 மாத நிலையான வைப்பு 11% வ.வி.வீ 11.46%
அருகிலுள்ள DFCC வங்கிக் கிளைக்கு விரைந்து நிலையான வைப்பு கணக்கினை ஆரம்பியுங்கள்.
நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
24 மணி நேர அழைப்பு மையம் : 011 2350000
www.dfcc.lk
DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# தண்ணீரால் சபையில் உக்கிரச் சண்டை

## முதலமைச்சர் காலம் கடத்துகின்றார் என எதிர்க்கட்சித் தலைவரால் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 5

வடக்கு மாகாண சபையினால் பெருமளவு பணம் செலவழித்து நடத்தப்பட்ட நீர்ப் பயன்பாடு மாநாடு அறிக்கை இன்னமும் சமர்பிக்கப்படவில்லை என்று முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அதற்கு முதலமைச்சர் பதிலளிக்க, சாக்குப் போக்குச் சொல்லிக் காலம் கடத்துகின்றார் என்று எதிர்க்கட்சித் தலைவர் குற்றம் சுமத்தினார். இதனால் சபையில் பெரும் சொற்போரே மூண்டது.

குடாநாட்டுக்கான குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பாலியாற்று நீரை கொண்டு வருவது தொடர்பான தீர்மானம் அவைத் தலைவரினால் முன்வைக்கப்பட்டது. அதன் மீதான விவாதத்திலேயே மேற்படி விடயம் பேசப்பட்டது.

வடக்கு மாகாண ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் நடத்தப்பட்ட நீர்ப் பயன்பாட்டு மாநாட்டின் அறிக்கையை முதலமைச்சர் இன்னமும் தரவில்லை என்று குற்றம் சுமத்தினார்.

அதற்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், கடந்த மே மாதம் அறிக்கை சமர்பிக்கப்பட்டது. அறிக்கைக்கு இறுதிவடிவம் கொடுக்கப்பட வேண்டியுள்ளது. அறிக்கை தயாரித்தவர்களுடன் கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யுமாறு விவசாய அமைச்சின் செயலருக்குப் பணித்துள்ளேன். அமைச்சின் செயலரின் இடமாற்றம் காரணமாக இடம்பெறவில்லை. எதிர்வரும் 19 ஆம் திகதி கூட்டம் நடைபெறும் என்று குறிப்பிட்டார்.

முதலமைச்சரின் கருத்து சுகம் வரும் ஆள் தப்பாது போல் இருக்கின்றது என்று குறிப்பிட்ட சிவாஜிலிங்கம், 19ஆம் திகதி கூட்டம் வைத்து எப்போது அறிக்கை தருவார்கள்? 23ஆம் திகதியுடன் சபை முடிவடைகின்றது. ஐயர் வரும் வரையில் அமாவாசை காத்திருக்குமா? வேண்டும் என்றால் 19ஆம் திகதி கூட்டம் நடத்திவிட்டு அதன் அறிக்கையை வீதி வீதியாகக் கொடுத்து மக்களிடம் பரப்புரை செய்யுங்கள். குடிதண்ணீர் விடயத்தில் சும்மா விளையாடிக் கொண்டிருக்கின்றீர்கள். எல்லா இடமும் தண்ணி காட்டிக் கொண்டிருக்கின்றீர்கள். விசர் நாய் கடித்தால் வரும் நீர் வெறுப்பு நோய் போன்று, வடக்கு மாகாண சபைக்கும் நீர் வெறுப்பு நோய் இருக்கின்றதோ என்று எண்ணத் தோன்றுகின்றது. கையெடுத்து கும்பிட்டுக் கேட்கின்றேன் அந்த அறிக்கையை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, வடக்கு மாகாண நீர்ப் பிரச்சினை தொடர்பில் சிறப்பு அமர்வு நடத்துங்கள் என்று நானும், சிவாஜிலிங்கமும் கேட்கின்றபோது அந்த அறிக்கை வந்த பின்னர் நடத்தலாம் என்று தெரிவித்து ஒத்திவைத்துக் கொண்டே வந்தீர்கள். முதலமைச்சர் தன்னுடைய கடிதங்களையே பார்ப்பதில்லை போல் இருக்கின்றது. கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் அறிக்கையைக் கேட்டபோது இரண்டு மாதங்களில் வழங்குவதாகத் தெரிவித்தார். ஒன்றரை வருடங்களாக முதலமைச்சர் தூங்குகின்றாரா? இப்போது வந்து செயலர் மாற்றம் அது இது என்று கதை சொல்கின்றார் என்றார்.

உடனே முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், எதிர்க்கட்சித் தலைவர் தவறாக கதைக்கின்றார் என்று குறிப்பிட்டார். உடனே எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் இப்படித்தான் ஏமாற்றிக் கொண்டிருக்கின்றீர்கள். 2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் எங்கே, 2018ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் எங்கே? இப்போதுதான் 2 மாதம் முடிந்துள்ளதோ என்று கேள்வி எழுப்பினார்.

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அந்த அறிக்கை கடந்த மே மாதம் வந்துவிட்டது. அது இறுதிப்படுத்தப்படவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் விளங்காமல் கதைக்கக் கூடாது என்று குறிப்பிட்டார். எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம், இரண்டு மாதங்களில் அறிக்கையை வழங்குவேன் என்றார். இன்று வரை அறிக்கையை முழுமைப்படுத்தவில்லை என்று கூறினார்.

முதலமைச்சரும், எதிர்க்கட்சித் தலைவரும் மாறிமாறி சத்தமிட்டதால் சபை சிறிது நேரம் அதிர்ந்தது. இதன் பின்னர் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் தமது அமைச்சின் மூன்று கொள்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அதனைச் சமர்பிக்க சில தொழில்நுட்ப பிரச்சினைகள் இருப்பதாகச் சொல்லி நீங்கள் (அவைத் தலைவர்) தடுத்துள்ளீர்கள். ஆனால், பாலியாற்றுத் திட்டத் தீர்மான வரைவை முன்வைக்க எந்தப் பிரச்சினையும் இல்லையா என்று கேள்வி எழுப்பினார். அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், எந்தத் தவறும் இல்லை என்று பதிலளித்தார். இந்த விடயத்தில் கல்வி அமைச்சர் க.சர்வவேஸ்வரன், அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் அரசியல் உள்நோக்கத்துடன் செயற்படுகின்றார் என்று குற்றம் சுமத்தினார். இதனால் அவைத் தலைவருக்கும், கல்வி அமைச்சருக்கும் இடையில் சிறிது நேரம் கடும் மோதல் இடம் பெற்றது. (5.26)

# மாகாண சபை திருடர்களின் குகை

## கூறுகிறார் தவநாதன்

யாழ்ப்பாணம், ஒக். 5

வடக்கு மாகாண சபையில் ஒவ்வொருவரும் மற்றவர்கள் மீது குற்றம் சுமத்துகின்றதைப் பார்க்கும்போது, ஒட்டுமொத்த மாகாண சபையும் திருடர்களின் குகை போன்றே காட்சியளிக்கின்றது. இவ்வாறு வடக்கு மாகாண சபையின் ஈ.பி.டி.பி. உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்தார்.

மாகாண சபை உறுப்பினர்களுக்கான பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டில் இடம்பெற்ற மோசடி தொடர்பிலான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த விவாதத்தில் உரையாற்றிய ஆளும் கட்சி உறுப்பினர் ச.சுகிர்தன், உட்கட்சி மோதல், ஆளும் கட்சிக்குள் குழப்பம் என்று சொல்கின்றார்கள். இது ஏன் ஏற்பட்டது? ஆரம்பத்தில், மோசடிகள் முறைகேடுகளை நாங்கள் சொன்னபோது அதை மூடி மறைக்க முற்பட்டதாலேயே இந்தக் குழப்பம் ஏற்பட்டது. இவ்வாறான விடயங்களைப் பார்த்து விட்டு பேசாமல் இருக்கக் கூடாது. நாங்கள் ஊழலுக்கு உடந்தையாக இருப்பதா? என்று கேள்வி எழுப்பினார்.

இந்தச் சபை ஊழல்களை மூடி மறைக்கவில்லை என்று அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன், சபையின் செயற்பாடுகள் மக்களுக்குத் தெரியும். பலர் மீது பல குற்றச்சாட்டுக்கள் வைக்கப்பட்டுள்ளன. நீங்கள் சொன்ன ஊழல், மோசடி குற்றச்சாட்டுக்கள் பல புஷ்வாணமாகியுள்ளன. மாகாணப் பொதுக் கணக்காய்வுக் குழுவில் பல விடயங்கள் பேசப்பட்டுள்ளன. ஆனால் எல்லா விடயங்களும் சபைக்கு வரவில்லை. உங்களின் உட்கட்சி அரசியலுக்கு அமைவாகவே விடயங்கள் சபைக்கு வந்தன, என்றார்.

இதன்போது குறுக்கிட்ட அவைத் தலைவர், அப்படி இல்லை என்று கூறினார்.

'மாவோசேதுங் சொன்னது ஞாபகமாக இருக்கின்றது. நாடாளுமன்றம் திருடர்களின் குகை. வடக்கு மாகாண சபையை நோக்குகின்றபோது இங்கே ஒவ்வொருவரும் ஒவ்வொருவர் மீது குற்றம் சுமத்துகின்றபோது ஒட்டுமொத்த மாகாண சபையும் திருடர்களின் குகை போன்று காட்சியளிக்கின்றது' என்றார் தவநாதன். (5.26)

### ஊழல் மோசடிகளை

# தேசியத்தின் பெயரால் வெள்ளையடிக்கிறார்கள்

## சாடுகிறார் சயந்தன்

யாழ்ப்பாணம், ஒக். 5

ஊழல் மோசடி, அதிகார முறைகேடு, செயல்திறனின்மை, தன்முரண்பாடு இவையெல்லாம் வெளிப்படத் தொடங்குகின்றபோது எல்லோரும் கையில் எடுக்கின்ற ஆயுதம் தேசியம். நாளைக்கு தேசியத்தின் பெயரால் இவை வெள்ளையடிப்புச் செய்யப்பட்டுவிடக்கூடாது. இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், மூக்குக் கண்ணாடி வழங்கலில் இடம்பெற்ற ஊழல் மோசடி தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

எதிர்க்கட்சி செய்திருக்கவேண்டிய வேலையை ஆளும் கட்சியாக இருந்து, எதிர்ப்பு மத்தியில் இவ்வாறான ஊழல்கள், மோசடிகள், அதிகார முறைகேடுகள் வெளிக்கொண்டு வந்துள்ளோம். நாங்கள் இவற்றை வெளிக்கொண்டு வரவர எல்லாத்துக்கும் கூட்டுப் பொறுப்புச் சொல்ல வேண்டியவர் 'ஹீரோ' ஆகிக்கொண்டிருக்கின்றார். நாளைக்கு இந்த விடயத்திலும், அவர் முதலமைச்சருடன் சேர்ந்து நின்று ஆதரவளித்தபடியால்தான் குற்றம் சுமத்தப்படுகின்றது என்று வெள்ளையடிப்பும் நடக்கக் கூடும். அதில் கவனமாக இருக்கவேண்டும். ஏனென்றால் ஏதோ ஒரு தீர்மானத்தையோ, மேடைப் பேச்சையோ பேசிவிட்டு அவர்கள் இவற்றையெல்லாம் மறைத்து 'ஸ்கோர்' பண்ணிவிட்டுச் சென்று விடுவார்கள். அதுதான் நடக்கின்றது. அந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தபடியால்தான் இப்படி எதிர்கின்றார்கள் என்று சொல்லக் கூடும்.

உண்மையில் இப்படியாக ஊழல் மோசடி, அதிகார முறைகேடு, செயல்திறனின்மை, தன்முரண்பாடு இவையெல்லாம் வெளிப்படத் தொடங்குகின்றபோது எல்லோரும் கையில் எடுக்கின்ற ஆயுதம் தேசியம். நாளைக்கு தேசியத்தின் பெயரால் இவை வெள்ளையடிப்புச் செய்யப்பட்டு விடக்கூடாது, என்றார்.

இதன்போது குறுக்கிட்ட அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், இது தேசியமல்ல, தமிழ்த் தேசியம் என்றார்.

மீண்டும் பேசிய சயந்தன், ஏனென்றால் தமிழ்த் தேசியம் என்ற வார்த்தையை இந்தச் சந்தர்ப்பத்தில் பயன்படுத்த எனக்கு விருப்பமில்லை. தமிழ்த் தேசியம் என்ற விடயத்தை ஒப்பிட்டுப் பேச விருப்பமில்லை. தமிழ்த் தேசியம் புனிதமானது. ஆனால் போலித் தேசியவாதிகளான இவர்களின் கைகளில் சிக்கி தமிழ்த் தேசியம் படுகின்றபாடு. தமிழ்த் தேசியமே வேண்டாம் என்ற நிலைக்கு மக்களைத் தள்ளிவிடக் கூடும்.

தமிழ்த் தேசியத்தைப் பற்றி பேசுவதற்கு இவர்களுக்கு என்ன அருகதை உண்டு என்று ஒருவர் பேசியிருக்கின்றார்.

எனது பெயர் குறித்துப் பேசியிருக்கின்றார். அவருக்கு நான் பதில் சொல்ல விரும்புகின்றேன். அவரது இயக்கம், சுட்டுக்கொன்ற தமிழ் இளைஞர்களின் சடலங்களை சாவகச்சேரி சவச்சாலையில் ஒவ்வொன்றொவன்றாக எண்ணியவன் என்ற பெயரில் எனக்குத் தமிழ்த் தேசியம் பற்றிப் பேச அருகதை இருக்கின்றது என்றார். ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஸ் பிரேமசந்திரன், அண்மையில் பத்திரிகையாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோது, சயந்தனுக்கு தமிழ்த் தேசியம் பற்றிக் கதைக்க என்ன அருகதை இருக்கின்றது என்று கேள்வி எழுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5.26)

# புத்தளம் மக்களுக்கு ஆதரவு தெரிவித்த வடக்கு மாகாணசபை

யாழ்ப்பாணம், ஒக். 5

புத்தளத்தில் வெளிமாவட்டக் குப்பைகளைக் கொட்டும் நகர அபிவிருத்தி அமைச்சின் தீர்மானம் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும் என்று வடக்கு மாகாண சபையில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணசபையின் நேற்றைய அமர்வில், அய்யூப் அஸ்மின் தீர்மான வரைவை முன்வைத்தார்.

அவர் தனது வரைவை முன்வைத்து கூறியதாவது, வடக்கு மாகாண சபையானது இலங்கையில் தமிழ்பேசும் மக்களின் விவகாரங்களிலும், சிறுபான்மை மக்களின் விவகாரங்களிலும், மக்கள் நலன்சார்ந்த விவகாரங்களிலும் அக்கறையோடு குரல் கொடுத்து வருகின்றது. அந்தவகையில் புத்தளம் மாவட்டத்து மக்கள் அல்லது குறிப்பாக புத்தளத்து நகரை அண்மித்து வசிக்கின்ற மக்கள் தற்போது ஒரு புதிய பிரச்சினையை எதிர்நோக்கியிருக்கின்றார்கள். கொழும்பு மற்றும் ஏனைய பிரதேசங்களில் இருந்து கொண்டு வரப்படுகின்ற குப்பை கூழங்களை புத்தளத்தின் அறுவாக்காடு என்கின்ற சிமெந்துத் தொழிற்சாலைக்காக சுண்ணக்கற்கள் அகழ்வு செய்யப்பட்ட இடத்தில் கொட்டுவதற்கான நடவடிக்கைகளை நகர அபிவிருத்தித் திட்டமிடல் அமைச்சு முன்னெடுத்துவருகின்றது. இது குறித்த பிரதேசத்தின் மக்களின் சுகாதாரமான வாழ்வைக் கேள்விக்குள்ளக்குவதோடு பல்வேறு சூழலியல் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளைத் தோற்றுவிக்க வல்லது.

ஏற்கெனவே அனல் மின்சார உற்பத்தி நிலையத்தினூடாகவும், சிமெந்துத் தொழிற்சாலையூடாகவும் இந்தப் பிரதேச மக்கள் பல்வேறு சூழலியல் மற்றும் சுகாதார ரீதியான சவால்களை எதிர்நோக்கி வருகின்றார்கள். இந்தத் திட்டத்தினை அந்தப் பிரதேச மக்கள் முழுமையாக எதிர்க்கின்றார்கள் . சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களும், குறிப்பாக வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து புத்தளத்திலே குடியேறியிருக்கின்ற, மக்களும் ஒன்றிணைந்து இதற்கான எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள்.

இந்தத் திட்டம் குறித்து நகரத் திட்டமிடல் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு மீளாய்வு செய்து, அந்த மக்களின் கருத்துக்களுக்கு அமைவாக குறித்த திட்டத்தைக் கைவிடல் அவசியம் என்று இந்தச் சபை வடக்கு மக்களின் சார்பாக கோரிக்கை விடுக்கின்றது என்றார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஜனோபர் ஜவாஹிர் யாஸீன் வழிமொழிந்ததுடன், புத்தளம் நகரில் கொழும்பு நகர் குப்பைகள் மாத்திரமல்ல, சிங்கப்பூரின் மருத்துவக் கழிவுகளும் கொட்டப்பட இருக்கின்றன என்றும் குறிப்பிட்டார். (5.26)

## சிமெந்து விற்பனை மோசடி

# கூட்டுறவு அமைச்சின் செயலர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை

### சபையை அவமதித்து திசை திருப்ப முயன்றார்கள் எனத் தெரிவித்து ஆளுநருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஓக். 5

வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சின் செயலர் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஆகியோர் வடக்கு மாகாண சபையை வேண்டுமென்றே திசை திருப்பும் வகையிலும் அவமதிக்கும் வகையிலும் அதன் சிறப்புரிமையை மீறும் வகையிலும் செயற்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டியுள்ள வடக்கு மாகாண சபை, அவர்களுக்கு எதிராக துரித நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநரைக் கோரியுள்ளது.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத்தினால் மேற்கொள்ளப்பட்ட சிமெந்து விற்பனை மோசடி தொடர்பில் பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழுவில் நேற்றுமுன்தினம் ஆராயப்பட்ட விடயம், சபைக்கு அவைத் தலைவரால் சமர்பிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது, மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூகசேவைகள், கூட்டுறவு, உணவுவழங்கலும் விநியோகமும், தொழிற்றுறையும், தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் அமைச்சின் செயலரின் 26ஆம் திகதிய அறிக்கை சார்பாக,

அறிக்கையின் பந்தி 1 இல், 'கிராமிய வங்கிச் சமாசத்தின் துணைவிதியானது இன்று வரை திருத்தப்படவில்லை எனவும் 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் பதியப்பட்டது எனும் கூற்றுத்தவறாகும்' எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. கருத்துப்பிறழ்வு ஒரு புறமிருக்க இந்தச் சொற்பிரயோகம் அவமரியாதையானதும் சபையினது சிறப்புரிமையை மீறுவதுமாகும்.

கடந்த 2016ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26ஆம் திகதிய எமது கடிதத்தில் கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம் பதிவு செய்யப்பட்ட காலப்பகுதியிலிருந்து நாளிதுவரை திருத்தப்பட்ட கிராமிய வங்கிகளின் சமாசத்தினது உபவிதிகளின் பிரதி ஒன்று கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிடம் கோரப்பட்டது. இதற்கமைவாக அவர்களால் அனுப்பிவைக்கப்பட்ட பிரதியிலேயே 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் பதியப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மீண்டும் கடந்த முதலாம் திகதிய கடித மூலம் நாம் நாம் கோரிப்பெற்றதுணைவிதியிலும் ஒரே மாதிரியான திருத்தம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்தத் திருத்தத்தின் அடிப்படையிலேயே எமது கருத்து அமைந்தது. அது தவறானது என்று செயலர் இப்பொழுது கூறுகின்றார்.

**சபையின் சிறப்புரிமை மீறல்**

உபவிதித் திருத்தம் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் பணிப்புரைக்கு மாறானது என்று நாம் பல சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டிய பொழுது எதுவும் கூறாத செயலரும், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் திருத்தம் மேற்கொள்ள நடவடிக்கையை மேற்கொண்டு உரிய பிரதிகளில் திருத்த விடயம் உட்புகுத்தப்பட்டு கூட்டுறவு அபிவிருத்தி உதவிஆணையாளருக்குச் சமர்ப்பித்தபோதும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் அந்தத் திருத்தம் அனுமதிக்கப்பட்டு கையொப்பம் இடப்பட்டு திருத்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக எவ்வித ஆவணமும் இல்லை எனத் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கருத்தை ஏன் இதற்கு முன்னர் தெரிவிக்கவில்லை என்பதற்கு மேலாக துணைவிதியில் இந்த மாற்றம் இடம்பெற்றிருப்பதை நாம் காணலாம். எனவே இந்த விடயத்தில் இவர்கள் இருவரும் மாகாண சபையை தவறாக வழிநடாத்த முனைந்திருப்பது தெளிவு. இது இந்தச் சபையின் சிறப்புரிமையை மீறும் செயலாகும்.

**அலட்சியப் போக்கு**

ஆரம்பப் புலனாய்வு தொடர்பான சட்டஏற்பாடுகளைக் கவனத்திற்கெடுத்துச் செயற்பட வேண்டியவர்கள் அமைச்சின் செயலரும், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும். அதைவிடுத்து பொதுச்சபை மீதான நடவடிக்கை தொடர்பான அதிகாரத்தை அக்குழு கொண்டிருக்கவில்லை என எமக்குக் கூறுவது அலட்சியப்போக்கும், பொறுப்பற்றதும், சபையை அவமதிக்கும் செயலுமாகும். பொதுச்சபைக்கு எதிரான நடவடிக்கை பற்றி நாம் எதுவும் கூறியிருக்கவில்லை. இயக்குனர் சபை பற்றியே குறிப்பிட்டு வந்துள்ளோம். வருமதிகள் தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்துவிட்டோம் என்று கூறி அமைதியடையும் இவர்கள் இந்த வழக்கில் காசோலைத் திரும்பல்கள் தொடர்பாக சிறுகுற்றப் பொலிஸ் பிரிவின் மூலமாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அவைதொடர்ந்து இழுபறிப்பட்டுக் கொண்டு போகும் என்பது தெரிந்தே இந்த மோசடி செய்யப்பட்டிருக்கின்றது. இந்த வழக்குகளில் சமாசம் சார்பில் சட்டவாளர்களைவைத்து சரியான முறையில் நீதிமன்றத் துக்குத் தெரியப்படுத்தப்பட்டதா? என்பது பற்றிய தெளிவு எமக்குத் தரப்படவில்லை. பந்தி 2 இல் கூட்டுறவு அபிவிருத்திச் சங்கம் ஒன்றின் பொதுச் சபை, இயக்குனர் சபை, சங்கப் பணியாளர் மீதான விசாரணை தொடர்பில் கூட்டுறவுச் சட்டவிதி 46(1) இன் பிரகாரம் அமைச்சரால் அதிகாரதத்துவம் வழங்கப்பட்ட அதிகாரியால் 46(1) விசாரணைப் பொருட்டு நியமிக்கப்படும் அலுவலர்களாலேயே அறிக்கையிட முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அமைச்சருக்கு இவ் விடயத்தினை முன்னளித்து அனுமதியினைப் பெறவேண்டியது அமைச்சின் செயலரினதும் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினதும் கடமையே.

**பக்கச் சார்பானது**

நியமிக்கப்பட்ட ஆரம்பப் புலனாய்வாளர்கள் மூவரில் த.அருங்கலைச்செல்வன் மற்றும் வி.ஜெயந்தன் ஆகியோர் கூட்டுறவு அமைச்சு மற்றும் திணைக்களத்தினைச் சார்ந்தவராக உள்ளனர். எனவே, பக்கச்சார்பற்ற ஒரு ஆரம்பப் புலனாய்வு அறிக்கையை எதிர்பார்க்க முடியாது.

முறைப்பாட்டுக் குழுவினதும், வடமாகாண சபையினதும் கரிசனை அதன் நிர்வாக காலத்தில் ஏற்பட்ட ஊழல் மோசடி தொடர்பாகவே என்பது 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்திலிருந்து சுட்டிக்காட்டப்பட்டு வந்துள்ளது. ஆனால் இவர்களும், இவர்களால் நியமிக்கப்பட்ட குழுவும் விடயத்தைத் திசை திருப்பும் வகையிலேயே அறிக்கைகளைச் சமர்ப்பித்து வந்துள்ளனர்.

எமது கடந்த மாதம் 4ஆம் திகதிய கடிதத்தில் 8 ஆவது பந்தியில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

'சிமெந்து விற்பனையில் இடம்பெற்ற மோசடி தொடர்பாக தங்களிடம் இருந்து அறிக்கை எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்விடயத்துடன் மேலும் பலவிடயங்களை இணைத்து சிமெந்து விற்பனையில் இடம்பெற்ற மோசடியினை திசைதிருப்பாது தெளிவான அறிக்கை ஒன்று தங்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றது'

**பிரமுக வங்கி விவகாரம்**

பந்தி 4 இல் 'நீண்ட வரலாற்றைக் கொண்டிராததுடன், வடக்கு மாகாணத்தில் எந்தக் கிளையையும் கொண்டிராத பிரமுக வங்கியில் வைப்புச் செய்யப்பட்டமை வங்கிச் செயற்பாட்டில் உசிதமாக அமையவில்லை என்று ஆரம்பப் புலனாய்வாளர்களால் தெரிவிக்கப்பட்டமை மிகவும் சரியானதே' எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் பொருத்தமான வங்கியை இனங்கண்டு அங்கீகரிக்க வேண்டியது திணைக்களத்தின் பொறுப்பாகும்'

மேலும் வங்கிகள் யாழ்ப்பாணத்தில் கிளை வைத்திருக்கின்றனவா என பரிசீலித்திருக்க வேண்டும் எனின் கூட்டுறவுஅபிவிருத்தி ஆணையாளரின் 1999ஆம் ஆண்டு கடிதத்தில் அவ்வாறு கூறியிருக்கவேண்டும்.

எனினும் இவரது மேற்குறிப்பிட்ட கடிதத்தில் கூட வேறுவிடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதுபற்றிநாம் அதிகம் அலட்டிக் கொள்ளவிரும்பவில்லை. ஏனெனில் இவற்றுக்கெல்லாம் இலங்கை மத்தியவ ங்கியும், கூட்டுறவுத் திணைக்களமுமே பொறுப்பு. அவைபற்றி தேவைப்படின் வேறாகக் கையாளப்படலாம்.

மேலும் பிரமுக வங்கியில் முதலீடு செய்யப்படும்போது எடுக்கப்பட்ட எல்லா இயக்குனர் சபைத் தீர்மானத்தின் போதும் கூட்டுறவுத் திணைக்களத்தினர் பிரசன்னமாகியிருந்தனர்.

அறிக்கையில் இணைக்கப்பட்டிருந்த கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின், கடந்த மாதம் 26ஆம் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழுவினால் கடந்த 2015ஆம் ஆண்டு கடிதம் மூலம் முறைப்பாடு கிடைக்கப்பெற்றதனைத் தொடர்ந்து கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 28ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது எனவும், இதற்கு முன்னரேயே தனியாருடனான சிமெந்து வியாபாரம் மேற்கொண்ட வகையில் காசோலை திரும்பியதனை வைத்து யாழ். மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத்தினால் சி. ஜெயக்குமார் என்பவருக்கு எதிராக 2013ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதியும் ரஜீவன், ஜெசிந்தா ஆகியோருக்கு எதிராக 2013ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 24ஆம் திகதியும் வழக்குத் தாக்கல் செய்து வழக்கு இடம்பெற்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது, எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பொறுப்பற்ற செயல்**

2013ஆம் ஆண்டிலேயே இவ் விடயம் தொடர்பில் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அறிந்திருந்த போதும் அதற்குப் பின்னரான காலப்பகுதியில் தனியாருக்கான சிமெந்து விற்பனை இடம்பெற அனுமதித்தமை பொறுப்பற்ற செயலாகும்.

ஒரு கூட்டுறவுச் சங்கமானது வங்கியொன்றிலிடும் மேன்மிகைநிதியின் அளவு மற்றும் வைப்பிடும் வங்கி என்பன தொடர்பாக இயக்குனர் சபைத் தீர்மானத்துடன் அச்சங்கத்தின் பொதுச்சபையே தீர்மானிக்க வேண்டும். எனவும் இவ்விடயம் தொடர்பில் கூட்டுறவுச் சங்கத்தின் சுயாதீனத்தில் திணைக்களம் அநாவசியமாகத் தலையீடு செய்யாது எனக் கூறுவது பொறுப்பற்றது. மேலும் வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் கடிதம் மூலம் ஒருவித ஆலோசனை மாத்திரமே சமாசத்துக்கு வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கத்தினை வழிநடாத்த வேண்டியது கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் கடமை. அத்துடன், வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் வழங்கப்பட்டது ஆலோசனை அல்ல அறிவுறுத்தலே. ஆலோசனை என்றாலும் அது வலுவுடையதே.

**மோசடிக்கு உடந்தை**

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் கடந்த மாதம் 26ஆம் திகதிய கடிதத்தில் 'சங்கங்கள் தொடர்பில் ஏதேனும் முறைப்பாடுகள் கிடைக்கும் பட்சத்திலேயே ஆணையாளர் தனது அதிகாரத்தின் பிரகாரம் தொடர் நடவடிக்கை மேற்கொள்கின்றார்' என்ற கூற்றின் படிபார்த்தாலும் கூட 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதிய முறைப்பாட்டுக்குழுவின் கடிதத்திற்குப் பின்பும் இடம்பெற்ற முறைகேடான விற்பனைக்கு என்ன பதில்?

மேலும் துணைவிதி திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை என்ற நிலையை ஏற்றுக் கொள்வதாயின் நிலைமை இன்னும் மோசமானதே. அப்படியாயின் மிகமோசமான மோசடியை இயக்குனர் சபையும் பணியாளர்களும் மேற்கொண்ட போது, திணைக்களத்தினர் வாளாவிருந்ததாகவே கருதமுடியும். இந்தத் தவறுகளுக்கு சில உயர் அதிகாரிகளே பொறுப்பு. முழுத் திணைக்களத்தையும் குற்றம் சாட்டுவதாக அமையாது - என்றார். • (5.26)

# பகல் கொள்ளையை நியாயப்படுத்தும் வடக்குக் கூட்டுறவுத் திணைக்களம்

### சாடிய சபை உறுப்பினர்கள்


யாழ்ப்பாணம், ஓக். 5

சிமெந்து விற்பனையில் இடம்பெற்ற மோசடியை நியாயப்படுத்தும் வகையில் வடக்கு மாகாண கூட்டுறவுத் திணைக்களம் செயற்படுகின்றது. பகல் கொள்ளையை மூடி மறைக்கின்றார்கள். இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் குற்றம் சுமத்தினர்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய 133ஆவது அமர்வில், யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசத்தினால் மேற்கொள்ளப்பட்ட சிமெந்து விற்பனை மோசடி தொடர்பில் பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழுவின் அறிக்கை அவைத் தலைவரால் சபையில் சமர்பிக்கப்பட்டது. இதன் பின்னர் இடம்பெற்ற விவாதத்திலேயே உறுப்பினர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூகசேவைகள், கூட்டுறவு, உணவுவழங்கலும் விநியோகமும், தொழிற்றுறையும், தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன், இந்த விடயத்தில் தொடர்புடைய அதிகாரிகளிடம் விளக்கம் கேட்கப்பட்ட பின்னர், நடவடிக்கைக்குப் பரிந்துரைக்கலாம் என்று குறிப்பிட்டார். இதே கருத்தை வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரனும் முன்வைத்தார். பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழுவிலாவது அழைத்து அவர்களின் விளக்கத்தைக் கேட்டிருக்கலாம் என்று அவர் குறிப்பிட்;டார். இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண ஆளும் கட்சி உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, தேவையில்லாத விடயங்களைக் கூறி விடயத்தை திசை திருப்ப வேண்டாம் - என்றார்.

ஆளும் கட்சி உறுப்பினர் ப.அரியரட்ணம், இந்த விடயம் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட விசாரணைக் குழுவின் உறுப்பினர் என்ற அடிப்படையில் எனது கருத்தைத் தெரிவிக்கின்றேன். இந்த விசாரணையை முன்னெடுப்பதற்குக் கூட்டுறவுத் திணைக்களம் ஒத்துழைப்பு வழங்கவில்லை. முட்டுக்கட்டை போட்டார்கள். பகல் கொள்ளையை நியாப்படுத்தவே கூட்டுறவுத் திணைக்களம் முயல்கின்றது - என்றார். (5.26)



அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் கட்டடத் தொகுதி திறப்பு விழா கல்லூரி முதல்வர் அருட்சகோதரி மரிய ஜீவந்தி தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி வேலுசாமி இராதாகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராக வடக்குமாகாணகல்விபண்பாட்டுஅலுவல்கள்விளையாட்டுத்துறைமற்றும்இளைஞர்விவகாரஅமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம422)

# வறுமையின் பிடியில் உள்ள குடும்பங்களுக்கு உதவிகள்!

கொடிகாமம், ஒக். 5

உறவுகளுக்குக்கரம்கொடுப்போம்அமைப்பின்ஊடாகபுலம்பெயர்உறவுகளின்நிதியிலிருந்துயாழ்ப்பாணம்மாவட்ட அமைப்பாளர் சிங்கபாகு சிவகுமார் நான்கு குடும்பங்களுக்கு அண்மையில் வாழ்வாதார உதவிகளை வழங்கினார்.

சிறுப்பிட்டி மேற்கு நீர்வேலியைச் சேர்ந்த குடும்பமொன்றுக்கு குடிநீர் தொட்டியும்கிணறும்அமைக்க60ஆயிரம்ரூபாவும், அச்செழுதேவிபுரம் பெண் தலைமைத்துவ குடும்பத்துக்கு 45 ஆயிரம் ரூபா பெறுமதியான 3 நல்லின ஆடுகளும் சிறுப்பிட்டி மேற்கைச் சேர்ந்த கண்பார்வையற்ற நபரொருவருக்கு48ஆயிரம்ரூபாபெறுமதியான3நல்லின ஆடுகளும் வழங்கப்பட்டன.

தாய் தந்தையர் இல்லாத நிலையில் தனது ஆறு சகோதரர்களையும் பொறுப்பெடுத்துவளர்த்துவரும்சங்கத்தார்வயல்இயக்கச்சியைச்சேர்ந்த குணரத்தினம் சாய்லா என்பவருக்கு வாழ்வாதார உதவியாக அவரின் வேண்டுகோளிற்கு இணங்க கோழிக்கூடு அமைப்பதற்கான நிதி வழங்கப்பட்டது. (ம-159)



# ஆசிரியர்தின கொண்டாட்டங்கள்

**கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.**

கைதடிமுத்துக்குமாரசுவாமிமகாவித்தியாலயத்தின்ஆசிரியர்தினவிழாஇன்று வெள்ளிக்கிழமைகாலை8.30மணிக்கு பாடசாலையின் தலைமை மண்டபத்தில் மாணவன்மா.யதுசிகன்தலைமையில் நடைபெறவுள்ளது. முதன்மை விருந்தினராகயாழ்ப்பாணக்கல்விவலயஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் வரதராஜமூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார்.

**புனித தெரேசாள் மகளிர் கல்லூரி**

அச்சுவேலிபுனிததெரேசாள்மகளிர்கல்லூரி ஆசிரியர் தின நிகழ்வு இன்று காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. மாணவ முதல்வர் தலைமையில்நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தி னராக நெல்லியடி மத்திய கல்லூரி முன்னாள் அதிபரும் கல்விமாணி கற்கை நெறியின் நெல்லியடி இணைப்பாளருமான எஸ்.சேதுராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

**போக்கட்டி அ.த.க.பா.**

கொடிகாமம் போக்கட்டி அ.த.க.பாட சாலையின் ஆசிரியர் தின நிகழ்வுகள் பாடசாலை மண்டபத்தில் இன்று இடம்பெறவுள்ளன. பாடசாலைமுதல்வர்தி.அபராஜிதன் தலைமையில் காலை 10 மணி முதல் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஓய்வுநிலைபிரதிக்கல்விப்பணிப்பாளர்(நிர்வாகம் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி யும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கணிதபாடஉதவிக்கல்விப்பணிப்பாளர் வி.மதிதரனும்கலந்துகொள்ளவுள்ளனர்.

**வரணி மத்திய கல்லூரி**

வரணி மத்திய கல்லூரி உயர்தர மாணவர்மன்றத்தின்ஏற்பாட்டில்ஆசிரியதின நிகழ்வுகள் இன்று காலை 10.30 மணிக்குகல்லூரியின்முதன்மைமண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

மன்றத்தலைவர்க.நிருஷன்தலைமையில் நடைபெறும் நிக்ழ்வுகளுக்கு முதன்மைவிருந்தினராககல்லூரியின் பழைய மாணவரும்யாழ்ப்பாணப்பல்கலைக்கழக பொருளியற்றுறை விரிவுரையாளருமான கலாநிதிசெ.சந்திரசேகரம் சிறப்பு விருந்தினர்களாக மருதங்கேணிபிரதேசசெயலகபுள்ளிவிபரஅலுவலர் வ.ஜீவாகரன், கல்லூரி முதல்வர் ப.செல்வவிநாயகம் ஆகியோர் கலந்து கொள்வர்.

**இலங்கைகல்விசமூகசம்மேளனம்**

ஊவா மாகாண இலங்கை கல்வி சமூக சம்மேளனம் பன்னாட்டு ஆசிரியர் தினத்தை நாளை கொண்டாடவுள்ளது, ஹாலி-எலபொதுவிளையாட்டுமைதானத்தில் காலை 9 மணிமுதல் மாலை 4 மணி வரை போட்டிகள் நடைபெற்று அதைத் தொடர்ந்து மதிப்புறுத்தல் நிகழ்வுகள் நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-422,9,159,288)

# வாய்க்காலில் வீழ்ந்து விபத்துக்குள்ளானார் வயோதிபப் பெண்

யாழ்ப்பாணம், ஒக். 5

கழிவுநீர் வாய்க்காலில் வயோதிப பெண் விழுந்து விபத்துக்கு உள்ளானார். நெல்லியடி கொமர்சியல் வங்கிக்கு முன்பாக நேற்று இரவு 9 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. குறித்த பகுதியில் உள்ள வாய்க்கால்கள் மழைநீர் தேங்காது நிற்பதற்காக அண்மையில் துப்புரவு செய்யப்பட்டன. துப்புரவுக்குப் பின்னர் மீண்டும் வாய்க்காலின் மூடி மூடப்படாமல் விடப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது. இதுவே வயோதிபப் பெண்விபத்துக்குஉள்ளாகக்காரணமாகஅமைந்தது. (ம-422)

## மாநகர சபை உறுப்புரிமை தொடர்பில்

# குகேந்திரன்மீதானவழக்கின் தீர்ப்பு நவம்பர் 8ஆம் திகதி!

**யாழ்ப்பாணம், ஒக். 5**

**ஈ.பி.டி.பியின் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் வேலும்மயிலும் குகேந்திரன்இரட்டைப்பிரஜா உரிமைகொண்டமையினால்மாநகரசபையில் அங்கம் வகிக்க முடியாது எனத் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பு நவம்பர் மாதம் 8ஆம் திகதி வழங்கப்படும் என்று நேற்றையதினம் மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்தது.**

யாழ்ப்பாணம்மாநகரசபையில்அங்கம்வகிக்கும் ஈ.பி.டி.பி கட்சியை சேர்ந்த வேலும்மயிலும் குகேந்திரன் இரட்டைப் பிரஜா உரிமை கொண்டவர் என்ற அடிப்படையில் உள்ளூராட்சி மன்றங்களில் அங்கம் வகிக்க முடியாது என்றகாரணத்தினால்குகேந்திரனின்மாநகர சபை உறுப்புறுமை செல்லுபடியற்றது என தேர்தல்ஆணையகத்திற்குஉத்தரவிடக்கோரி தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்மாநகரசபை உறுப்பினரால்மேன்முறையீட்டுநீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கினை நேற்றையதினம் மேன்முறையீட்டு நீதிமன்றம் விசாரணைக்காக எடுத்துக்கொண்டது. இதன்போது வழக்காளர் சார்பில்அரசதலைவர்சட்டத்தரணிஎம்.ஏ.சுமந்திரன் மற்றும் நிரான் அங்கிற்றல் ஆகியோர் முன்னிலையாகினர்.

இருதரப்புவாதமும்நேற்றையதினம்நிறைவு செய்தநிலையில்எழுத்துமூலமான அறிக்கையிடலுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இதன் அடிப்படையில்வழக்காளர்தரப்புசட்டத்தரணிகள் தமது எழுத்துமூல அறிக்கையிடலை ஒக்டோபர் மாதம் 12ஆம் திகதிக்கு முன்பாக முன்வைக்க வேண்டும் எனக்கோரப்பட்ட நிலையில் எதிர்மனுதாரர் சார்பில் எழுத்துமூல அறிக்கையிடல் முன்வைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. இவற்றினை ஆராய்ந்தமன்றுகுறித்தவழக்கின்தீர்ப்புநவம்பர் மாதம் 8ஆம் திகதி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-105)

# முதியோர் மதிப்பளிப்பு

தென்மராட்சி, ஒக். 5

பன்னாட்டுமுதியோர்வாரத்தையொட்டி முதியோர்களை மதிப்பளிக்கும் வகையில் ஓய்வூதியர்களுக்கான, ஒக்டோபர் மாத ஓய்வூதியம்இன்றுவழங்கப்படவுள்ளதெனத்தெரிவிக்கப்பட்டது. ஓய்வூதியம்ஒவ்வொருமாதத்தினதும்இரண்டாவதுவியாழக்கிழமைஅல்லதுபத்தாம்திகதிக்கு முன்னர் வழங்க வேண்டுமென ஓய்வூதியத் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில்முதியோர்வாரத்தையொட்டிஒக்டோபர்மாதஓய்வூதியம் இன்று வழங்கப்படவுள்ளதென தெரிவிக்கப்பட்டது. (ம-9)




யாழ்ப்பாணம் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் இரண்டாம்தரத்தில்கல்வி கற்கும் மாணவி சர்மிஸ்டா சிவராமசர்மா ரஷ்யாவின் செயின்ட் பீற்றர்ஸ்பேர்க் நகரில்அண்மையில்நடைபெற்ற 'யு.சி.எம்.ஏ.எஸ்.' அபாக்கஸ் போட்டியில்இரண்டாவதுஇடத்தைப்பிடித்தார். (ம-8)

# வீடுகள் கையளிப்பு

கொடிகாமம், ஒக். 5

மந்துவில்கிழக்கில்வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சால்135ஆவதுமாதிரி கிராம வீட்டுத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் நாளைமறுதினம் பயனாளிகளிடம்கையளிக்கப்படவுள்ளன. வீடமைப்புமற்றும்நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிறேமதாச முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உத்தியோகபூர்வமாகபயனாளிகளிடம் வீடுகளைக் கையளிக்கவுள்ளார். (ம-159,9)

# கள்ளுவிற்பனைநிலையங்கள் திறந்திருக்கும்நேரம்அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 5

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பனை, தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச்சங்கங்களின்கள்ளுவிற்பனைநிலையங்கள் திறந்திருக்கும்நேரம்அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படிஇனிவரும் காலங்களில் காலை 8 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை அனைத்து கள் விற்பனை நிலையங்களும் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுமென பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் வ.தெய்வேந்திரம் அறிவித்தார்.

கள்ளு விற்பனை நிலையங்கள் திறந்திருக்கும் நேரத்தில் இது வரைகட்டுப்பாடுகடைப்பிடிக்கப்பட்டது. இதனால்கள்விற்பனையில்தொய்வுஏற்பட்டதைஅடுத்தேஇந்தப்புதியநடைமுறைகடந்த முதலாம் திகதி முதல் கொண்டுவரப்பட்டுள்ளது. (ம-17)

# பரு. பிரதேச சபையில் வரி மீளாய்வுப் பணிகள்

வடமராட்சி, ஒக். 5
பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட ஆதனங்களுக்கான வரி மீளாய்வு செய்யும் பணிகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டன. விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினர் மற்றும் பருத்தித்துறை பிரதேச சபை உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து இந்தப் பணியை ஆரம்பித்துள்ளனர்.

வட்டார ரீதியாக இந்தப் பணி மேற்கொள்ளப்படுகின்றது. முதலில் புலோலி அலுவலகப் பிரிவைச் சேர்ந்த வட்டாரங்களில் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. தொடர்ந்து குடத்தனை, செம்பியன்பற்று உபஅலுவலகப் பணியக வட்டாரங்களில் வரி மீள் மதிப்பீடு செய்யப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

வரி மீள் மதிப்பீடு தொடர்பில் தற்போது ஒலிபெருக்கிகள் மூலம் மக்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றது. சுமார் மூன்று மாதத்துக்குள் பருத்தித்துறை பிரதேச சபைக்கான ஆதன மீள்மதிப்பீட்டுப் பணிகள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம-173)



தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையில் யாழ்ப்பாண மாவட்ட சர்வமதப் பேரவையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தின் தற்கால அரசியல் நிலைமை மற்றும் மீள்குடியேற்ற பிரதேசங்கள் தொடர்பாகவும் யாழ்ப்பாண மாவட்ட சர்வமதப் பேரவையின் கடந்தகாலச் செயற்பாடுகள் தொடர்பாகவும் ஆராய்கின்ற கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது. (ம)

## கொழும்புத்துறையில் பொருத்தப்படுகின்றன மிகையொளி விளக்குகள்

கொழும்புத்துறை, ஒக். 5
கொழும்புத்துறையின் முக்கிய இடங்களில் மிகையொளி மின் விளக்குகள் பொருத்தப்பட்டு வருவதாக கொழும்புத்துறை வட்டார உறுப்பினரும் யாழ்ப்பாண மாநகர சபை பிரதி மேயருமான து.ஈசன் தெரிவித்தார்.

இந்தப் பகுதிகளில் இடம்பெறும் மணகடத்தல்கள் மற்றும் சந்தேகத்துக்கிடமான ஆள்நடமாட்டங்கள் என்பவற்றைக் கட்டுப்படுத்தும்பொருட்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய சில இடங்களுக்கும் மிகையொளி விளக்குகள் விரைவில் பொருத்தப்படும் என்று ஈசன் மேலும் தெரிவித்தார். (ம-135)

## சாவகச்சேரி பொது நூலகத்தின் தேசிய வாசிப்புமாத நிகழ்வுகள்

சாவகச்சேரி நகரசபையின் சாவகச்சேரி பொது நூலகத்தினர் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவில் கற்கும் (தரம் 1 - 5) மாணவர்களுக்கிடையில் சித்திரம், வாசிப்பு, கட்டுரை, பொதுஅறிவும் நுண்ணறிவும், பேச்சு ஆகிய போட்டிகளை நடத்தவுள்ளனர்.

ஐந்து பிரிவுகளாக நடத்தப்படவுள்ள போட்டிகளில் பங்குபற்றவுள்ள மாணவர்களின் (தலா ஒரு பிரிவில் 3 மாணவர் வீதம்) விபரங்களை எதிர்வரும் பத்தாம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பாடசாலைகளின் அதிபர்களுக்கு பொது நூலகத்தினர் அறிவித்துள்ளனர். (ம-9)



## மோகனதாஸ் ச.ச.நிலையத்தால் உதவியாக உலர் உணவுகள்

தென்மராட்சி, ஒக். 5
மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தால் பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய குடும்பங்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொதிகள் உதவியாக அண்மையில் வழங்கப்பட்டன.

ஐரோப்பிய ஒன்றியத்தினர் வழங்கிய நிதி உதவியில் இருந்து இந்த உலர் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. நிலையத்தலைவர் சி.செல்வராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் கலந்துகொண்டு உதவிப்பொருள்களை வழங்கினார். இவருடன் கிராம அலுவலர் சுபாசன், மட்டுவில் கிழக்கு கிராம அலுவலர் திருமதி சு.உமாயோகினி ஆகியோர் கலந்து கொண்டனர். (ம9)

## முதியோர் மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 5
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்தும் முதியோரை மதிப்பளிக்கும் நிகழ்வு நாளை நடைபெறவுள்ளது.

சந்நிதியான் ஆச்சிரமத்தில் காலை 9.30 மணி முதல் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. நல்லை ஆதீன முதல்வர் சிறீல சிறி சோமசுந்தர தேசிய ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அருளுரை வழங்குகிறார். (ம-173)

## கிரிக்கெட் வீரர்கள் மதிப்புறுத்தல்

யாழ்ப்பாணம், ஒக். 5
144ஆவது உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட தபாலகங்களின் கிரிக்கெட் வீரர்கள் பாராட்டி மதிப்புறுத்தப்பட்டனர்.

இந்த மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத் தலைமைத் தபாலகத்தில் வடக்கு மாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் திருமதி மதுமதி வசந்தகுமார் தலைமையில் இடம்பெற்றது.

கடந்த 30ஆம் திகதி நுவரெலியா மாநகர சபை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற நாட்டின் தபாலக அணிகளுக்கு இடையிலான மென்பந்து கிரிக்கெட் போட்டியில் யாழ்.மாவட்ட தபாலகங்களின் விளையாட்டு அணி சம்பியனாகியது. இதையடுத்தே இந்த மதிப்புறுத்தல் நிகழ்வு நடைபெற்றது. (ம-17)


## செபமாலை அன்னையின் வருடாந்தத் திருவிழா

கொழும்புத்துறை, ஒக். 5
கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா நடைபெற்று வருகின்றது. நாளை சனிக்கிழமை மாலை 5.30 மணிக்குத் திருச் செபமாலையுடன் நற்கருணைப் பெருவிழா இடம்பெறும்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்குத் திருவிழாக் கூட்டுத்திருப்பலி யாழ்ப்பாண மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் தலைமையில் இடம்பெற்று தேர்ப்பவனியும் ஆராதனைகளும் தொடர்ந்து இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-135)



பன்னாட்டு சிறுவர் தினத்தையொட்டி கைதடிப் பிரதேசத்தைச் சேர்ந்த கதிரவேலு ஜீவதாஸ் தம்பதியினர் தமது திருமண நாள் பரிசாக சாவகச்சேரி கோயிற்குடியிருப்புப் பகுதியில் உள்ள பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த இரு மாணவர்களுக்கு ஈருருளிகளை அண்மையில் வழங்கினர்கள். கோயிற்குடியிருப்பு சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் அலுவலகத்தில் வைத்து இந்த ஈருருளிகள் வழங்கப்பட்டன. (ம-9)



யாழ்ப்பாணம் ஆழியவளை சீ.சீ.த.க. பாடசாலை மாணவர்களின் சிறுவர் தின நிகழ்வின் அண்மையில் இடம்பெற்றன. (ம-70)



யாழ்ப்பாணம் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் சிறுவர்தின நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன. (ம-70)



யாழ்ப்பாணம் செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் சிறுவர் தின நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன. (ம-70)



டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு

## கச்சாய் அ.த.க. பாடசாலையில் துப்புரவுப் பணிகள் முன்னெடுப்பு

கொடிகாமம், ஒக். 5
நாடளாவிய ரீதியில் கடந்த வாரம் நடத்தப்பட்ட டெங்கு வாரத்தை முன்னிட்டு கச்சாய் அ.த.க பாடசாலையில் துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. கடந்த 26ஆம் திகதி இந்தத் துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர் எனப் பலரும் துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர். (ம- 9)



## ஆலயங்களுக்கான உதவிகள் வழங்கல்

முல்லைத்தீவு ,ஒக் .5

வடமாகாணசபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசாவினால் குறித்தொதுக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியிலிருந்து வவுனியா வடக்குப் பிரதேசச் செயலர் பிரிவுக்குள் உள்ளடங்கும் பரசங்குளம் ஆதிவிநாயகர் ஆலயத்துக்கு ஐம்பது ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கி சாதனம் மற்றும் ஜீவவழி மிசனறிசபை ஆலயத்துக்கு ஐம்பது ஆயிரம் ரூபாபெறுமதியான ஒலிபெருக்கி சாதனங்கள் என்பன வவுனியா வடக்குப் பிரதேசச் செயலகத்தில் வைத்து வடமாகாணசபை உறுப்பினரால் வழங்கிவைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதேசச் செயலக உத்தியோகத்தர்களும் ஆலயங்களின் தலைவர், செயலர்களும் கலந்து கொண்டனர்.

# பிரதேச செயலர் மீது குற்றச்சாட்டு ஆரம்ப கட்ட விசாரணைகள் நிறைவு

**மன்னார் ,ஒக் .5**

**மன்னார் மாவட்டத்தின் ஒரு பிரதேச செயலர் மீது பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட நிலையில், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் பணிப்பின் பேரில் ஆரம்ப விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

மன்னார். மாவட்டத்தில் உள்ள ஒரு பிரதேச செயலர் பிரிவின் செயலர் அலுவலக ஊழியர்கள் துர்நடத்தை முயற்சி, இலஞ்சம், பணியாளர் அபகீர்த்தி எனப் பலவகைக் குற்றச் சாட்டுக்களை, சக ஊழியர்கள் மாவட்டச் செயலரின் ஊடாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

அவ்வாறு கொண்டு செல்லப்பட்ட குற்றச் சாட்டுக்கள் தொடர்பில், உடன் ஆரம்பகட்ட விசாரணைகளை மேற்கொண்டு அதன் அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு அமைச்சின் செயலர் விடுத்த கோரிக்கையின் பெயரில் மாவட்டச் செயலகத்தின் மூத்த அதிகாரிகள் அடங்கிய குழுவினர் நேரில் சென்று விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் அடிப்படையில் இடம்பெற்ற விசாரணைகளில் சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்களில் , அதிகமானவை உண்மை எனக் கண்டறியப்பட்ட நிலையில், இதற்கான அறிக்கை தயாரிப்புப் பணிகள் மும்முரமாக இடம்பெற்று அதன் முழுமையான அறிக்கை தற்போது மாவட்டச் செயலரின் கவனத்துக்காகச் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

குறித்த அறிக்கை தொடர்பில் மாவட்டச் செயலரின் கவனத்தின் பின்னர் அடுத்த கட்டமாக அமைச்சின் கவனத்திற்கு அனுப்பி வைக்கப்படுமிடத்து பிரதேச செயலர் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்பட வேண்டிய நிலமையே ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேநேரம் குறித்த பிரதேச செயலர் ஏற்கனவே இரு மாவட்டங்களில் பணியாற்றிய காலத்திலும் விசாரணைக்கு உட்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கையின் காரணமாகக் குறிப்பிட்ட காலங்கள் காத்திருப்பு பட்டியலில் வைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக மன்னார் மர்வட்ட செயலர் சி.ஏ.மோகன்ராசிடம் தொடர்புகொண்டு கேட்டபோது, "குறித்த விடயம் தொடர்பில் தற்போது கவனத்தில் கொள்ளப்படுவதனால் இது தொடர்பாக கருத்து தெரிவிக்க முடியாது" எனக் குறிப்பிட்டார். (105)



## பயன்தரு மரங்கள் நட்டுவைப்பு

வவுனியா ,ஒக் .5

பாடசாலைச் சூழலைப் பசுமையாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வவுனியா திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் இரு வாரப் பயிற்சியை மேற்கொண்ட கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்களினால் பயன்தரு மரங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டு நடப்பட்டன. இந்த நிகழ்வில் கல்வியற்கல்லூரி விரிவுரையாளர் சூசைதாசன் கலந்து சிறப்பித்தார்.(222)

## சிநேக பூர்வ வலைப்பந்து போட்டி

கொடிகாமம்,ஒக்.5

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் ஆசிரியைகளுக்கும் மாணவிகளுக்குமான சிநேக பூர்வ வலைப்பந்துப் போட்டி நேற்று முன்தினம் கல்லூரியின் முதன்மை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றுள்ளது. (159)



## பன்னாட்டு முதியோர், சிறுவர் தின நிகழ்வு

வவுனியா.ஒக்.5

வவுனியா பூவரசங்குளம் மகாவித்தியாலயத்தில் பன்னாட்டு முதியோர், சிறுவர் தின நிகழ்வு நேற்று முன்தினம் கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் தர்மகடாச்சம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. முதன்மை விருந்தினராக மாவட்டச் சமூக சேவை உத்தியோகத்தர் செ.சிறிநிவாசனும் சிறப்பு விருந்தினராக ஆரம்பப் பாடசாலை அதிபர் ரவிச்சந்திரனும் கலந்து கொண்டனர்.

ஆசிரியர், மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. 8 மூத்தகுடிமக்கள் மாலை அணிவித்து மாணவர்களால் மதிப்பளிக்கப்பட்டனர். (222)



## சிறுவர், முதியோர், பெற்றோர் தின நிகழ்வு

வவுனியா.ஒக்.5

வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் சிறுவர், முதியோர், பெற்றோர் தின நிகழ்வு நேற்று முன்தினம் கல்லூரியின் அதிபர் ரம்ஸீன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வின் முதன்மை விருந்தினராக நகர சபைத்தவிசாளர் இ.கௌதமன் கலந்து கொண்டார். நகரசபை உறுப்பினர்கள் அப்துல் பாரி லறீப், மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ.சிறீநிவாஸன் ஆகியோர் மதிப்புறு விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பித்தனர்.

சிறுவர்களையும் முதியோர்களையும் ஒன்றாக இணைக்கும் வகையில் பெற்றோர் தின விழா அமைந்திருப்பதைப் பாராட்டிப்பேசிய சமூக சேவை உத்தியோகத்தர் பல பிரச்சனைகளில் இருந்து தமது மூத்தோரின் வழிகாட்டலால் முஸ்லிம் பாடசாலை மாணவர்கள் தப்பித்து வாழ்வதை சுட்டிக்காட்டி ,பிள்ளைகளை நல்லவர்களாக வளர்த்தெடுப்பதில் பாடசாலையை விடப் பெற்றோருக்கே அதிக பங்குண்டு என்பதையும் நினைவூட்டினார். விழாவில் 6 முதியவர்கள் மாலை அணிவித்து மதிப்பளிக்கப்பட்டனர். மாணவர்களின் பல்வேறு கலைநிகழ்வுகளும் நடைபெற்றன. (222)

## தொழில் வாய்ப்புப் பயிற்சி

முல்லைத்தீவு.ஒக்.5

"25 ஆயிரம் தொழில் வாய்ப்புக்கள்" எனும் தொனிப்பொருளில் தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையினால் நாடு முழுவதும் முன்னெடுக்கப்படும் சிறப்பு பயிற்சித் திட்டத்தின் ஓர் அங்கமாக முல்லைத்தீவு மாவட்ட தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் பயிலுநர்களுக்கான அடிப்படைப் பயிற்சியின் ஆரம்ப நிகழ்வு. மாவட்டமுகாமையாளர், செல்வி.சி.சிவகௌரி தலைமையில் கடந்த 1ஆம் திகதி மாங்குளம் வீதிமுள்ளியவளையில் (கொமர்சியல் வங்கிக்கு எதிரில்) அமைந்துள்ள மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்றது.

விஞ்ஞான,தொழில்நுட்ப, ஆராய்ச்சி,திறன்கள் அபிவிருத்திமற்றும்,தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சின் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவின் எண்ணக்கருவின்படி தேசிய பயிலுநர்,கைத்தொழிற்,பயிற்சி,அதிகாரசபையின் தலைவர் கலாநிதி சராங்கா அழகப்பெரும்வின் வழிகாட்டலில்இடம்பெற்றது.

இந்தநிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட உதவிமாவட்ட செயலர் செல்வி அ.லதுமீராவும் மதிப்புறுவிருந்தினராக மாவட்ட மருத்துவமனை மருத்துவர் மு.சுதர்சன் சிறப்பு விருந்தினர்களாக மின்சாரசபை மேற்பார்வையாளர் எஸ்.சயந்தன், இலங்கைப் போக்குவரத்து சபை முல்லைத்தீவு சாலை உதவிசெயற்பாட்டு முகாமையாளர் எஸ்.மோதிலால் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் இந்த நிகழ்வுக்கு தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை தலைவர் சார்பாக கிளிநொச்சி ஜேர்மன் தொழிற் பயிற்சி நிறுவனத்தின் பதிவாளர் ஏ.ஈ.அல்பிரட்,தேசிய இளைஞர் படையணியின் இணைப்பாளர், கிராம அலுவலாகள,போதனாசிரியர்கள், பயிற்சித்திட்டத்தில்இணைக்கப்பட்டுள்ள பயிலுநர்கள் அவர்களது பெற்றோர்கள் எனப்பெருமளவிலானோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் ஏ.ஈ.அல்பிரட்டினால் நைற்ரா தொடர்பாகவும் பயிற்சி திட்டங்கள் தொடர்பாகவும் முழுமையான விளக்கங்க ள் வழங்கப்பட்டதுடன் பயிலுநர்களுக்கு வழிகாட்டி நூல்களும் வழங்கிவைக்கப்பட்டன.

## சிறுவர் தின நிகழ்வும் ஈருருளி வழங்கலும்

கொடிகாமம், ஒக். 5

கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் சிறுவர் தின நிகழ்வு கடந்த திங்கட்கிழமை காலை 11 மணிக்கு மாணவி கபிலா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே. சயந்தன் கலந்து கொண்டு, போக்குவரத்து தேவையுடைய மாணவன் ஆரணிகன் என்பவருக்குத் தனது சிறப்பு நிதியிலிருந்து ஈருருளி ஒன்றைவழங்கிவைத்தார்.

தொடர்ந்து மாணவர்களின்,கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. சகல மாணவர்களுக்கும் சத்துணவும் வழங்கப்பட்டது. (159)



முல்லைத்தீவில்

# தேர்தல்ச் சட்டம் தொடர்பான விழிப்புணர்வுக் கலந்துரையாடல்



முல்லைத்தீவு ,ஒக் .5
முல்லைத்தீவு மாவட்டத்தில் தேர்தல் கண்காணிப்பாளர்கள் மற்றும் அச்சு ஊடகவியலாளர்களுக்கான தேர்தல் சட்டம்மற்றும்நடைமுறைதொடர்பான விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்ட கலந்துரையாடல் ஒன்று நேற்று முல்லைத்தீவு மாவட்டச் செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. நேற்றுக் காலை 9.30 மணிமுதல் முல்லைத்தீவு மாவட்டச் செயலக மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த செயலமர்வினை, முல்லைத்தீவு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் கா. காந்தீபன் தலைமை தாங்கி விளக்கங்களை வழங்கினார்.
குறித்த செயலமர்வில் தேர்தல் காலங்களில் கண்காணிப்பாளர்களாக செயற்படுபவர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தின் ஊடகவியலாளர்களும் கலந்துகொண்டனர்.



## கிளிநொச்சியில் விபத்து

முல்லைத்தீவு,ஒக் .5
முல்லைத்தீவு முறிகண்டிப் பகுதியல் கனரக வாகனம் ஒன்று தடம்புரண்டதில் அதன் சாரதி காயமடைந்துள்ளார். குறித்த விபத்து நேற்றுக் காலை ஏ 9 வீதியில் முறிகண்டி பிள்ளையார் ஆலயத்துக்கு அருகாமையான பகுதியில் நடைபெற்றுள்ளது.
வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த கனரகவாகனம் கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வீதியின் குறுக்காக தடம்புரண்ட வாகனத்தால் ஏ 9 வீதியூடான போக்குவரத்தில் சற்று நேரம் தடங்கல் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (110)




## போரால் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு தண்ணீர் வசதி

கிளிநொச்சி.ஒக் .5
கிளிநொச்சி புதுமுறிப்பில் வசித்துவரும் காயப்பு சதீஸ்குமார் என்ற குடும்பத்தலைவர் போரால் பாதிக்கப்பட்டு மீள்குடியேற்றப்பட்ட போது .அவரின் வீட்டுக்கிணறு இடிந்து விழும் அபாயத்தில் காணப்பட்டுள்ளதுடன், குடிதண்ணீரினை பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிரமத்தினை எதிர்கொண்டு வந்துள்ளார்கள். இன்னிலையில் 'சுவிஸ்விசன் புலம்பெயர்' அமைப்பின் நிதி உதவியுடன், கடந்த 2 ஆம் திகதி மக்கள் புனர்வாழ்வுக் கழத்தின் ஒழுங்கு படுத்தலில் அவரின் வீட்டுக்குக் குழாய்க் கிணறு ஒன்று அமைத்துத் தண்ணீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றும் பொருத்திக்கொடுக் கப்பட்டுள்ளது. (ரி3)



## வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் அறிவித்தல்

கிளிநொச்சி, ஒக் .5
வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் பார்வையற்ற பயனாளிகளின் நலன்கருதி விற்பனை செய்யப்பட்டு வந்த, அதிஸ்டலாபச் சிட்டையானது முடிவுறுத்தப்பட்டு நாளைய தினம் குலுக்கல் முறையில் அதிஸ்டசாலிகள் தெரிவு நடைபெறவிருந்தது.
எனினும் தவிர்க்கமுடியாத காரணத்தால் எதிர்வரும் 13ஆம் திகதி இல.203, ஏ-9 வீதி, பொதுச்சந்தை அருகாமை, கிளிநொச்சியில் அமைந்துள்ள, வன்னி விழிப்புலனற்றோர் சங்கக் கிளைச் செயலகத்தில், காலை 10 மணிக்கு , சமூகப் பெரியார்களின் முன்னிலையில் குலுக்கல் முறையில் அதிஸ்டசாலிகள் தெரிவுசெய்யப்படுவர் என்பதை முறைப்படி அறியத்தருகின்றோம்.
பரிசுகளானது திட்டமிட்டபடி 15.ஆம் திகதி உலக வெண்பிரம்பு பாதுகாப்பு நாளுக்கான வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் நிகழ்வில் வழங்கிவைக்கப்படும். இந்த நிகழ்வில் பொருள்களைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் எமது கிளைச் செயலகத்தில் வேலை நாள்களில் பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் அறியத்தருகிறோம். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் முத்தமிழ் விழா

கொடிகாமம், ஒக். 5
கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் முத்தமிழ் விழா நிகழ்வு நேற்றுக் காலை 9 மணிக்கு கூட்டுறவாளர் மண்டபத்தில் வித்தியாலய முதல்வர் ஜெயந்தி தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி ச.அமிர்தலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக, த.மயூரன், உதவிக் கல்விப் பணிப்பாளர் அழகியல் வலயக்கல்வி அலுவலகம் கிளிநொச்சி, அ.ரவீந்திரன், உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆரம்பக்கல்வி வலயக்கல்வி அலுவலகம், க.கிருஷ்ணமூர்த்தி, ஆசிரிய ஆலோசகர் தமிழ் வலயக்கல்வி அலுவலகம் கிளிநொச்சி, ஆகியோரும் கலந்து கொண்டனர். (159)

## விளையாட்டு கழகங்களுக்கு பரிசளிப்பு நிகழ்வு



கிளிநொச்சி.ஒக். 5
விசுவமடுப் பிரதேசத்தில் உள்ள விளையாட்டு கழகங்களின் பரிசளிப்பு நிகழ்வும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் விசுவடு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றுள்ளது.
இரவு 7 மணியளவில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 57 ஆவது படைப்பிரிவின் உதவியுடன் விசுவமடுப் பிரதேசத்தில் உள்ள 15 விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட விளையாட்டுப்போட்டியின் போது வெற்றி பெற்ற கழகங்களுக்கு நினைவுக் கேடயங்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டுள்ளது.
தெரிவு செய்யப்பட்ட ஐந்து கழகங்களுக்கு ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் படையினரால் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.
இந்த நிகழ்வில் 57 ஆவது படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் ரவிப்பிரிய மற்றும் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் ம.பிரதீபன் ஆகியோர் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கிவைத்துள்ளார்கள். (ரி3)

## சிறுவர் தின நிகழ்வுகள்

வவுனியா.ஒக். 5
கோட்டைகட்டியகுளம் மகா வித்தியாலயத்தில் கடந்த 1ஆம் திகதி சிறுவர் தின நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக, வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் க.வ.கமலேஸ்வரன், கலந்து கொண்டு பாடசாலைப் பலசாதனைகள் படைப்பதற்கு வாழ்த்துக்கள் தெரிவித்ததுடன், எதிர்வரும் மாதம் நடைபெறவுள்ள அகில இலங்கைப் பாடசாலைகள் எறிபந்தாட்டச் சங்கம் நடத்தவுள்ள போட்டியில் பங்கு கொள்ளும் அணிக்கான அன்பளிப்பாக தனது சொந்த நிதியில் 30 ஆயிரம் ரூபா தருவதாக உறுதி அளித்தார். (222)





அடிப்படை வசதிகள் இல்லாததால்

## மரத்தில் பரண் அமைத்து மகளுடன் வாழும் தந்தை!

வவுனியா, ஒக். 5
மாற்றுத் திறனாளியான தனது மகளைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாக்க வேண்டும் என்று எண்ணிய தந்தை ஒருவர், தான் வேலைசெய்யும் தோட்டத்துக்கு மேல் பரண் அமைத்து அங்கேயே மகளுடன் வாழ்ந்து வருகிறார்.
இந்தச் சம்பவத்தை அறிந்த பொலிஸார் அவருக்கு உதவி செய்துள்ளனர்.
இந்த விடயம் சமூக வலைத்தளங்களில் பரவப்பட்டு வருகிறது.
வவுனியாவை அண்டியுள்ள சிங்களப் பிரதேசமான ஹொரவப்பத்தான புளியங்கடவள எனும் இடத்தைச் சேர்ந்த குடும்பத்தலைவர் ஒருவர் வீட்டு வசதி உள்ளிட்ட எந்தவித அடிப்படை வசதிகளும் இன்றி 500 ரூபா வருமானத்துக்காக தோட்டத்தில் வேலைசெய்கிறார். அவருக்கு மனைவி இல்லை. மகள் ஒருவர். மாற்றுத் திறனாளி. அந்த மகளைக் கண்ணும் கருத்துமாகத் தன்னுடன் வளர்த்து வருகிறார். அவர் தான் வேலைசெய்யும் தோட்டத்தில் உள்ள மரம் ஒன்றில் பரண் அமைத்து அதிலேயே நீண்டகாலமாக மகளுடன் வாழ்ந்து வருகிறார்.
இந்த விடயம் ஹொரவப்பத்தான பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு எட்டியது. இதனைத்தொடர்ந்து பொலிஸ் அதிகாரிகள் வறுமையில் இருக்கும் தந்தைக்கும், பிள்ளைக்கும் உணவுப்பொருள்கள் வழங்கி உதவினர். அவர்களுக்கு வீட்டு வசதிகள் அமைத்துக் கொடுப்பதாகவும் ஹொரவப்பத்தான பொலிஸ் உயர் அதிகாரி அறிவித்துள்ளார். அதற்கான ஏற்பாடுகளையும் அவர் முன்னெடுத்து வருகிறார். பொலிஸ் அதிகாரிகளுடைய மனிதாபிமானத்தைப் பலரும் பாராட்டியுள்ளனர். (21)

# தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு ஒதுக்கியதில் 50 மில்லியன் ரூபா வந்தது

யாழ்ப்பாணம், ஒக். 5
'அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' திட்டத்தில் வடக்குப் பாடசாலைகளில் நடைபெற்று முடிந்த வேலைகளுக்கான ஒரு பகுதி நிதியாக 50 மில்லியன் கிடைத்துள்ளது. அதனால் வேலைகள் தொடர்ச்சியாக நடைபெறும் என்று மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் ஆயிரத்து 548 வேலைத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. நாடு முழுவதும் கொழும்பு கல்வி அமைச்சின் தேசிய வேலைத்திட்டமாக 'அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' செயற்றிட்டம் 2016 ஆம் ஆண்டு நாடு முழுவதும் ஆரம்பிக்கப்பட்டது. இதன் நோக்கம் நாட்டில் உள்ள பாடசாலைகள் கல்வியைச் சிறப்பாக வழங்குவதற்கு அனைத்து வளங்களும் சிறப்பாக அமைய வேண்டும். ஆகவே 2020 ஆம் ஆண்டு பாடசாலைகளில் உள்ள தேவைகள் முழுமையாக்கப்பட்டு சிறப்பாகக் கற்றல் செயற்பாடுகள் நடைபெற வேண்டும்.
இந்தத் திட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்துக்கு ஆயிரத்து 548 வேலைத்திட்டங்களுக்கு 4 ஆயிரத்து 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றின் சீரமைப்பு வேலைகள் ஆயிரத்து 19. ஆசிரியர்களுக்கான தங்குமிட அறைகள் 31. பெரும் சீரமைப்பு வேலைகள் 51. கற்றல் மற்றும் அரங்கச் செயற்பாடுகளுக்கான புதிய கட்டடத் தொகுதிகள் 247 அமைப்பதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. வேலைகள் பகுதி பகுதியாக நடைபெற்று வருகின்றன.
ஆனால் இந்த வேலைகள் கடந்த சில வாரமாக மந்த கதியிலே இடம்பெற்றன. ஒப்பந்த காரர்கள் செய்து முடித்த வேலைகளுக்கு பணம் வழங்கப்படாமையால் தான் இந்த வேலைகள் மந்தமாகின. வேலைகள் நிறைவடைந்தவுடன் கொழும்பு அமைச்சு நிதியைத் தரும். நடந்துமுடிந்த வேலைகளுக்கான நிதியைத் தருவதில் சிறிது தாமதம் ஏற்பட்டது. தற்போது நிறைவடைந்த வேலைகளுக்கான 50 மில்லியன் கிடைக்கப் பெற்றுள்ளது. ஆகவே வேலைகள் தொடர்ச்சியாக இனி நடைபெறும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4,7)



## சிங்களமொழி பாட பயிற்சிகள் பெற்றவர்களுக்குச் சான்றிதழ்

கொடிகாமம், ஒக். 5
வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் அரச பணியாளர்களுக்கான இரண்டாம் மொழி சிங்கள பாடநெறி பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த 30ஆம் திகதி நடபெற்றது. 155 ஆம் கட்டை தொண்டமான் நகர் கிளிநொச்சியில் அமைந்துள்ள வடக்கு மாகாண பயிற்சி நிலையத்தில், தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் நிகழ்வு நடத்தப்பட்டது.
நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் நிர்வாகப் பிரிவுப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.கந்ததாசன், சிறப்பு விருந்தினராக தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வடக்கு மாகாண நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி கே.யன்சியா ஆகியோர் கலந்துகொண்டனர். பயிற்சியாளர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன என்று தெரிவிக்கப்பட்டது. (4,159)

## பளை பொது மைதானத்தில் உபகரணங்கள் திருட்டு

கிளிநொச்சி, ஒக். 5
பளை பொதுவிளையாட்டு மைதானத்தில் இருந்த உடல் வலுவூட்டல் உபகரணங்கள் சில களவாடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.



கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குச் சொந்தமான பொது விளையாட்டு மைதானத்தில் வீரர்கள் உடல்வலுவூட்டலைக் கருத்திற்கொண்டு மைதான அரங்குக்கு கீழ் அறைகளில் பாவிக்கப்பட்ட நிலையில் அந்தப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன. பிரதேச சபையால் மூடப்பட்ட கட்டடத்தின்கதவுகள்உடைக்கப்பட்டேஇவைதிருடப்பட்டுள்ளன என்றும் அவை பலலட்சம் ரூபா பெறுமதியுள்ளவை என்றும் தெரிவிக்கப்படுகிறது.
பளை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக இந்த நிலையம் அமைந்துள்ளது. பொலிஸாரும் இந்த நிலையத்தைப் பாவித்து வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
"பொருள்கள் சில காணாமல் போயுள்ளன. அவை கதவு உடைக்கப்பட்டு எடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாகப் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது" என்று பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைத் தவிசாளர் சு.சுரேன் தெரிவித்தார். (4,6)

# உற்பத்தித் திறன் செயற்பாடுகள் பற்றி செயலக அலுவலர்களுக்குக் கருத்தமர்வு



தென்மராட்சி, ஒக்.5
தென்மராட்சிப் பிரதேசத்தில் உற்பத்தித் திறன் செயற்பாடுகள் தொடர்பாகப் பிரதேசசெயலக அலுவலர்களின் அறிவை அதிகரிப்பதற்கான இருநாள்கள் கொண்ட செயலமர்வு நேற்று இடம் பெற்றது.
தென்மராட்சிப் பிரதேச செயலக உற்பத்தித் திறன் அலகின் பணியாளர்களுக்கே இது நடத்தப்பட்டது.
கிராம அலுவலர்கள் 60 பேரும் பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள்60 பேரும் சமுர்த்தி அலுவலர்கள் 60 பேரும் உள்ளடங்குவர்.
பிரதேச செயலக மண்டபத்தில் ஆரம்பமான இந்தச் செயலமர்வில், பிரதேச வெளிக்கள அலுவலர்கள் உட்படச் செயலக அலுவலர்கள் 80 பேருக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். இந்த வகுதிக்குள் முதற்கட்டமா கவே 80 பேருக்கும் இது நடத்தப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது.
உற்பத்தித் திறன் திணைக்கள அலுவலர்கள் வளவாளர்களாகக் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர்.
முதல் பிரிவினருக்கான கருத்தமர்வு நேற்றும் அடுத்த பிரிவினருக்கான கருத்தரங்கு இன்றும் நடைபெறுமென்று தெரிவிக்கப்பட்டது.
இவர்கள் தமது பிரிவு கிராமங்களில் உள்ள மக்களுக்கு உற்பத்தி செயற்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (4,9)

## பனம் பழத்துக்கான சீசனில் பனாட்டுக்குப் பெரும் மவுசு

யாழ்ப்பாணம், ஒக். 5
யாழ்ப்பாணத்தில் பனம் பழம் விழும் காலம் ஆரம்பித்துள்ளதால் பனாட்டுக்கு அதிக வரவேற்புக் கிடைத்துள்ளதாக யாழ்ப்பாண பனை அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.
இது பற்றி மேலும் தெரிவித்ததாவது:
வடக்கில் தற்போது பனம் பழம் விழும் பருவம் ஆரம்பித்துள்ளது. பனம் கழியுடன் தொடர்புடைய உற்பத்தி பொருள்கள் அதிகம் விற்பனை செய்யும் நிலை காணப்படுகின்றது. பனை சார் உற்பத்தியாளர் சங்கங்கள் ஊடாகச சபை பனாட்டைக் கொள்வனவு செய்து வருகின்றது. பனம் கழியில் இருந்து தயாரிக்கக் கூடிய பொருள்கள் தொடர்பில் சங்கத்தின் அங்கத்தவர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. 40 சங்கங்கள் இவ்வாறு சபையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றின் ஊடாகத் தயாரிக்கும் பனாட்டுகளை நாம் கொள்வனவு செய்து வருகிறோம்.
மூன்று விதைகளைக் கொண்ட நான்கு பனம் பழத்தில் ஒரு கிலோ பனாட்டைப் பெற முடியும். அவற்றின் கொள்வனவு விலை 700 ரூபாவாகக் காணப்படுகின்றது. அவற்றை உரிய தரத்துடன் 900 ரூபா வரையில் உற்பத்தி நிலையங்கள் ஊடாக விற்பனை செய்ய முடிகிறது. வெயிலின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு ஒரு வாரத்துக்குள் பன்னாட்டுகளை உற்பத்தி செய்ய முடியும். ஆகவே கடந்த வருடத்தைவிட இந்த வருடம் பனாட்டின் தரம் சிறப்பாக உள்ளது. அதனைக் கொள்வனவு செய்து விற்பனை செய்து வருகிறோம். இன்று விற்பனை நிலையங்களில் உள்ள பனாட்டுகள் மறுநாள் முழுவதும் விற்பனையாகிவிடுகின்றன. இதற்கு அதிக வரவேற்புக் காணப்படுகிறது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4,7)

# வனவளத் திணைக்களத்தினர் உரிமைகோரும் நிலங்களில் எந்தவித அபிவிருத்தியும் வேண்டாம்

## திணைக்கள அதிகாரிகளுக்கு அரசதலைவர் உத்தரவு

யாழ்ப்பாணம், ஒக். 5

போருக்கு முன்னர் மக்கள் வாழ்ந்து தற்போது வனவளத்திணைக்களத்தினர் உரிமைகோரும் நிலங்களில் எந்த அபிவிருத்தியும் மேற்கொள்ள வேண்டாம் என்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன திணைக்கள அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

வடக்கு கிழக்கு மாகாண அபிவிருத்திக்கான அரசதலைவர் செயலணிக் கூட்டம் அரசதலைவர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதன் போதே மேற்படி உத்தரவைப் பிறப்பித் தார்.

கலந்துரையாடலில், "யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த ஆண்டு மீள் குடியேற்ற அமைச்சு மற்றும் தேசிய நல்லிணக்க அமைச்சுக்காக குறிப்பிட்டளவு நிதி ஒதுக்கீடு செய்தபோதும் இந்த ஆண்டு மிகச் சொற்ப நிதியே ஒதுக்கப்பட்டது.

அதனால் மீளக் குடியேறும் மக்களுக்கு அண்மையில் விடுவிக்கப்பட்ட பகுதிகளின் சீரமைப்புக்கும் நிதி இல்லை. தேசிய நல்லிணக்க அமைச்சின் கடந்த ஆண்டு ஒதுக்கீட்டின் 152 மில்லியன் ரூபாவும் மீள் குடியேற்ற அமைச்சின் 57 மில்லியன் ரூபாவும் வருமதியாகவுள்ளது. அந்தப் பணத்தை வழங்குவதன் மூலமே முன்னெடுத்த திட்டங்களை நிறைவு செய்ய முடியும்" என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

"கிளிநொச்சி மாவட்டத்தில் அதிக பாடசாலைகள் அமைப்பதற்கு அனுமதிக்கப்பட்ட நிலையில் அதன் பணிகள் இடம்பெறவில்லை. கிளிநொச்சி மாவட்டம் விவசாய மாவட்டம். ஆனால் விவசாயப் பண்ணைகள் படை வசமும், சிவில் பாதுகாப்பு படைகளிடமும் உள்ளன. மாவட்டத்தின் அபிவிருத்தியும் வேலை இல்லாப் பிரச்சினையும் நிலவும் நிலையில் அவற்றின் நிலை என்ன?

குறிப்பாக மாவட்டத்தில் 9 பாடசாலைகளின் அபிவிருத்திக்காக 215 மில்லியன் ரூபா அமைச்சால் அனுமதிக்கப்பட்ட நிலையில் அதற்கான அனுமதிக் கடிதமும் அந்தத் திட்டத்தை முன்னெடுக்குமாறும் கடிதம் அனுப்பப்பட்ட நிலையில் அதனை நடைமுறைப்படுத்த விடாது மாகாணக் கல்வி அமைச்சு தடையாகவுள்ளது" என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் சுட்டிக்காட்டினார்.

இதற்குப்பதிலளிக்கும்விதமாக "மாகாண சபை அதிகாரத்தின் கீழ் கல்வி மாகாணத்துக்குப் பகிரப்பட்ட நிலையில் கல்விக்காக ஆயிரம் மில்லியனைக் கோருகின்றோம். இருப்பினும் 200 மில்லியன் ஒதுக்கப்படுகின்றது. ஆனால் மத்தி நேரடியாகத் திட்டத்தை அனுமதித்துவிட்டு அதற்கான செலவு மதிப்பீடுகளை மட்டும் எம்மிடம் கோருகின்றனர். அந்த நிதியை எம்மிடம் அனுமதித்தால் நாமே தேவையான இடத்துக்குத் திட்டத்தை முன்னெடுப்போம்" என்று வடக்கு மாகாண தலைமைச் செயலர் அ.பத்திநாதன் கூறினார். அதனால் இருவருக்கும் இடையில் ஒரு பனிப்போரே மூண்டது.

இதேநேரம் "மூடிக் கிடக்கும் காங்கேசன்துறை சிமெந்து ஆலையை மீளத் திறக்கும் வகையில் சுண்ணக்கல்லை அங்கே அகழாது சிமெந்து துகளாக எடுத்துவந்து அதனை அரைத்துப் பொதி செய்து சந்தைப்படுத்துவதன் மூலம் அங்கே பலருக்கு வேலை வாய்ப்பை வழங்க முடியும்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கூறினார். உடனடியாகவே அதை மறுத்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், குறித்த திட்டத்துக்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்டார்.

"அந்தப் பகுதி தற்போது மக்கள் அதிகம் வாழும் பிரதேசம். இனி அங்கே சிமெந்து ஆலை உருவாக்க முயற்சிக்கக் கூடாது. ஆனால் அந்தப் பகுதியை தொழில் முயற்சி மையமாக மாற்றி அந்தப் பகுதி இளையோருக்கு வேலை வாய்ப்பை வழங்க வேண்டும்" எனக் கோரிக்கை விடுத்தார்.

"அந்தப் பிரதேசத்தை எவ்வாறு அபிவிருத்திசெய்து? அங்கே வேலைவாய்ப்பை வழங்க என்ன வழிமுறை? என்று 2010ஆம் ஆண்டில் திட்டத்தைக் கூட்டமைப்பு சமர்ப்பித்துள்ளது.

அவ்வாறு சமர்ப்பித்த திட்டம் 2015ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இவற்றின்போது பதிலளித்த அரசதலைவர். "போருக்கு முன்னர் மக்கள் வாழ்ந்து தற்போது வனவளத் திணைக்களத்தினர் உரிமைகோரும் நிலங்களில் எந்த அபிவிருத்தியையும் மேற்கொள்ள வேண்டாம். அது தொடர்பில் ஆராய்ந்து பதில் வழங்கிய பின்பே நடவடிக்கை இடம்பெறும்" -என்றார். (4.105)

---

## முந்திச் செல்ல முற்பட்ட நபர் பேருந்தில் மோதி காயம்

சாவகச்சேரி, ஒக். 5

முன்னால் சென்ற வாகனத்தை முந்த முயன்றார் என்று கூறப்படும் உந்துருளியில் பயணித்த நபர் எதிரே வந்த தனியார் பேருந்துடன் மோதியதில் காயமடைந்தார். அவர் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு மாற்றப் பட்டார்.

சம்பவம் கைதடி நுணாவிலில் நேற்று காலை இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரியைச் சேர்ந்த 33 வயதுடையவரே காயமடைந்தார். அவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு மாற்றப் பட்டார்.

சாவகச்சேரி பொலிஸார் சம்பவ இடத்தில் விசாரணை மேற்கொண்டனர். பேருந்தும் உந்துருளியும் பொலிஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளன. (4.9.159)

---

## 362 அதிபர்கள், ஆசிரியர்களுக்கு இன்று குரு பிரதீபா பிரபா விருது

யாழ்ப்பாணம், ஒக். 5

நாடு முழுவதும் இருந்து 107 அதிபர்கள் மற்றும் 255 ஆசிரியர்கள் அடங்கலாக 362 அதிபர்கள், ஆசிரியர்கள் இன்று குரு பிரதீபா பிரபா விருதைப் பெறவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த விருது வழங்கும் நிகழ்வு கொழும்பு பண்டார நாயக்கா ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தின் லோட்டஸ் கிளையில் இன்று நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

பன்னாட்டு ஆசிரியர் தினத்தை முன்னிட்டு வருடாந்தம் மத்திய கல்வி அமைச்சு அதிபர்கள் ஆசிரியர்களுக்கு மதிப்பளிக்கும் முகமாகக் குரு பிரதீபா பிரபா விருதை வழங்கிவருகின்றது.

பாடசாலை மட்டத்தில் விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டு வலய மட்டத்தில் நேர்முகத்தேர்வுகள் நடத்தப்பட்டு தெரிவு செய்யப்பட்டவர்களை மாகாண மட்டத்தில் நேர்முகத்தேர்வுக்கு உட்படுத்தி அதிபர், ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தவிருதைப் பெறுபவர்கள் தங்களுடைய ஆற்றல்கள், மாணவர்களுக்கு ஆற்றிய வெற்றிகள், அதிபர், ஆசிரியர்கள் வெளிப்படுத்தி திறன்கள் மற்றும் பெறப்பட்ட விடுமுறைகள் என்பவற்றை வெளிப்படுத்தி நேர்முகத்தேர்வுகளில் வெற்றி பெறவேண்டும். (4.72)

---

## ஒன்றரை மணித்தியாலத்தில் பறந்தன பணமும் நகைகளும்

### சங்கத்தானையில் பட்டப்பகலில் சம்பவம்

சாவகச்சேரி, ஒக். 5

வீட்டில் யாருமில்லாத நேரம் கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் பணம் மற்றும் தங்க நகைகளை எடுத்துச் சென்றுள்ளனர் என்று முறையிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் சங்கத்தானை இத்தியடி வீதியில் நேற்றுமுன்தினம் முற்பகல் 11.30 மணிக்கும் மதியம் ஒரு மணிக்குமிடையில் இடம் பெற்றுள்ளது.

வர்த்தகரான வீட்டு உரிமையாளர் காலையில் வர்த்தக நிலையம் சென்றுவிட்டார். அவரின் மனைவி பொருள்கள் வாங்கச் சந்தைக்குச் சென்றுவிட்டார். அந்தநேரம் திருட்டு இடம்பெற்றுள்ளது.



10 ஆயிரம் ரூபா பணம் மற்றும் தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன என்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (4.9)

---

## விடுதி முகாமைத்துவப் பாடசாலையை வடக்கில் அமைக்க நிதி ஒதுக்கித் தரவும்

### கொழும்பு அமைச்சரிடம் வடக்கு முதல்வர் கோரிக்கை

வடபகுதியில் விடுதி முகாமைத்துவ பாடசாலையை நிறுவுவதன் மூலம் வடக்கில் உள்ள வேலையற்ற இளையோருக்கு விடுதி முகாமைத்துவத் துறையில் சிறந்த பயிற்சிகளை வழங்கலாம். அப்படியான பாடசாலையை அமைக்க சுற்றுலாத்துறை அமைச்சர் நிதி உதவி வழங்க வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கோரியுள்ளார்.

தலைமன்னார் கடற்கரைப்பூங்கா சுற்றுலா மையம் சீரமைக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்டு நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. அதில் உரையாற்றுகையிலேயே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை சுற்றுலாத்துறை அதிகாரசபை மற்றும் மன்னார் பிரதேச சபை ஆகியவற்றின் நிதிப்பங்களிப்பில் வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சின் அனுசரணையில் இது அமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது.

முதலமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

நிதி ஒதுக்கும் பட்சத்தில் விடுதி முகாமைத்துவ பாடசாலையை அமைக்க அமைவிடம் மற்றும் நிலம் ஆகியவற்றை வழங்குவதற்கு எமது அமைச்சு தயார் நிலையில் உள்ளது. எனவே இவ்வாறான ஒரு விடுதி முகாமைத்துவ பயிற்சி நிலையத்தை உருவாக்குவதற்குரிய நிதிகளைப் பெற்றுத் தருமாறு அமைச்சரைக் கேட்டுக் கொள்கின்றேன்.

வடபகுதியில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் இலங்கை சுற்றுலாத்துறை அதிகாரசபையின் நிதிப் பங்களிப்பாக சுமார் 10 மில்லியன் ரூபாவும் மன்னார் பிரதேசசபையின் நிதிப்பங்களிப்பு ஒரு மில்லியன் ரூபாவுமாக 11 மில்லியன் ரூபா செலவில் இது அமைக்கப்பட்டது.

சுற்றுலாப் பயணிகள் ஓய்வெடுக்கக்கூடிய சிறு குடில்கள், உடை மாற்றும் அறை, குளியல் அறை, மலசலகூட வசதி என்பவற்றுடன் சேர்த்து நிரந்தர வியாபார நிலையக் கட்டடங்களும் அங்கு அமைக்கப்பட்டுள்ளன.

தலைமன்னார் கடற்கரை கிட்டத்தட்ட பாசிக்குடா கடற்பரப்பை ஒத்ததன்மைகளைக்கொண்டது. ஆழம்குறைந்ததாக அலை அலையாக வந்து சேரும் மணல் திட்டுக்களைக் கொண்ட கடலாக விளங்கு கின்றது.

இந்தக் கடற்கரைகள் நீண்டகாலம் கைவிடப்பட்டிருந்தது.

**புராதனங்கள்**

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் இருந்து இன்றுவரை நிறுவப்பட்ட புராதன சின்னங்கள், கோட்டை கொத்தளங்கள், வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆவணங்கள், இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம், பௌத்த வழிபாட்டுத் தலங்கள், அல்லிராணிக் கோட்டை, முத்தரிப்புத் துறைப் பகுதியில் எமது முன்னோர்களின் முத்துக் குளிப்பு, சங்குக் குளிப்பு தொழில்களில் ஈடுபட்டமைக்கான சான்றுகள் என பல்வேறு சான்றுகள் இங்கு காணப்படுகின்றன.

அதேபோன்று இராமபிரான் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வருவதற்கு வானரப்படைகளால் பாலம் அமைக்கப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. இவ்வாறான பாலம் இருந்தமைக்கான புவியியல் சான்றுகள் காணப்படுவதுடன் இந்தப் பாலத்தின் எச்சங்கள் மணல் திட்டுகளாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே இப்போதும் காணப்படுகின்றன. இந்தத் திட்டுகள் முதலாம் தீவு, இரண்டாம் தீவு, மூன்றாம் தீவு என்று சிறுசிறு தீவுகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அங்கு சுற்றுலாப் பயணிகள் சென்று திட்டுகளில் இறங்கி இந்தக் கடற்பரப்பின் அழகைம் சூரிய வெளிச்சம், பறவைகள் என பல்வேறு அழகான காட்சிகளையும் கண்டுகளிக்கக்கூடியதாக இருக்கின்றது.

**கடற்படையினர் நீங்க வேண்டும்**

இத் திட்டுக்களுக்குச் செல்வதற்கு கடற்படையினரின் கட்டுப்பாடுகளை நீக்கி உதவினால் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்கும். போர் முடிந்து கிட்டத்தட்ட 10 வருடங்கள் பூர்த்தியாகும் நிலையில் படையினருக்கு இனி இங்கு வேலையில்லை என்பதே எனது கருத்து.

உண்மையில் ஆராய்ந்து பார்ப்போமேயானால் இலங்கையின் வளர்ச்சி குறைவடைந்த நிலையில் இருப்பதற்கு சுற்றுலாத்துறையில் இந்த அரசு முழுமையான அக்கறையை செலுத்தாமையே காரணம். இவற்றை எல்லாம் மனதில் இருத்தி நாம் சுற்றுலாத்துறை பற்றிய திட்டங்களை வகுத்து முன்நோக்கி நகர்வோமாயின் இலங்கையும் சுற்றுலாத்துறையில் மேம்பட்ட ஒரு வளர்ச்சி பெற்ற நாடாக அமையும் - என்றார்.

சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் இமானுவேல் அமரதுங்க, மன்னார் பிரதேசசபைத் தவிசாளர், அதன் உறுப்பினர்கள், உள்ளூராட்சி ஆணையாளர் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (4)

# மைத்திரியைக் கொல்லும் தேவை ஐ.தே.கவுக்கு இல்லை

## பிரதி அமைச்சர் ஜே.சி. அலவதுவல தெரிவிப்பு

கொழும்பு, ஒக 5

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிரான சதி திட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சி சூழ்ச்சி செய்வதற்கான எந்தவொரு அவசியமும் இல்லை. அவரை அரச தலைவர் ஆக்குவதற்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்கியது ஐக்கிய தேசிய கட்சியே.

அரச தலைவருக்கு வழங்க வேண்டிய அனைத்துவித பாதுகாப்பினையும் வழங்கியுள்ளதுடன் இந்த விவகாரம் தொடர்பான விசாரணைகளும் எந்தவித தடையுமின்றி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்



உள்நாட்டலுவல்கள் பிரதி அமைச்சர் ஜே.சி. அலவதுவல தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

டொலரின் வீழ்ச்சியினால் நாட்டில் காணப்படும் பொருளாதார சிக்கலுக்கு அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சருக்கு இடையில் ஒற்றுமையின்மையே காரணம் என்று கூட்டு எதிரணி அரசின் மீது முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை வன்மையாக கண்டிக்க வேண்டும்.

கூட்டாட்சி என்றவகையில் இருகட்சி தலைவர்களும் ஒற்றுமையாகவே செயற்படுகின்றனர். என்றார்.

# இலகு தொடருந்து வீதிகளை அமைக்க முடிவு

கொழும்பு, ஒக். 5

பாதுகாப்பான போக்குவரத்துச் சேவையை முன்னெடுக்கும் நோக்கில் இலகுவான தொடருந்து வீதிகளை அமைக்க அரசு தீர்மானித்துள்ளது.

அந்தவகையில் 33 கிலோமீற்றருக்கு ராகமையில் இருந்து கிருலப்பனை வரையும், 28.3 கிலோமீற்றருக்கு களனியில் இருந்து மொரட்டுவை வரையும் மற்றும் 22.3 கிலோமீற்றருக்கு ஹூணுப்பிட்டியவில் இருந்து கொட்டாவ வரையும் இந்த இலகு தொடருந்து வீதிகள் அமைக்கப்படவுள்ளது.

பாதுகாப்பான போக்குவரத்துச் சேவையை முன்னெடுப்பதே இதன் முதற்கட்ட நோக்கம் என்றும், இதனுடாகப் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த முடியுமென மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார் . அதன் பிரகாரம் அமைச்சின் யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

# சிங்கப்பூர் ஒப்பந்தத்துக்கு எதிரான மனு ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக்.5

சிங்கப்பூர் மற்றும் இலங்கை அரசுகளுக்கிடையே கைச்சாத்திடப்பட்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தம், அரசியலமைப்பை மீறுவதாக உள்ளது என்று தீர்ப்பளிக்க கோரி உயர்நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள மனு மீதான விசாரணை எதிர்வரும் ஜனவரி மாதம் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் உட்பட எட்டு தரப்பினர் இணைந்து தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனு நேற்று சிசிர டி ஆப்ரூ, நலின் பெரேரா மற்றும் முர்து பெர்னாண்டோ ஆகியோர் உள்ளடக்கிய நீதியரசர்கள் முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. பிரதிவாதி சார்பாக நீதிமன்றில் முன்னிலையாகும் மேலதிக சொலிசிஸ்டர் ஜெனரல் சஞ்சய ராஜரத்தினம் வெளிநாடு சென்றிருப்பதால் வேறு ஒரு தினத்தில் விசாரிக்க வேண்டும் என்று அவரது சட்டத்தரணி நீதி மன்றில் கோரினார். அதன்படி அந்த மனு மீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# திரைப்படத் துறையை முன்னேற்ற உடனடியாகவே நடவடிக்கை

## அரச தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக 5

திரைப்படத் துறையையும் கலைஞர்களையும் பாதுகாப்பதற்கு தேவையான தீர்மானங்களை மேற்கொள்ள அரசு ஒருபோதும் பின்நிற்கப் போவதில்லை என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அத்துறை சார்ந்த சகலரது ஆலோசனைகளையும் கருத்திற்கொண்டு சினிமாத்துறையின் முன்னேற்றத்துக்கான நடவடிக்கைகள் தாமதமின்றி நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அரச தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற திரைப்படத் துறையினர் தற்போது எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் தொடர்பான சிறப்புக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

திரைப்படங்களை காட்சிப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் தொடர்பான சட்டங்கள் கவனத்திற் கொள்ளப்படாமையினால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. தரமான திரைப்படத் தயாரிப்புக்கும் அவற்றை காட்சிப்படுத்துவதற்கும் அரச அனுசரணை இன்றியமையாதது.

தேசிய திரைப்படத்துறையின் முன்னேற்றத்திற்கான சிபாரிசுகளை முன்வைப்பதற்காக அரச தலைவரால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக இதன் போது கலந்துரையாடப்பட்டது.

திரைப்படக் காட்சிப்படுத்தலின் மூலம் கிடைக்கும் வருமானம் பகிரப்படும் வீதத்தின் ஏற்றத்தாழ்வுகள், திரையரங்குகளை இலத்திரனியல் மயப்படுத்துவதற்கும் நவீன மயப்படுத்துவதற்குமான திரையரங்கு உரிமையாளர்களின் நிதிப் பற்றாக்குறை, திரையரங்குகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிதி சம்பந்தப்பட்டவர்களுக்கு உரியவாறு கிடைக்கப் பெறாமை, வெளிநாட்டு திரைப்படங் களின் இறக்குமதி, காட்சிப்படுத்தல், விநியோகித்தல் நடவடிக்கைகள் முறையாக இடம்பெறாமை, தேசிய திரைப்பட துறையின் தர மேம்பாட்டிற்கான நடவடிக்கைகள் மற்றும் புதிய வரிக் கொள்கை தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, தயாசிறி ஜயசேகர, ஜனாதிபதியின் செயலர் உதய ஆர். செனவிரத்ன, தர்மசிறி பண்டாரநாயக்க, சோமரத்ன திசாநாயக்க, ரவீந்ர ரந்தெனிய, இனோக்கா சத்யாங்கனி உள்ளிட்ட திரைப்பட இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள் மற்றும் நடிக, நடிகைகள் உள்ளிட்ட பலரும் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

# கடத்தப்பட்ட பெண் காதலனுடன் கைது

கொழும்பு, ஒக். 5

அம்பலாந்தோட்டை- வலவ்வத்த, மாமடல பிரதேசத்தில் கடந்த 2ஆம் திகதி 17 வயது பெண் ஒருவர் கடத்தப்பட்ட சம்பவம் நாடு முழுவதும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

வீட்டிற்கு வந்த 6 பேர் அடங்கிய குழு துப்பாக்கி மற்றும் பல ஆயுதங்களை காட்டி தமது மகளைக் கடத்திச் சென்றதாக அந்த பெண்ணின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய விசாரணை நடத்திய பொலிஸாருக்கு இந்தப் பெண்ணைக் கடத்தியது யுவதியின் காதலனும் அவரதும் நண்பர்களும் எனத் தெரிய வந்துள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது திஸ்ஸமஹாராம - வீரவில பகுதியில் அமைந்துள்ள வீடொன்றிலிருந்து இந்தப் பெண்ணையும், பெண்ணின் காதலனையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இருவரிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையிலிருந்து,

சம்மந்தப்பட்ட பெண் பல வருடங்களாக இளைஞர் ஒருவரை காதலித்து வந்துள்ளார்.

இவர்களது காதலிற்குப் பெண்ணின் பெற்றோர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

பெற்றோர் தமது காதலிற்கு எதிர்ப்புத் தெரிவித்தமையால் தனது காதலருடன் வீட்டை விட்டு ஓடுவதற்குப் பெண் காதலருடன் இணைந்து திட்டம் தீட்டியுள்ளார்.

திட்டத்திற்கமைய சம்பவ தினத்தன்று வீட்டை விட்டு வெளியேற முயன்ற பெண், கதவைத் திறக்க முயற்சித்த வேளையில் பெற்றோர் தடுத்துள்ளனர்.

அந்த வேளையில் பெண்ணின் காதலன் வீட்டு கதவை உடைக்க முயற்சித்த வேளையில் கையிலிருந்த துப்பாக்கி தவறுதலாக இயங்கியுள்ளது. எனப் பொலிஸாரின் விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது.

பெண்ணைக் கடத்திச் சென்ற இளைஞனுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் பெண்ணை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தங்காலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நிதி நெருக்கடியைத் தீர்ப்பதற்கு மைத்திரியின் தலையீடு தேவை

## ரத்னாயக்க எம்.பி. வலியுறுத்து



கொழும்பு, ஒக்.5

நாட்டில் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி மிகவும் பாரதூரமானது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்த விடயத்தில் தலையிட்டு உடன் தீர்வு காண வேண்டும். என்று கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.பி.ரத்னாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடுத்த நிதியாண்டுக்காக நிதி அமைச்சர் மங்கள சமரவீர சமர்ப்பிக்கவுள்ள வரவு செலவுத் திட்டத்தைத் தோற்கடிப்பது அவசியம். பொருளாதார நெருக்கடிக்கான பொறுப்பை ஏற்று அதற்கு உரிய தீர்வு காண்பது அரச தலைவரின் பொறுப்பு. அறிக்கைகள் விடுவதாலும், குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதா லும் எந்த நன்மையும் இல்லை. நாட்டின் அரச தலைவரைக் கொலை செய்யச் சதித் திட்டம் தீட்டப்பட்டது என்பது சாதாரண விடயமல்ல. அது தொடர்பில் அரச தலைவர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். பொலிஸ் மா அதிபருக்கும் அதில் தொடர்புண்டு. பொலிஸ் மா அதிபர் பதவிக்கு பூஜித் ஜெயசுந்தர பொறுத்தமற்றவர் - என்றார்.

# பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்க ரணிலிடம் எந்தத் திட்டமும் இல்லை

கொழும்பு, ஒக 5

பொருளாதாரப் பிரச்சினையை தீர்க்கத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் எந்த திட்டமும் இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி மாற்று அணி நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ரணில் விக்கிரமசிங்க நாட்டில் தலைமை அமைச்சராக இருந்த காலமெல்லாம் அவரால் ஆரம்பிக்கப்பட்ட பொருளாதாரத் திட்டங்கள் தோல்வியடைந்துள்ளன. தற்போதுள்ள பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்க எங்களால் முடியும். அதனால் அரசில் இருக்கும் 23 பேரும் எங்களு டன் இணைந்து கொள்ள வேண் டும்."- என்றார்.

# ஞானசார தேரரை விடுதலை செய்யக் கோரி பாதயாத்திரை

கொழும்பு, ஒக் 5

பொதுபல சேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலகொடத்தே ஞானசார தேரரை விடுதலை செய்யுமாறு கோரி நேற்றுப் பாத யாத்திரையொன்று முன்னெடுக்கப்பட்டது. பௌத்த பிக்குகள், பொதுமக்கள் உள்ளிட்டவர்கள் இணைந்து இந்த பாத யாத்திரையில் பங்கேற்றனர். களனி ரஜமஹா விஹாரையிலிருந்து கொழும்பு கோட்டை தொடருந்து நிலையம் வரையில் இந்த யாத்திரை மேற்கொள்ளப்பட்டது. ஞானசார தேரரை விடுதலை செய்யுமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கில் சிங்கள பௌத்த அமைப்புக்களினால் இந்தப் பாத யாத்திரைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள விகாரைக்கு எதிரில் சத்தியாக் கிரக போரட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

## பெரமுனவுக்குச் செல்ல முன்னர் மகிந்த அனைத்து பதவிகளையும் துறக்க வேண்டும்

கொழும்பு, ஒக். 5
சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவத்தை பொறுப்பேற்பதற்கு முன்னர் சுதந்திர கட்சியின் அனைத்து பதவிகளையும் மகிந்த ராஜபக்ச துறக்க வேண்டும் என்று அமைச்சர் துமிந்த திசாநாயக்க தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது :
தேசிய அரசில் இருந்து சிறிலங்கா சுதந்திர கட்சி வெளியேறும் காலம் வந்துவிட்டது என்று மகிந்தவால் கூற முடியாது. ஏனெனில் இந்த அரசை மக்களே ஜனநாயக முறையில் தோற்றுவித்தனர்.
2020 ஆம் ஆண்டு வரை இரு முதன்மைக் கட்சிகளும் கூட்டிணைந்தே செயற்படும்.
ஒருவர் தான் விரும்பிய கட்சியில் இணைவதற்கும் அக்கட்சியில் .இருந்து விலகுவதற்கும் முழுமையான சுதந்திரம் காணப்படுகின்றது.
இருப்பினும் கட்சியின் கொள்கைக்கும், சட்டத்திட்டங்களுக்கும் உட்பட்டே அனைவரும் செயற்பட வேண்டும். இவ்விடயத்தில் மகிந்த ஒரு விதிவிலக்கல்ல. அனைவரும் குறிப்பிடுவது போன்று இவ்விடயம் தொடர்பில் சிறிலங்கா சுதந்திர கட்சி தீர்க்கமான முடிவுகளை மேற்கொள்ளும்.
டொலர் பெறுமதியின் வீழ்ச்சி எவ்விதத்திலும் நாட்டு மக்களுக்கும், தேசிய பொருளாதாரத்துக்கும் பாதிப்பு ஏற்படுத்தாது என்று பன்னாட்டு பொருளாதார நிபுணர்கள் உட்பட மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்தார்.
எனினும் இந்த விடயத்தை பெரிதுபடுத்தும் எதிரணியினர் அரசியல் இலாபம் தேடுகின்றனர் - என்றார்.

# பெரமுனவுக்குச் சென்றால் எதிர்விளைவுகள் நிச்சயம்

### மகிந்தவை எச்சரிக்கிறார் சு.க. பொதுச் செயலாளர்

**கொழும்பு, ஒக்.5**
**பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவத்தை முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச குறுகிய நோக்கங்களை மையப்படுத்திப் பொறுப்பேற்றால் அவருக்கு எதிராகச் சிறிலங்கா சுதந்திர கட்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் ரோஹண லக்ஸ்மன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
மகிந்த ராஜபக்ச தற்போதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினராகவும், ஆலோசகராகவும் உள்ளார். அவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையைத் துறக்கமாட்டார் என்று நம்புகின்றோம். ஏனெனில் அவர் தனது அரசியல் பயணத்தை இந்தக் கட்சியில் இருந்தே ஆரம்பித்தார்.
எனினும் எவரும் எதிர்பாராத வகையில் பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவத்தை மகிந்த ராஜபக்ச பொறுப்பேற்றால் பெரும் எதிர்விளைவுகளைச் சந்திக்க நேரிடும். இந்த விடயத்தில் கட்சி ரீதியில் பல தீர்க்கமான தீர்மானங்கள் எடுக்கப்படும். அதனால் அவரது தரப்பினரும் பல சவால்களை எதிர்கொள்ள நேரிடும். கூட்டு எதிரணியினர் இது போன்ற விடயங்களைக் கடந்த காலங்களில் தொடர்ச்சியாகக் கூறிவந்தனர். அதனால் அவர்களின் கருத்துக்களைப் பெரிதுபடுத்த முடியாது- என்றார்.

## கூட்டரசை கைவிட இதுவே தக்க தருணம்

### கூறுகிறார் மகிந்த



கொழும்பு, ஒக்.5
கூட்டு அரசில் இருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி விலகுவதற்கு இதுவே சரியான தருணம் என்று தெரிவித்துள்ளார் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச.
கனேமுல்லவில் நடந்த சமய நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்தாவது:
கூட்டரசில் இருந்து விலகுவதற்கு இதுவே சரியான தருணம். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இது தொடர்பில் ஆலோசிக்க வேண்டும். விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார்.

## பாலியல் தொல்லைகளை விசாரிக்கச் சிறப்புக் குழு

### மேல் மாகாண ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.5
கொழும்பு மாநகர சபையின் பெண் ஊழியர்களுக்கு, உயர் அதிகாரிகளால் பாலியல் தொல்லைகள் கொடுக்கப்படுகின்றன என்று முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் ஆராய்வதற்குக் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது என்று மேல் மாகாண ஆளுநர் ஹேமகுமார நாணயக்கார தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:
பொதுஜன ஐக்கிய முன்னணியின் உறுப்பினர் பிரமிலா கோணவல முன்வைத்துள்ள முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம். சட்டத்தரணி, ஓய்வுபெற்ற நீதிபதி மற்றும் பெண் பிரதிநிதித்துவத்துக்கான உயர் அதிகாரி ஒருவர் அடங்கலாக விசாரணைக் குழு நியமிக்கப்படவுள்ளது.இந்தக் குழுவினூடாக கொழும்பு மாநகரசபையின் பெண் ஊழியர்களுக்கு உயர் அதிகாரிகளால் பாலியல் தொந்தரவுகள் ஏற்படுத்தப்படுகின்றது என்று முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுத் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு அறிக்கை தயார் செய்யப்படவுள்ளது- என்றார்.

## பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் பாதாள உலகக் குழு உறுப்பினர் காயம்

கொழும்பு, ஒக்.5
குற்றத்தடுப்புப் பொலிஸாருக்கும், பாதாள குழு உறுப்பினர்களுடன் தொடர்பைக் கொண்ட நபர் ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த அந்த நபர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
அத்துருகிரிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒருவல இரும்பு கூட்டுத்தாபனத்துக்கு அருகில், நேற்று முற்பகல் 11.55 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
30 வயதுடைய பண்டா என்ற சந்தேகநபர், பொலிஸ் அதிகாரிகள் மீது மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்து தங்களது தனிப்பட்ட பாதுகாப்புக் கருதி பொலிஸார் பதிலுக்குத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார்.
இதன்போது காயமடைந்த சந்தேகநபர், ஒருகொட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் அங்கிருந்து கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.
இந்தச் சந்தேகநபர், தற்பொழுது வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றுள்ளதாகத் தேடப்பட்டு வரும் 'மாகந்துர மதூஷ்' மற்றும் 'அங்கொடை லொக்கா' என அழைக்கப்படும் பாதாள குழு உறுப்பினர்களுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
சந்தேகநபர், துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள பயன்படுத்திய கைத்துப்பாக்கியை, குற்றத் தடுப்பு பிரிவு அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.
இது தொடர்பான மேலதிக விசாரணைகளை, குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

## பேருவளை துப்பாக்கிச் சூடு: ஐவர் கைது

கொழும்பு, ஒக்.5
பேருவளை - பன்னில பகுதியில் இளைஞன் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூடு தொடர்பில் சந்தேக நபர்கள் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
உந்துருளியில் இளைஞன் பயணித்துக் கொண்டிருந்த போது நேற்றுமுன்தினம் இரவு அடையாளம் தெரியாத ஒருவரால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. அது தொடர்பில் விசாரணைகள் நடத்திய பொலிஸார் பயாகல முன்ஹேன பகுதியில் வைத்து சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளனர்.
விசாரணையில் இளைஞர் பயணித்த உந்துருளியைத் திருடுவதற்காகத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கைது செய்யப்பட்டவர்கள் தென்பகுதி பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்களாக இருக்கக்கூடும் என்ற ரீதியில் விசாரணைகள் நடைபெறுகின்றன. துப்பாக்கிச் சூட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி, மகிழுந்து(கார்), திருடப்பட்ட உந்துருளி என்பன பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கு 5 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த இளைஞர் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு, சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

### கதிர்காமர் வழக்கில் திருப்பம்

## குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை நிராகரித்தது நீதிமன்று

கொழும்பு, ஒக் 5
லக்ஸ்மன் கதிர்காமர் கொலை வழக்கில், அரச தரப்பின் முக்கிய சான்றாக முன்வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நிராகரித்துள்ளார். 2005 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இணைந்து சதி செய்து முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரைக் கொலை செய்தமைக்கு உடந்தையாகச் செயற்பட்டதாக ஆரோக்கியநாதன் மீத குற்றம் சாட்டப்பட்டுள்ளது.
பயங்கரவாதச் தடைச்சட்டதின் கீழ் ஆரோக்கியநாதனுக்கு எதிராக கொழும்பு மேல் நீதி மன்றில் ஐந்து குற்றச்சாட்டுக்கள் சுமத் தப்பட்டு 2008 ஆம் ஆண்டு கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
இரண்டாம் குற்றவாளியான ஆரோக்கிய நாதனுக்கு எதிரான வழங்கு மேல் நீதிமன்ற நீதிபதி சம்பத் அபேயகோன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மை விளம்பல் விசாரணை நிறைவடைந்துள்ளது.
இதையடுத்து அரச சட்டத்தரணி நவாவி தனது சமர்ப்பணத்தில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட இந்த வழக்கின் இரண்டாம் எதிரியான ஆரோக்கியநாதன் 2008 ஆம் ஆண்டு பொலிஸாரின் எந்த விதமான சித்திரவதையும் அச்சுறுதலும் இல்லாமல் சுய விருப்பத்திலேயே குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜே ஆர். ஜயவர்தனவுக்கு வழங்கியுள்ளார் என தனது வாதத்தை முன்வைத்தார்.
இதன்போது அரச சட்டத்தரணி முன்வைத்த சமர்ப்பணத்துக்குக் கடும் ஆட்சேபனை தெரிவித்த இரண்டாம் எதிரியின் மூத்த சட்டத்தரணி கே.வி.தவராசா இரண்டாம் எதிரியினால் சுய விருப்பில் வழங்கப்பட்டதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயமாக வழங்கப்பட்டதல்ல என வாதாடினார்.
"இந்த வழக்கின் இரண்டாம் எதிரி தனது சாட்சியத்தில் தான் சுய விருப்பத்தில் எந்த வாக்குமூலமும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு வழங்கவில்லை எனவும் தன்னைக் கைது செய்த தினத்திலிருந்து குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் இடும்வரை பொலிஸார் சித்தரவதை செய்ததாகவும் தனது உடலில் சித்திரவதையினால் ஏற்படுத்தப்பட்ட காயங்களை நீதிமன்றம் அனுமதித்தால் நீதிமன்றிற்கு காட்டமுடியும் எனவும் சாட்சியமளித்துள்ளார்.
சட்ட மருத்துவ அதிகாரியின் சாட்சியத்தை மூத்த சட்டத்தரணி குறுக்கு விசாரணை செய்கையில் சட்ட மருத்துவ அதிகாரி இரண்டாம் எதிரியின் உடலில் சித்திரவதையால் ஏற்பட்ட கடும் காயங்கள் பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்ட காலத்தில் ஏற்படுத்தப்பட்டது எனச் சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார்.
மேலும், குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பதியப்படும் பொழுது பொலிஸ் பரிசோதகர் இரங்கநாதன் 2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி மதியம் 2.30 மணிக்கு உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கும் இரண்டாம் எதிரிக்கும் சிங்கள தமிழ் மொழி பெயர்ப்பாளராக செயற்பட்டார் என அரசு தரப்பால் முன்வைக்கப்பட்டள்ளது.
அதே நாளில் அதே நேரத்தில நகுலா பத்மநாதன் என்ற வேறு ஒரு கைதியின் வாக்குமூலத்தை பொலிஸ் பரிசோதகர் இரங்கநாதன் பதிவு செய்துள்ளார் என்பதனை உறுதிப்படுத்தும் ஆவணத்தை நீதிமன்றில் சமர்பித்ததுள்ளார்.
ஒரே நாளில் ஒரே நேரத்தில் இருவேறு கைதிகளின் வாக்கு மூலங்களைப் பதிவு செய்ய முடியாதென்பதால் பொலிஸ் பரிசோதகர் இரங்கநாதனின் சாட்சியம் உண்மைக்கு புறப்பானது. அத்துடன் காயங்கள் சட்ட மருத்துவ அதிகாரியின் சாட்சியத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ள தாலும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுய விருப்பில் வழங்கப்பட்டதல்ல என்பது நிரூபிக்கப்பட் டுள்ளது.
இரு தரப்பினரதும் வாதப் பிரதிவாதங்களையடுத்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி எதிரியால் வழங்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எதிரியினால் சுயவிருப்பில் வழங்கப்படவில்லையென அரச தரப்பு விண்ணப்பத்தை நிராகரித்து தீர்ப்பு வழங்கினார்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# இதுவொரு தற்காலிக நிறுத்தம் மட்டும்தான்

இலங்கையில் தமிழ், சிங்கள இன முரண்பாடு சண்டையாக, மோதலாகப் பின்னர் முழு அளவிலான போராகத் தீவிரமடைவதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று தமிழர்கள் தொடர்ச்சியாக வாழ்ந்துவரும் வடக்குக் கிழக்குப் பகுதிகளைத் துண்டாடும் விதமான அரச ஆதரவுடன்கூடிய திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள். இன முரண்பாட்டை வன்முறைசார் மோதலாக்கியதில் இத்தகைய குடியேற்றங்களுக்கும் அவற்றுக்குக் காவலாக நிறுத்தப்பட்ட படையினருக்கும் மிக முக்கிய பங்குண்டு. 30 ஆண்டு காலத் தீவிரப் போர் நடந்த பின்னரும் அரச ஆதரவில் நிகழ்ந்துவரும் இத்தகைய சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்படவில்லை. வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தின் தொடர்ச்சியைத் துண்டாடும் விதத்தில் இரு மாகாணங்களினதும் எல்லைகளிலும் சிங்களக் குடியேற்றங்கள் தொடர்கின்றன.

போர் முடிந்த பின்னர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் இத்தகைய திட்டமிட்ட குடியேற்றங்கள் வவுனியா மாவட்டத்தின் எல்லைப் பகுதிகளிலும் முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைப் பகுதிகளிலும் தீவிரமாக இடம்பெற்றன. வவுனியா திருகோணமலை வீதியையொட்டி சுமார் 2 ஆயிரம் பேர் வரையானோரைக் குடியேற்றி ஒரு கிராமமே உருவாக்கப்பட்டது. இவற்றையெல்லாம் பொறுக்க முடியாமல்தான் மகிந்தவை ஆட்சியிலிருந்து அகற்றி, மைத்திரி ரணில் ஆட்சியைக் கொண்டுவருவதில் தமிழ் மக்கள் மிக முக்கிய பங்காற்றினார்கள். ஆனால், அந்த ஆட்சியிலும் எல்லையில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மாகவலி 'எல்' வலயம் என்கிற பெயரில் தொடர்கின்றன.

இந்தக் குடியேற்றங்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் குற்றச்சாட்டுக்களை எழுப்பியபோது, தனது அதிகாரிகளின் சொற்கேட்டு அதை மறுத்திருந்தார் அரச தலைவர். அத்தகைய குடியேற்றங்கள் ஏதும் நடைபெறவில்லை என்றும் தெரிவித்திருந்தார். அவரது கூற்றுக்குச் சிங்கள, ஆங்கில ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டுமிருந்தன. ஆனால், நேற்று முன்தினம் நடந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான அரச தலைவர் அபிவிருத்திச் செயலணியின் கூட்டத்தில் சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெறுவதை ஆதாரங்களுடன் கூட்டமைப்பினர் நிரூபித்தபோது அதை ஏற்றுக்கொண்டார் அரச தலைவர்.

இந்த விடயம் தனக்குத் தெரியாமல் நடந்தது என்று தெரிவித்த அரச தலைவர், இனிமேல் இதுபோன்ற எந்தவொரு விடயமும் தனக்குத் தெரியாமல் நடக்கக்கூடாது என்று தனது அதிகாரிகளுக்கு உத்தரவும் இட்டார். குற்றச்சாட்டு சுமத்தப்பட்டபோது அதிகாரிகளின் கருத்தைக் கேட்டுவிட்டு அப்படி நடந்ததை மறுத்த அரச தலைவர் ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டதும் தனக்குத் தெரியாமல் நடந்துவிட்டது என்கிறார். இப்படி அவர் நழுவுவது ஒருபுறமிருக்க, இந்த விடயத்தில் எழும் மிக முக்கிய கேள்வி 'இனிமேல் நடக்கப்போவது இருக்கட்டும் நடந்து முடிந்ததவறை எப்படி, யார், எப்போது சரி செய்வது?' என்பதுதான்.

அரசதலைவரின் நடவடிக்கை இனிமேல் சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெறுவதைக் கட்டுப்படுத்தக்கூடும். ஆனால் ஏற்கனவே அங்கு சிங்களவர்கள் குடியேற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்களை எப்படி, எப்போது அங்கிருந்து அகற்றப்போகிறார்கள்? யார் அதை முன்னின்று செய்யப்போகின்றார்கள்?

அதிகாரிகள் செய்தது தவறு என்று தெரிந்தபோதும் தவறைச் செய்துவிட்டு அது குறித்துத் தன்னைத் தவறாக வழிநடத்தியுமிருக்கிறார்கள் என்று தெரிந்தபோதும், அந்த அதிகாரிகள் மீது (மகாவலி அபிவிருத்தித் திட்ட அதிகாரிகள்) எந்தவிதமான நடவடிக்கையும் எடுப்பதற்கு அரச தலைவர் முன்வரவில்லை. 'எனக்குத் தெரியாமல் இனிமேல் செய்யாதீர்கள்' என்று மட்டும்தான் அறிவுறுத்தியுள்ளார். அதிகாரிகள் செய்தது தவறு என்றுகூட அவர் கடிந்துகொள்ளவில்லை.

மொத்தத்தில் தேர்தல் வரும் நேரத்தில் இந்தப் பிரச்சினை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதே தவிர நிரந்தரமான தீர்வு எதுவும் காணப்படவில்லை. அப்படி நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கான அரசியல் விருப்பும்கூட வெளிப்படுத்தப்படவில்லை. எனவே மீண்டும் இந்தக் குடியேற்றங்கள் தொடரலாம். அது உடனடியாகவும் நடக்கக்கூடும் அல்லது அடுத்த ஆட்சி மாற்றத்துடனும் நடக்கக்கூடும். ஏனெனில் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பிருந்த, வடக்கு, கிழக்கைத் துண்டாடுவது என்கிற அரசியல் எண்ணக்கருவிலேயே சிங்கள அதிகாரிகள் ஊறிப்போயிருக்கிறார்கள். அதைச் சிங்கள அரசியல் தலைமையும் தட்டிக்கொடுத்து அல்லது கண்டுகொள்ளாமல் விடுவதன் மூலம் ஊக்குவித்து வருகின்றது.


அத்தோடு அவ்வப்போது இப்படிக் குடியேற்றங்களை ஏற்படுத்திவிட்டு அவற்றுக்கு எதிர்ப்புக் கிளம்பும்போது, அதைத் தற்காலிகமாக நிறுத்துவதன் மூலம் தான் நினைத்ததையும் சாதித்துத் தமிழர்களையும் சமாளித்துவிடுகின்றது கொழும்பு. ஏற்படுத்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் எவையும் அகற்றப்படுவதில்லை என்பதால் அவர்கள் அங்கேயே வாழ்கிறார்கள். காலப் போக்கில் அதுவே அவர்களின் சொந்த இடமாகிப் போகிறது. பின்னர் பிரதேச செயலகம், தேர்தல் தொகுதி என்று அது சிங்கள மயமாகி விடும். இதுதானே வேண்டும் சிங்கள ஆளும் வர்க்கத்துக்கு. எதிர்ப்புக் கிளம்பும்போது மட்டும் தமிழர்களைச் சமாளிப்பதற்காகத் தற்காலிகமாகக் குடியேற்றங்களை நிறுத்தி வைப்பார்கள். இப்போது மைத்திரியும் அதைத்தான் செய்திருக்கிறார்.

# நாட்டின் இன்றைய பொருளாதாரச் சிக்கலின் சூத்திரதாரிகள் யாவர்?

நாட்டின் இன்றைய பொருளாதாரப் பின்னடைவுக்கு முக்கிய காரணம் தூர நோக்கற்ற விதத்தில் நாட்டின் நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்லும் இன்றைய கூட்டு அரசே. மேற்கண்ட விதத்திலான குற்றச்சாட்டை முன்வைக்கும் இந்த ஆக்கம் நாட்டின் இன்றைய பொருளாதார நிலையை விவரிக்கும் வகையிலானது.

சிங்களமூலம்: பேராசிரியர் நாலக கொடஹேவ(மவ்பிம)
தமிழில்: வீ.எஸ்.ரீ.

1970ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தல் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றிய சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான கூட்டு முன்னணி அரசு, பரந்த பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் தேசிய உற்பத்தியை அதிகரித்து நாட்டைத் தன்னிறைவு அடைய வைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டது. இந்த நாட்டின் வரலாற்றில் அரசின் ஊக்குவிப்புடன் பெரும்பாலான கைத்தொழில் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டமை அந்தக் கூட்டு முன்னணி அரசின் ஆட்சிக் காலத்திலேயே ஆகும். விவசாயத்துறைக்கு அந்த வேளையில் சிறப்பு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. ஆயினும் பொருளாதார முன்னேற்றத்துக்காக நாட்டு மக்கள் தமது வாயை, வயிற்றை இறுகக் கட்டிக்கொண்டு செலவீனத்தை மட்டுப்படுத்தி வாழாப் பழகிக்கொள்ளுமாறு கூட்டு முன்னணி விடுத்த கோரிக்கையை நாட்டு மக்கள் தவறாகக் கணிப்பிட்டனர். இதனால் 1977ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிக்கப் போவதாக எதிரணியான ஐ.தே.கட்சி வழங்கிய வாக்குறுதியை நம்பிய நாட்டின் பொதுமக்கள் அந்தத் தேர்தலில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐ.தே.கட்சியிடம் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைத்தனர். சகலரும் ஆச்சரியப்படும் வகையில் நாற்பது ஆண்டுகளின் பின்னர் அதே. ஐ.தே.க.கட்சியின் அமைச்சர்கள் இன்று இந்த நாட்டு மக்களிடம் வாயை வயிற்றை இறுக்கிக் கட்டிக்கொண்டு, சிக்கனமாக வாழ முயற்சிக்குமாறு கோரிக்கை விடுக்க நேர்ந்துள்ளது. ஆனால், இன்று அரசை நிர்வகிக்க இயலாத விதத்தில் நாட்டின் பொருளாதார நிலை கடும் வீழ்ச்சி கண்டிருப்பதனாலேயே அத்தகைய கோரிக்கை விடுக்கப்படுகின்றதேயொழிய அன்றைய சிறிமாவோ அரசின் பொருளாதாரக் கொள்கை வெற்றிக்கான கோரிக்கையாக அது அமையவில்லை என்பது குறிப்பிடத்தக்கதொரு அம்சமாகும்.



"இன்றைய கூட்டு அரசு பதவியேற்று சில மாதங்கள் கழிவதற்கு முன்பாகவே தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவினது நெருங்கிய சகாவான அர்ஜுன் மகேந்திரனால் மேற்கொள்ளப்பட்ட இலங்கை மத்திய வங்கி பிணைமுறி ஊழல் விவகாரம் நாட்டின் பொருளாதாரத்துக்குப் பலத்த பேரிடியாக அமைந்தது. அதுநேரடியாகவும் மறைமுகமாகவும் இந்த நாட்டின் பொருளாதாரத்துக்கு மிகப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வைத்தது. நாட்டின் உயர்மட்ட அதிகாரத் தரப்பினால் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய பெரும் மோசடி பன்னாட்டு ரீதியில் இலங்கைக்குப் பெரும் அபகீர்த்தியையும் தலைக்குனிவையும் ஏற்படுத்தும் ஒரு செயற்பாடாக அமைந்தது."

**முதலீட்டாளர்களின் வெளியேற்றம்**

இன்று இந்த நாடு முன்னொரு போதும் முகம்கொடுக் நேர்ந்திராத பொருளாதாரப் பின்னடைவுக்கு முகம் கொடுக்கவேண்டி நேர்ந்துள்ளது.

பொருளாதார முன்னேற்றத்தில் இன்று ஆசிய நாடுகளில் மிகப்பெரும் பின்னடைவுக்கு இலங்கை உட்பட நேர்ந்துள்ளதாகவும் இதனால் இலங்கை முதலீடுகளுக்குத் தகுதியற்றதொரு நாடாக ஆகியுள்ளதாகவும் பன்னாட்டு பொருளாதாரத்துறை விற்பன்னர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர். இலங்கையில் தமது புதிய முதலீடுகளை மேற்கொள்வதற்கு முன்வருவதற்குப் பதிலாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஏற்கனவே தாம் இலங்கையில் மேற்கொண்டுள்ள முதலீட்டு முயற்சிகளை முடிந்தவரை அவசரஅவசரமாக முடித்துக்கொண்டு, தமது முதலீடுகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டு வெளியேறும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். அரசின் சகல வர்த்தகத் தரப்புக்களது செயற்பாடுகளில் கடும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதுடன், சிறிய மற்றும் மத்திய தர வர்த்தக முயற்சிகள் பல முடங்கிக் போயுள்ளன. மற்றும் பல முற்றாக கைவிடப்பட்டுள்ளன. சிறு கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுவந்த பலர் தமது தொழில் முயற்சிகளில் எதுவித வருமானமும் ஈட்டமுடியாத கையறு நிலைக்கு உட்பட நேர்ந்துள்ளது. நாட்டு மக்கள் பலருக்கு மூன்று வேளை உணவு கிடைப்பதே கேள்விக்குறியாக ஆகியுள்ளது. தமது வருமான மார்க்கங்கள் அத்தனையும் அடைபட்டுப்போயுள்ளதால், நாட்டின் பெரும்பாலான மத்தியதர மூன்றாம்தர பொதுமக்கள் மிகப் பெரும் வாழ்க்கைச் சிரமங்களுக்கு முகம்கொடுக்க நேர்ந்துள்ளது.

**இறக்குமதியைத் கட்டுப்படுத்தும் நடவடிக்கை**

இத்தகைய பின்னடைவுகளை எதிர்நோக்கிய நிலையில், அண்மைய நாள்களில் கடந்த ஓரிரு வாரங்களில் அரசு நாட்டின் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதற்குப் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளபோதிலும், குறிப்பாக வாகன இறக்குமதிகள் தொடர்பான தீர்மானங்களில் கடும் கட்டுப்பாடுகளை மேற்கொண்ட போதிலும், அவை எந்தவகையிலும் நாட்டின் பொருளாதார ஸ்திரத்துக்குப் பயனளிக்க இயலாத, காலம் பிந்திய செயற்பாடுகளாகவே அமைந்து விட்டுள்ளன.

இன்றைய கூட்டு அரசு பதவியேற்று ஏறக்குறை நான்கு ஆண்டுகள் காலம் கழிந்துள்ள நிலையில் இலங்கை ரூபாவின் மதிப்பு அமெரிக்க டொலரொன்றின் பெறுமதியில் 28 வீதத்தால் வீழ்ச்சி



கண்டுள்ளது. இதற்கான காரணங்களாகப் பொருளாதார விற்பன்னர்களால் பல தரப்பட்ட சாட்டுப்போக்குகள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையிலும், நிலைமையை உரிய வகையில் கையாண்டு நேர்சீர் செய்ய இயலாத அரச நிர்வாகத்தின் கையாலாகாத்தனமே இதற்கான முழுமுதற்காரணமெனப் பொருளாதார நிபுணர்களால் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது.

இன்று உலக பொருளாதாரத்துறையில் பன்னாட்டு முதலீட்டாளர்கள் உலக வர்த்தக சந்தையின் முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்துத் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர். தமது முதலீட்டுக்கான இலாபம் குறைவடையும் வேளையில் அதனை அதிகமாகப் பெறத்தக்க விதத்தில் தமது முதலீடுகளை இடம்மாற்றிக்கொள்ளும் கொள்ளும் அணுகுமுறையை அவர்கள் தற்போது கடைக்கொண்டு வருகின்றனர். அந்த வகையில் இன்று கோடிக்கணக்கான தமது முதலீடுகளைப் பன்னாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையிலிருந்து விலகிக்கொள்ளும் நிலை இடம் பெற்று வருவதை இதற்கானதொரு உதாரணமாகச் சுட்டிக்காட்ட முடிகிறது.

இதன் பலாபலனாக இலங்கை ரூபாவின் மதிப்பு மென்மேலும் வீழ்ச்சி கண்டு வருகின்றது. ஆனால் இதனை உரிய வேளையில் மாற்று நடைமுறைமூலம் நேர்சீர் செய்ய முயற்சி மேற்கொள்ளாத அரசு, இன்று குதிரைகள் இலாயத்தை விட்டு வெளியேறிச் சென்ற பின்னர் இலாயத்தை இழுத்துமூடும் தாமதப் போக்கில் செயற்பட்டுவருவது மிகக் கவலை தருமொரு விடயமாகும்.

**இன்றைய கூட்டு அரசே பொறுப்பாளி**

இத்தகைய பொருளாதாரப் பின்னடைவுக்கு இன்று இந்த நாட்டை இட்டுச் சென்றுள்ளமைக்கு நாட்டின் இன்றைய ஆட்சியாளர் தரப்பான ரணில்-மைத்திரி தலைமையிலான அரசே முக்கிய பொறுப்பை ஏற்றாக வேண்டும். இன்றைய கூட்டு அரசு பதவியேற்ற நாள்முதல் நாட்டின் பொருளாதாரத்துறையில் மேற்கொண்ட தவறான செயற்பாடுகளைக் கணக்கில் கொண்டால், இந்த உண்மையைத் தெளிவாகப் புரிந்து கொள்ள இயலும்.

இன்றைய கூட்டு அரசு பதவியேற்றதும், கொழும்பு துறைமுக நகர்வேலைத்திட்டம், அதிவேக நெடுஞ்சாலைத் திட்டம் உட்பட முன்னைய அரசால் ஆரம்பிக்கப்பட்ட சகல அபிவிருத்தித் திட்டங்களையும் இடைநிறுத்தி வைத்தது. இதனால் குறித்த திட்டங்கள் தொடர்பாக முன்னெடுக்கப்பட்டு வந்த செயற்பாடுகள் அனைத்தும் தடைப்பட்டன. இதனால் குறித்த திட்டங்களில் தம்மை ஈடுபடுத்திவந்த தரப்புக்களின் செயற்பாடுகளும்ம் தடைப்பட்டதன் காரணமாக அவற்றில் ஈடுபட்டுவந்த தொழிலாளர்களும் தமது தொழில் வாய்ப்புக்களை இழக்க நேர்ந்தது.

கூட்டு அரசு, தான் பதவியேற்று மூன்று மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் முன்வைத்த இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் தூரநோக்கற்ற சில தீர்மா னங்களை முன்வைத்துச் செயற்படுத்தியது. அவற்றில் பெரும் செயற்றிட்டங்களைப் பாதிக்கும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட பெரும் இலாபத்துக்கு எதிராக அறவிட முடிவெடுக்கப்பட்ட வரியைக் குறிப்பிட இயலும். அது பன்னாட்டு முதலீட்டாளர்கள் இலங்கை அரசின் மீது கொண்டிருந்த நம்பிக்கையைச் சிதைப்பதொன்றாகவும் அமைந்தது.

அரசினது வருமான மார்க்கங்களை அதிகரிக்கும் திட்டமெதுவலும் இல்லாமல், திடீரென அரச ஊழியர்களது சம்பளங்களை அதிகரிப்பது அரசுக்கு இலயாததொன்று என்பதை அரசின் பொருளாதாரக் கொள்கை வகுப்பாளர்கள் உணரத் தவறியிருந்தனர். இத்தகைய தவறு காரணமாக அதிகரிக்கப்பட்ட அரச ஊழியர்களது சம்பளங்களுக்கான தொகையை இட்டுக்கட்டுவதற்கு நாட்டு மக்கள்மீது மேலதிக வரிகளைச் சுமத்த வேண்டிய நிலை அரசுக்கு இறுதியில் ஏற்பட்டது. அந்த வகையில் 2014ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரையான வரிகள் அதிகரிப்பு நூறு வீதத்தால் உயர்ந்துள்ளமை சுட்டிக்காட்டப்பட்டவேண்டியதொன்றாகும். இதனால் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள அதிகரிப்புக்குப் பலமடங்குகளுக்கு அதிகமாக அவர்களது வாழ்க்கைச் செலவு விகிதம் அதிகரித்துள்ளது.

**அர்ஜுன் மகேந்திரனின் பிணைமுறி மோசடி**

இன்றைய கூட்டு அரசு பதவியேற்றுச் சில மாதங்கள் கழிவதற்கு முன்பாகவே தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவினது நெருங்கிய சகாவான அர்ஜுன் மகேந்திரனால் மேற்கொள்ளப்பட்ட இலங்கை மத்திய வங்கிப் பிணைமுறி ஊழல் விவகாரம் நாட்டின் பொருளாதாரத்துக்குப் பலத்த பேரிடியாக அமைந்தது. அதுநேரடியாகவும், மறைமுகமாகவும் இந்த நாட்டின் பொருளாதாரத்துக்கு மிகப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வைத்தது. நாட்டின் உயர்மட்ட அதிகாரத் தரப்பினால் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய பெரும் மோசடி பன்னாட்டு ரீதியில் இலங்கைக்குப் பெரும் அபகீர்த்தியையும் தலைக்குனிவையும் ஏற்படுத்தும் ஒரு செயற்பாடாக அமைந்தது. இலங்கை



இதன் காரணமாகப் பன்னாட்டு ரீதியில் பெரிய அளவில் ஊழல் நிறைந்த நான்கு நாடுகளில் ஒன்றாக அடையாளப்படுத்தப்படும் நிலையையும் ஏற்படுத்தி வைத்தது.

இன்றைய கூட்டு அரசு பதவிக்கு வந்த நாள்முதல் உள்நாட்டு வர்த்தக சமூகத்தினருக்கும் கடும் சிரமங்களையும் தலைவலியையும் ஏற்படுத்தி வந்துள்ளது. இன்றும் அத்தகைய நிலை தொடர்வது குறிப்பிடத்தக்கது. எந்தவித கொள்கைத் திட்டங்களும் இல்லாது, உள்ளூர் விவசாய உற்பத்திகளுக்கு ஊக்குவிப்பு வழங்காது அவற்றை இறக்குமதி செய்யும் அனுமதிகளை அரசு வெவ்வேறு தரப்பினர்களுக்கு வழங்கிவருவதால் உள்ளூர் விவசாய உற்பத்தித் துறையினர் தமது உற்பத்திகளுக்கு நியாயமான இலாபம் ஈட்ட இயலாது சிரமப்பட நேர்ந்துள்ளது. சிங்கப்பூர் வர்த்தக ஒப்பந்தம் போன்ற செயற்பாடுகளால் எதிர்காலத்தில் நாட்டின் தேசிய வர்த்தக வாய்ப்புக்கள் பன்னாட்டுத் தரப்புக்களது கைகளில் சிக்கிக்கொள்வதால் நாட்டின் எதிர்கால பரம்பரையினர் இந்த நாட்டுக்குள்ளேயே வெளிநாட்டவர்களது சேவர்களாக ஆகும் துர்பாக்கிய நிலை ஏற்பட வாய்ப்பு உருவாகியுள்ளது.

அந்த வகையில் தமக்குத் தாமே பொருளாதார சிக்கல்களை உருவாக்கிக் கொண்ட இன்றைய கூட்டு அரசுத் தரப்பினர்களால் இத்தகைய சிரமத்திலிருந்து விடுபட இயலாதுபோயுள்ளது. இத்தகைய பொருளாதாரச் சிக்கல் நிலை, பின்னடைவு நிலை நாளுக்கு நாள் அதிகரிக்க வாய்ப்பு உண்டே தவிர, இத்தகைய சிக்கலில் இருந்து வெளியேறத் தக்க திறன் இன்றைய கூட்டு அரசிடம் சிறிதளவேனும் காணப்படவில்லை.

> இன்று உலக பொருளாதாரத்துறையில் பன்னாட்டு முதலீட்டாளர்கள் உலக வர்த்தக சந்தையின் முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்துத் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர். தமது முதலீட்டுக்கான இலாபம் குறைவடையும் வேளையில் அதனை அதிகமாகப் பெறத்தக்க விதத்தில் தமது முதலீடுகளை இடம்மாற்றிக்கொள்ளும் அணுகுமுறையை அவர்கள் தற்போது கடைக்கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில் இந்த நாட்டின் பொதுமக்கள் வாழ்க்கைச் செலவின் உயர்வு காரணமாக மென்மேலும் துன்ப துயரங்களுக்கு உட்பட வேண்டிய பரிதாபகரமான நிலையொன்றுக்கு முகம்கொடுக்க வேண்டியவர்களாக ஆகியுள்ளனர்.

இவற்றுக்கான இறுதித் தீர்வு இந்த நாட்டு மக்களது கைகளிலேயே தங்கியுள்ளது. இந்த நாட்டின் பெரும்பாலான பொதுமக்கள் புத்திசாலித்தனமாகச் செயற்பட்டு, இன்றையதமதுசிக்கல்நிலையினின்றும் விடுபடுவதற்கு உரிய தீர்மானங்களை மேற்கொண்டு, அவற்றை உறுதியோடு செயற்படுத்தினால் மட்டுமே அவர்களுக்கு அவர்களது எதிர்காலம் பிரகாசமாக அமைய வாய்ப்புண்டு.

## ஆசிரியருக்கான கடிதம்

# இலங்கை வங்கியின் இளவாலைக் கிளைக்கு மூடுவிழாவா?

ஐந்து வருடங்களுக்கு முன்பு காங்கேசன்துறை இலங்கை வங்கியின் நீடித்த கருமபீடம் இளவாலையில் ஆரம்பித்தவேளை தமது சிரமங்களுக்கும், நேரநெருக்கடிக்கும் ஒரு தீர்வு கிட்டியுள்ளதாக இளவாலையிலும், அயற்கிராமங்களிலும் வதியும் மக்கள் குதூகலித்தனர்.

வலிகாமம் வடக்குப் பிரதேசத்தின் ஒரு பகுதியையும் வலிகாமம் தென்மேற்குப் பிரதேசத்தின் ஒரு பகுதியையும் உள்ளடக்கிய இளவாலையூர் துரிதமாக வளர்ந்துவரும் ஒரு கிராமமாகும். மூன்று பெரிய கல்விக் கூடங்களும் ஆறு ஆரம்பப் பாடசாலைகளும் இந்த ஊரில் இயங்குகின்றன. கமக்காரர்களும், கடற்றொழிலாளர்களும் இந்த ஊரின் பொங்கிஷங்களாவர். அரச உத்தியோகத்தர்களும், ஓய்வூதியர்களும் வர்த்தகர்களும் சுயதொழில் முயற்சியாளர்களும், ஆலய பரிபாலன சபைகளும், பிரதேச வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கமும், வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினரும், இந்து இளைஞர் மன்றமும், பல விளையாட்டுக் கழகங்கள் மற்றும் பலதரப்பட்ட கழகங்களும், பொதுமக்களும் இந்த வங்கிக் கிளையின் சேவையை நுகர்கின்றனர்.

மேலும் வெளிநாடுகளில் வாழும் எமது இந்த வங்கியினூடாக பணத்தை இந்த ஊரில் வாழும் உறவுகளுக்கும் அனுப்பி வைக்கின்றனர். இலங்கைவங்கி காங்கேசன்துறைக் கிளையின் நீடித்த கருமபீடமாக அன்று இளவாலையில் உதயமாகிச் சிறிது சிறிதாகப் பலம்பெற்று நவீன தொழில்நுட்ப வசதிகளையும் உள்ளடக்கி ஒரு சிறந்த சிறு கிளையாகப் பிரகாசிக்கும் இந்த வங்கிக்கிளை இளவாலை மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக விளங்குகின்றது.

இளவாலையிலிருந்து இலங்கை வங்கியின் இந்தக் கிளை வேற்றூர் ஒன்றுக்கு நகர்த்தப்படுவதற்கான முயற்சிகள் உயர் அதிகாரிகள் மட்டத்தில் மெற்கொள்ளப்படுவதாக ஒரு தகவல் இப்பொழுது கசிந்துள்ளமையால் வடிக்கையாளர்கள் பெரும் மனச்சஞ்சலம் கொண்டுள்ளனர். இந்தத் தகவல் உண்மையா? அல்லது வதந்தியா என்று அறிய வாடிக்கையாளர்கள் துடிக்கின்றனர்.

இளவாலையில் வேறு எந்த ஒரு வங்கியின் கிளையும் இல்லாத காரணத்தால் இளவாலை மக்களும் அயற்கிராம மக்களும் இந்தக் கிளையே கதி என்று நம்பி உள்ளனர். இந்த நம்பிக்கையைத் தகர்க்கும் விதத்தில் இலங்கை வங்கி அதிகாரிகள் இளவாலையிலிருந்து இந்த வங்கிக் கிளையை வேற்றூருக்கு நகர்த்த மாட்டார்கள் என்று நம்புகிறோம். இலங்கை வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர் உரிய நடவடிகைகளை மேற்கொண்டு இலங்கைவங்கி இளவாலைக் கிளையைத் தொடர்ந்தும் இந்த ஊரில் சிறப்பாக இயங்க வைக்கவேண்டும் என அன்பாகக் கோரி நிற்கின்றோம்.

*மு.பிரேமதாசன்*



## "அமெரிக்காவால் எங்களுக்கு அச்சுறுத்தல்" ஈரான் அதிபர் ஆவேசம்

தெஹ்ரான்.ஒக்.5

அமெரிக்காவால் ஈரான் தொடர்ந்து பொருளாதார அச்சுறுத்தலை எதிர் கொண்டு வருகிறது என்று அந்நாட்டின் தலைவர் அயத்துல்லா அலி காமெனி தெரிவித்துள்ளார். "ஈரான் மக்கள் மிகவும் உணர்வு பூர்வமான காலத்தைக் கடந்து கொண்டிருக்கிறார்கள். அமெரிக்காவின் பொருளாதார அச்சுறுத்தலை ஈரான் தொடர்ந்து எதிர் கொண்டு வருகிறது" என்று அவர் அந்த நாட்டு ஊடகத்தில் உரை நிகழ்த்தும்போது கூறியுள்ளார்.

அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பதவியேற்ற பிறகு, ஈரானுடனான அணு சக்தி ஒப்பந்தத்தை முறிப்பேன் என்றும் ஈரானுடனான அணு ஆயுத ஒப்பந்தம் பைத்தியக்காரத்தனமானது என்றும் கடுமையாக விமர்சித்து வந்தார். ட்ரம்ப் அதிபரான பிறகு ஈரானுடனான ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகியது. இதைத் தொடர்ந்து ஈரான் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்து வருகிறது. ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா நீக்க வேண்டும் எனப்பன்னாட்டு நீதிமன்றம் அமெரிக்காவுக்கு உத்தரவிட்டுள்ள நிலையில் ஈரான் அதிபரின் இந்தக் கருத்தும் வெளிப்பட்டிருக்கிறது.

## இந்தோனேசியா சுனாமித் தாக்கம்; சாவு உயர்வு!

ஜகார்த்தா.ஒக்.5

இந்தோனேசியாவில் கடந்த மாதம் 29ஆம் திகதி சிலாவேசித் தீவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து அங்குள்ள கடற்கரை நகரமான பலுவை, சுனாமி தாக்கியது. இதனால் அந்த நகரம் ஏறக்குறைய அழிந்த நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டது. பலர் சாவடைந்திருந்தனர். சாவடைந்தவர்களின் எண்ணிக்கை இப்போது ஆயிரத்து 400ஆக உயர்ந்துள்ளது.

அங்கு இருந்த பெரும்பாலான வீடுகள், கடலோரத்தில் இருந்த பெரிய அளவிலான குடியிருப்புகள், கட்டடங்கள், விடுதிகள், வணிக வளாகங்கள் என அனைத்தும் இடிந்து தரை மட்டமாகியுள்ளன. அந்த நகரில் வீடுகளை இழந்த மக்கள் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். சுனாமி தாக்குதலில் பாதித்த பலு நகரில் நடைபெறும் மீட்பு பணியில் அந்த நாட்டு இராணுவத்தினரும், பொலிஸாரும் ஈடுபட்டுள்ளனர். சுனாமி தாக்கியதில் நகரிலிருந்த 60 ஆயிரம் வீடுகள் சேதமடைந்துள்ளன. சுமார் 2 லட்சம் பேருக்கு உதவி தேவைப்படுவதாக அரசு தெரிவித்துள்ளது. சாவடைந்தவர்களின் உடல்களைப் புதைக்கும் பணியும் நடைபெற்றுவருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். அத்துடன் அங்கு உறங்கு நிலையிலிருந்த எரிமலை ஒன்று உயிர்ப்புப் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.



### 'ஈரான் மீதான தடையை நீக்க வேண்டும்'

# பன்னாட்டு நீதிமன்றம் தீர்ப்பு மறுக்கின்றது அமெரிக்கா

ஆம்ஸ்ரேர்டம். ஒக்.5

ஈரான் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளை மனிதாபிமான அடிப்படையில் அமெரிக்கா நீக்க வேண்டும் என்று பன்னாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அமெரிக்கா விதித்திருந்த பொருளாதாரத் தடைகளை நீக்கக் கோரிப் பன்னாட்டு நீதிமன்றத்தில் ஈரான் வேண்டுகோள் விடுத்திருந்தது. இது தொடர்பான விசாரணை நெதர்லாந்திலுள்ள பன்னாட்டு நீதிமன்றத்தில் இடம்பெற்றது.





இதில் அமெரிக்கா மற்றும் ஈரான் சார்பில் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர். ஈரான் மீதான அமெரிக்காவின் தொடர் பொருளாதாரத் தடைகள் குறித்த அதன் தீர்ப்பில், மருந்துப் பொருள்கள், உணவு, விவசாயப் பொருள்கள் மற்றும் அடிப்படைப் பொருள்களின் ஏற்றுமதி மீதான பொருளாதாரத் தடைகள் அந்த நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பாதிக்கும். எனவே இதைக் கவனத்தில் கொண்டு ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா நீக்க வேண்டும் என்று கூறியிருக்கிறது. பன்னாட்டு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட இந்தத் தீர்ப்பை, ஈரானிய ஊடகங்கள் ஈரானுக்கு கிடைத்த வெற்றி என்று கொண்டாடி வருகின்றன. இந்த நிலையில், பன்னாட்டு நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பின்பற்றுகிறாரா? அல்லது இந்த வழக்கில் அமெரிக்கா மேல்முறையீடு செய்கிறதா? என்பது குறித்த எதிர்பார்ப்புகள் நிலவின. இந்த நிலையிலே குறித்த தீர்ப்புக்கு அமெரிக்காவின் மதிப்பளிக்காத தன்மை வெளிப்பட்டிருக்கிறது.

சில தசாப்தங்களாக நடைமுறையில் இருக்கும் அமைதி ஒப்பந்தத்தை அமெரிக்கா கைவிடப் போவதாக அறிவித்திருக்கிறது. இந்த ஒப்பந்தத்தை அமெரிக்கா கைவிடும் என அந்த நாட்டின் பாதுகாப்புச் செயலர் மைக் பாம்பியோ கூறியுள்ளார். அமெரிக்காவின் இந்த முடிவானது 1955ஆம் ஆண்டு ஏற்பட்ட அமைதி ஒப்பந்தத்துக்கு பங்கம் விளைவிப்பதாக ஈரான் வாதிட்டது.

இதையடுத்தே அமெரிக்கா ஈரானுக்கு விதித்த தடைகளை நீக்க வேண்டும் எனப் பன்னாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

தீர்ப்பளித்ததற்கு பிறகுதான் அமைதி ஒப்பந்தத்தையே முறித்துக்கொள்ளப்போவதாக மைக் பாம்பியோ அறிவித்திருக்கிறார். இது பன்னாட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு மதிப்பளிக்காத செயற்பாடாக இருக்கிறது.

**பின்னணி**

ட்ரம்ப் பதவியேற்ற பிறகு, ஈரானுடனான அணு சக்தி ஒப்பந்தத்தை முறிப்பேன் என்றும் ஈரானுடனான அணு ஆயுத ஒப்பந்தம் பைத்தியக்காரத்தனமானது என்றும் கடுமையாக விமர்சித்து வந்திருந்தார். இந்த நிலையில்தான் ஈரானுடனான ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகியது. ஆனால் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்த பிற நாடுகள் ஈரானுக்கு ஆதரவு தெரிவித்தன.

ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்து வெளியேறியவுடன் அந்த நாட்டின் மீது பொருளாதரத் தடைகளை அமெரிக்கா விதித்து வருகிறது.


அத்துடன் உலக நாடுகள் நவம்பர் மாதத்துக்குள் ஈரானிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அமெரிக்கா மிரட்டல் விடுத்திருந்தது. ஐ.நாவின் முதன்மை நீதிமன்ற அமைப்பாகப் பன்னாட்டு நீதிமன்றம் செயல்படுகிறது. ஐநா உறுப்பு நாடுகளுக்கு இடையே ஏற்படும் சட்டப்பூர்வமான சச்சரவுகளை நீக்குவது இதன் பணி. ஆனால் இந்த இரண்டு நாடுகளுமே இந்த நீதிமன்றம் மூலம் முன்னர் வழங்கப்பட்ட தீர்ப்புகளை மதித்திருக்கவில்லை. பன்னாட்டுச் சட்டங்களை அமெரிக்கா மதிக்காமல் மீறுவது வரலாறு.

பன்னாட்டுச் சட்ட அமைப்புகள் அமெரிக்காவின் விருப்பங்களுக்கு எதிராக எடுத்த முடிவுகளுக்கு எதிர்மறையாக வினையாற்றுவது அமெரிக்காவுக்குப் புதிதல்ல. பன்னாட்டு நீதிமன்றத்துடன் அமெரிக்காவுக்கு நல்ல உறவு இல்லை. மேலும் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்துடனும் அமெரிக்கா உடன்படுவதில்லை.

## மூழ்கியவரை மீட்கச் சென்ற சுழியோடிகள் சாவு!

கோலாலம்பூர்.ஒக்.5

மலேசியாவில் நீரில் மூழ்கியிருந்த 17 வயதுடைய இளைஞர் ஒருவரை மீட்கும் முயற்சியின்போது ஆறு சுழியோடிகள் நீர்ச்சுழலில் சிக்கிச் சாவடைந்துள்ளனர். பயன்பாட்டில் இல்லாத ஒரு சுரங்கத்தில் உண்டாகியிருந்த ஒரு குளத்தில், நண்பர்களுடன் மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது அந்த நபர் நீரில் மூழ்கியதாகக் கருதப்படுகிறது. அவரை மீட்பதற்கு அந்த நீருக்குள் இறங்கிய சுழியோடிகள், அந்த நீரில் இருந்த சுழலில் சிக்கிக்கொண்ட தாலும், நீரோட்டத்தின் வேகம் அதிகமாக இருந்ததாலும் அவர்களில் ஆறு பேரின் பாதுகாப்பு உபகாரணங்கள், சேதமடைந்து கழன்று விட்டன. அதனாலேயே அவர்கள் இறந்திருப்பதாக அதிகாரிகள் கூறியுள்ளனர். இந்தச் சம்பவம் மலேசியாவின் சிலாங்கூர் மாகாணத்தில் உள்ள சிப்பாங் மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு சுரங்கத்தில் உள்ள நீர் நிலையில் இடம் பெற்றிருக்கிறது.






## சூடானில் இரண்டு விமானங்கள் மோதல்

கார்த்தூம்.ஒக்.5
சூடான் விமான நிலையத்தில் இராணுவ விமானங்கள் இரண்டு மோதி விபத்துக்குள்ளாகியிருக்கின்றன. இதனால் விமான சேவை பாதிக்கப்பட்டிருக்கிறது. சூடான் நாட்டின் தலைநகர் கார்த்தூமில் உள்ள முதன்மை விமான நிலையத்தில் இருந்து இராணுவப் போக்குவரத்து விமானங்கள் இயங்கி வருகின்றன.

நேற்றுமுன்தினம் இராணுவப் போக்குவரத்து விமானங்கள் இரண்டு இந்த விமான நிலையத்தில் தரையிறங்கும் போது ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியிருக்கின்றன. ஒரு விமானம் தரையிறங்கி ஓடு பாதையில் வேகமாகச் சென்றபோது. அதன் வால் பகுதியில் மற்றொரு விமானம் மோதியது. இதில் இரண்டு விமானங்களும் கடுமையாகச் சேதம் அடைந்தன. இந்த விபத்தில் உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை. ஆனால் 8பேர் காயமடைந்திருப்பதாகப் பன்னாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

விமானங்கள் மோதி விபத்துக்குள்ளானதையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விமான நிலையம் மூடப்பட்டிருக்கிறது.




## வேதியியலுக்கான நோபல் பரிசு 2018

ஸ்டொக்ஹோம்.ஒக்.3
2018ஆம் ஆண்டின் வேதியலுக்கான நோபல் பரிசு இந்த முறை இரண்டு பேருக்கு வழங்கப்:படுகின்றது. 2018ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசு வழங்குவது சுவீடனின் தலைநகர் ஸ்டோக்ஹோமில் இடம்பெற்று வருகிறது. 2018ஆம் ஆண்டு வேதியியல் துறையில் பாதைத்திறப்பு ஆய்வுக்காக. பிரான்சிஸ் எச்.ஆர்னோல்ட் மற்றும் ஜோர்ஜ் பி.ஸ்மித் மற்றும் சர் கிரிகரி பி. வின்ட்டர் ஆகியோருக்கு இந்த முறை நோபல் பரிசு வழங்கப்படுகின்றது.

இதில் பிரான்சிஸ் எச்.ஆர்னோல்ட் என்பவர் அமெரிக்காவின் கலிபோர்னியா தொழில்நுட்பக் கழகத்தை சேர்ந்த ஆய்வாளார். 'நொதியங்களின் நெறிவழிப்படுத்தப்பட்ட பரிணாமம்' என்ற ஆய்வுக்காக இவருக்கு நோபல் பரிசு அளிக்கப்பட்டுள்ளது. ஜோர்ஜ் பி.ஸ்மித் என்பவர் அமெரிக்காவின் மிசௌரி பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர். சர் கிரிகரி பி.வின்ட்டர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் எம்.ஆர்.சி. மூலக்கூறியல் உயிரியல் பிரிவில் ஆய்வாளர். இவர்கள் இருவரும் நோய் எதிர்ப்பொருள் மற்றும் புரதங்களின் உண்ணிகள் அல்லது விழுங்கிகள் பற்றிய முக்கிய ஆய்வுக்காக நோபல் பரிசை வெல்கின்றனர்.

இவர்களின் ஆய்வுகள் பின்னர் பெரிய அளவில் மானுட குலத்துக்கு பயனளிக்கும் ஆய்வுகளின் ஆரம்ப கட்டம் என்று நோபல் அக்காடமி தன்னுடைய செய்திக்குறிப்பில் கூறியுள்ளது.

இயற்பியல். மருத்துவம். பொருளாதாரம். அமைதி. இலக்கியம் ஆகிய துறைகளில் மகத்தான சாதனை படைத்தவர்களுக்கு ஆண்டுதோறும் நோபல் பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.



## அமெரிக்கப் போர்க் கப்பலை விரட்டியது சீனக் கப்பல்

பீஜிங்.ஒக்.5
தென் சீனக் கடற்பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த அமெரிக்கப் போர்க் கப்பல் ஒன்றின் பயணப் பாதையை மாற்றிச் செல்லும்படி செய்திருக்கிறது சீனப் போர்க்கப்பல் ஒன்று. தம்முடைய கப்பலுக்கு மிக அருகிலும். முறையற்ற தன்மையோடும் சீனக் கப்பல் பயணித்து வந்ததாகவும் அதனால் அமெரிக்கக் கப்பல் பாதையை மாற்றிக்கொண்டதாகவும் அமெரிக்கக் கடற்படை தெரிவித்துள்ளது. இந்த சம்பவம் நடந்தது சீனா உரிமை கொண்டாடிவரும் சர்ச்சைக்குரிய ஸ்ப்ராட்லி தீவுக் கூட்டத்தில் உள்ள கேவன் மற்றும் ஜோன்சன் பாறைத் தொடர்ப் பகுதியில். அந்தப் பகுதியைக் கடந்து அமெரிக்காவின் 'யு.எஸ்.எஸ். டிகாடர்' போர்க்கப்பல் சென்றுகொண்டிருந்தது. அப்போது சீனாவின் லுயாங் போர்க்கப்பல் டிகாடரை நெருங்கி வந்திருக்கிறது. அப்போது இரண்டு கப்பல்களுக்கும் வெறும் 41மீற்றர் தொலைவே இருந்துள்ளது. இதனால் அமெரிக்கப் போர்க்கப்பல் தனது பயணப்பாதையை அந்தப் பகுதியிலிருந்து விலகிச்சென்றுள்ளது.

சீனாவுக்கும். சர்ச்சைக்குரிய தீவுகள் மற்றும் பாறைத் தொடர்களுக்கு உரிமை கோரிவரும் பிராந்திய நாடுகளுக்கும் இடையில் அவ்வப்போது தகராறு உருவாகும் இடமாகத் தென் சீனக் கடல் மாறிவருவது குறிப்பிடத்தக்கது.

## தமிழகத்தில் கன மழைக்கான சிவப்பு எச்சரிக்கை



புதுடெல்லி. ஒக்ரோபர் 5
வருகிற 7ஆம் திகதியளவில் கனமழை பெய்யும் எனக் கணிக்கப்பட்டுள்ளதால் தமிழகம் முழுவதற்கும் இந்திய வான்னிலை ஆய்வு மையம் சிவபப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது .தென் கிழக்கு அரபிக்கடல் மற்றும் லட்சத்தீவுப் பகுதியில் மேலடுக்குக் காற்றுச் சுழற்சி நிலவி வருகிறது.

இது அடுத்த 24 மணி நேரத்தில் (5 ஆம் திகதி) குறைந்த காற்றழுத்தப் பகுதியாக உருவாகும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. மேலும். அடுத்த 48 மணி நேரத்தில் இது புயலாக மாறி வட மேற்குத்திசையில் நகரும் எனவும் இந்திய வானிலை மையம் தெரிவித்திருந்தது.

தென்மேற்கு வங்கக் கடல் மற்றும் அதனையொட்டியுள்ள தமிழகக் கடலோரப் பகுதிகளில் இதனால் அடுத்த 48 மணி நேரத்துக்கு மிகப் பலத்த மழை பெய்யும் என்றும், அதன் பிறகு மேலும் 3 நாள்களுக்கு பலத்த மழை நீடிக்கும் என்றும் இந்திய வானிலை மையம் தெரிவித்துள்ளது. ஏற்கனவே தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களிலும் புதுச்சேரியிலும் பரவலாக மழை பெய்து வருகிறது.

இந்த நிலையில்தான் தமிழகத்தில் வரும் 7ஆம் திகதி கன மழைக்கான சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் சுமார் 25 செ.மீ அளவு மழை பெய்யும் எனப் பேரிடர் மேலாண்மைத்துறை இயக்குநர் சத்திய கோபால் தெரிவித்துள்ளார்.


இதன்காரணமாக. முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவும் நிவாரண முகாம்களைத் தயார் நிலையில் வைத்திருக்கும்படியும். அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் பேரிடர் மேலாண்மைத்துறை உத்தரவு பிறப்பித்துள்ளது. குறைந்த நேரத்தில் மிக அதிகளவு மழை பெய்திருப்பதாலேயே சிவப்பு எச்சரிக்கையாக விடுக்கப்பட்டுள்ளது.

வானிலை மிகவும் மோசமாக இருக்கும் என்பதால் மக்கள் அபாயகரமான பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கேரளாவில் இந்தச் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்ட போதுதான் கனமழை பெய்தது என்பதும் குறிப்பிடத்தக்கது . தென் கிழக்கு அரபிக்கடலில் புயல் உருவாக உள்ளதாகவும் சென்னை வானிலை மையம் நேற்று முன்தினம் (3.10.2018) அறிவித்திருந்தது.

அத்துடன் 5ஆம் திகதிவரை இந்த கால நிலைத் தொடரும் என்றும் கூறப்பட்டது.

## 476கோடிக்கு ஏலம்போன சீன ஓவியம்!



சீனாவின் புகழ் பெற்ற ஓவியர் ஸா வூ கி. 'ஜூயின் ஒக்ரோபர் 1985' எனும் தலைப்பில் அவர் வரைந்த அரூப ஓவியம் ரூ.476 கோடிக்கு (இந்திய மதிப்பில்) ஏலம் போயிருப்பது பெரும் சாதனையாகக் கருதப்படுகிறது.

புகழ்பெற்ற சோதபீஸ் ஏல நிறுவனத்தின் ஹொங்கோங் கிளையில் நடைபெற்ற ஏலத்தில் ஸா வூ கியின் ஓவியம் இந்தச் சாதனையை நிகழ்த்தி யிருக்கிறது. 1920ஆம் ஆண்டில் சீனாவில் பிறந்த ஸா வூ கி, 1948ஆம் ஆண்டில் பாரிஸுக்கு இடம்பெயர்ந்தவர். மேற்கத்தேய நவீனத்துவக் கலையின் தாக்கம் கொண்ட அவர், கீழைத்தேய கலையின் தத்துவவியலையும் மேற்கத்தேயக் கலையின் தொழில்நுட்பங்களையும் இரண்டறக் கலந்து அரூப ஓவியங்கள் வரையும் கலைத் திறன் படைத்தவர். 2013ஆம் ஆண்டில் இயற்கை எய்திய ஸா வூ கியின் ஓவியம் அவரது இறப்புக்குப் பிறகும் பெரும் வரவேற்பைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.



'நல்லாட்சி' என்னும் அரசு வந்தது



அது விலை உயர்வு என்ற பெயரில் வந்தது

**ஆசிரியர்:**
கும்பகர்ணன் மாதக் கணக்கில் தூங்கினான். இது என்ன காலம்?

**மாணவன்:** கொசுவே இல்லாத காலம் சார்..!"

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அறிமுகம் இல்லாதவர்களிடம் அதிக பேச்சு வேண்டாம். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணி நிறைவேற்றுவது நல்லது. வருமானம் சராசரியாக இருக்கும்.

**இடபம்:** கடந்த கால உழைப்பால் பலனடைவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உருவாகும். தாராள பணவரவு கிடைக்கும்.

**மிதுனம்:** வழக்கத்திற்கு மாறான பணி தொந்தரவு தரலாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தைப் பாதுகாக்கவும். பணவரவு பெறுவதில் தாமதம் உண்டாகும்.

**கடகம்:** உங்கள் நலன் விரும்புபவரை சந்திப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும். ஆதாயம் பன்மடங்கு உயரும்.

**சிங்கம்:** பணிகளில் மேம்போக்காக ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை அளவுடன் இருக்கும். பணவரவு ஓரளவுக்கு இருக்கும்.

**கன்னி:** இனிய அனுபவங்களால் உற்சாகம் பெறுவீர்கள். முக்கியமான விஷயங்களில் சுமூக தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் கொடுத்த வாக்குறுதி நிறைவேறும்.

**துலாம்:** நேர்மையான குணத்தை வெளிப்படுத்துவீர்கள். நண்பர், உறவினர் பாராட்டுவர். தொழில், வியாபாரம் செழிக்கும். உபரி வருமானம் கிடைக்கும்.


**விருச்சிகம்:** பிடிவாதத்தால் சிரமத்திற்கு ஆளாகலாம். தொழில், வியாபாரம் சீராக கூடுதல் உழைப்பு அவசியம். இலாபம் ஓரளவுக்கு இருக்கும்.

**தனுசு:** யாரிடமும் வாக்குவாதம் செய்ய வேண்டாம். பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற புதிய வாய்ப்பு கிடைக்கும்.

**மகரம்:** மனதில் சந்தோசம் நிலைத்திருக்கும். குடும்பத்தினரின் வழிகாட்டுதலை ஏற்று பின்பற்றுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் பணவரவு அதிகரிக்கும்.

**கும்பம்:** நண்பரின் உதவியால் நன்மை அடைவீர்கள். உற்சாகத்துடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் மூலதனம் செய்வீர்கள்.

**மீனம்:** குடும்பத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் கடின உழைப்பு தேவைப்படும். நிலுவை பணம் வசூலிப்பதில் நிதானம் பின்பற்றவும்.



சினிமா

# ரஜினியின் 'பேட்ட' படத்தில் சசிக்குமார்

சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிப்பில் இயக்குநர் கார்த்திக் சுப்புராஜ் இயக்கி வரும் 'பேட்ட' படத்தில் பிரபலங்கள் பலரும்நடித்துவருகின்றனர். ரஜினிபடத்தில்இத்தனை பிரபலங்கள் ஒன்று கூடியிருப்பது ஆச்சரியமான விடயமாகப் பார்க்கப்படுகின்றது.

இந்தப் படத்தில் சிம்ரன், த்ரிஷா, விஜய்சேதுபதி, பாபி சிம்ஹா, மேகா ஆகாஷ், குரு சோமசுந்தரம், உள்ளிட்ட பிரபலங்கள் இந்தப் படத்தில் நடித்து வருகின்றனர்.

தற்போது இந்த பட்டியலில் சசிகுமாரும் இணைந்துள்ளார். சசிகுமாருக்கு இந்தப் படத்தில் மனதில் நிற்கும் பாத்திரம் அமைந்துள்ளதாகவும், ரஜினிக்கும் அவருக்கும் இணைந்து முக்கிய காட்சிகள் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

**நாளை**

**06.10.2018**

சனிக்கிழமை

**புரட்டாதி 20**

திதி: துவாதசி பி.ப. 3.12 வரை
நட்சத்திரம்: மகம் பி.ப. 4.34
சுபநேரம்: 3.02 – 4.32 வரை
ராகுகாலம்: 9.02– 10.32 வரை




# நாம் அறிவுடையவர்கள்! எம்மால் முடியும்!

சுத்தமான காற்று!
சுகாதாரமான சுற்றுச்சூழல்!

ஆகியஇரண்டும்உலகம்எதிர்நோக்கும்மிகப்பெரிய சவால்களாக உள்ளன.
நோய்கள் உருவாக அடிப்படைக் காரணமாக மனிதர்கள்வெளியேற்றும்குப்பைகளே அமைகின்றன.
எம் வீடு போலத்தானே நாடும்! என்ற எண்ணம் எப்போது ஒவ்வொருவருக்கும் உருவாகிறதோ அப்போது அந்த நாடு சுத்தமான நாடாகக் காட்சிதரும்.
சுகாதாரமான சூழல் கொண்ட உலகின் பல்வேறு நாடுகளைக் காணும்போது வியப்பாக உள்ளது.
எப்படி இவர்களால் மட்டும் நகரை சுத்தமாக வைத்துக் கொள்ளமுடிகிறது?
இதற்கு யார் காரணம்?
அரசுமட்டுமா?
அரசு விதிக்கும் அபராதம் என்னும் அச்சுறுத்தல் தான் காரணமா?
என்ற கேள்விகள் மனதில் எழுகின்றன.

ஆழ்ந்துநோக்கினால்மக்களின்பொதுநலன்குறித்த சிந்தனையும், தனிமனித ஒழுக்கமுமே ஒரு வீட்டையும், நாட்டையும் சுகாதாரமாக வைத்துக் கொள்ள உதவும் என்பது புரிகிறது.
எம்மைச்சுற்றி கொஞ்சம் திரும்பிப் பாருங்களேன்.
நகரைத் தூய்மையாக வைத்துக்கொள்ள அரசு எவ்வளவு நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது? அதைப் பொதுமக்கள் எந்த அளவுக்கு மதித்து நடக்கிறார்கள்?

கிராமத்து சி.சி.ரிவி கமரா



தெருவுக்கு ரெண்டு இருக்கும்!

மாணவர்களை மதிப்பதில்தான்
கல்வியின் இரகசியம் அடங்கியுள்ளது.

எமர்சன்

எங்கும் இருள் என்பது கிடையாது.
அறியாமைதான் இருள். அந்த அறியாமை
இருளை அகற்றிவிட நாம் உலகமெங்கும்
அறிவொளியைப் பாய்ச்சுவோம்!

இங்கர்சால்

கட்டாயப்படுத்திப் புகுத்தப்படும் அறிவு மனதில் பதியாது.

பிளேட்டோ

என்றாவது நான் ஆசிரியரானால், அது கல்வி போதிக்க மட்டுமல்ல, கல்வி கற்பதற்காகவும் இருக்கும்.

டொரோதி தெலூஸி

புன்னகை மன்னன்@PUNNAGAIMANNAN3



உங்களை
அடையாளப்படுத்திக்
கொள்ளுங்கள்...
பிரபல்யப்படுத்திக்
கொள்ளாதீர்கள்..!

# கூடா நட்பு



ஒரு கிணற்றிலே வயோதிபத்தவளை ஒன்று தன் துணையுடன் வசித்து வந்தது. இந்தத் தவளைக்கு வயதாகிவிட்டதால் அங்கிருந்த ஏனைய இளம் தவளைகள் அதை ஏளனம் செய்வது. தொல்லை கொடுப்பதுமாக இருந்தன. இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத அந்தத் தவளை கிணற்றின் இராட்டினத் தோண்டி வழியே வெளியே வந்து ஏனைய தவளைகளை என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தது. அப்போது கிணற்றுக்கு அருகில் இருந்த பாம்புப்புற்று அதன் கண்ணில் பட்டது. அப்போது அதற்கு ஒரு யோசனை தோன்றியது. உடனே அந்தப் புற்றருகே சென்று பாம்பை நட்புறவு கொள்ள "பரம எதிரியான என்னுடன் நட்பு வைத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புவது ஏன்?" என்று கேட்டது.

"என்னுடன் இருக்கும் சில தவளைகள் என்னைத் தினம்தோறும் துன்புறுத்திக் கொண்டாடுகின்றன. என்னால் பொறுக்கவே முடியவில்லை. அவற்றை அழிக்கத்தான் உன் உதவி கோரி வந்திருக்கிறேன்" என்றது தவளை.

"நான் எப்படி உன்னிடத்துக்கு வரமுடியும்?" என்றது பாம்பு. தான் வெளியே வந்த இராட்டினத்தின் வழியே உன்னைக் கிணற்றினுள்ளே அழைத்துச் செல்கிறேன்" என்றது தவளை.

பாம்பு யோசித்தது. நானோ தினமும் உணவுக்கு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறேன். இந்தநிலையில் தவளை என் உதவியைக் கேட்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்" என்று எண்ணியபடி தவளையுடன் அந்தக் கிணற்றுக்குள் சென்றது பாம்பு.

கிணற்றுக்குள் சென்ற பாம்பு வயோதிபத் தவளைக்கு தொல்லை கொடுத்து வந்த தவளைகள் அனைத்தையும் தின்று அழித்தது. வயோபத் தவளை மகிழ்ச்சியுற்றது. ஆனாலும் அந்த மகிழ்ச்சி நெடுநாள்கள் நீடிக்கவில்லை. பாம்பு தவளையிடம் "உன்னுடைய எதிரிகள் எல்லோரையும் அழித்துவிட்டேன். இனி நீ என் பசிக்கு வேறு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும்" என்றது.

அந்தத் தவளையோ "நண்பரே நீர் வந்த வேலை முடிந்துவிட்டது. உமது உதவிக்கு நன்றி. எனக்கு உமது உதவி இனிமேலும் தேவையற்றது" என்றது.

ஆனால் பாம்போ கோபத்துடன் உன்னை நம்பித்தான் நான் இங்கு வந்தேன். இப்போது என்னுடைய இடத்தில் வேறு உயிரினங்கள் வந்து குடியேறியிருக்கும். எனக்கு அங்கு இரை தேட வாய்ப்பில்லை. ஆக, நீதான் எனக்குத் தினம்தோறும் ஒரு தவளையை உணவாகக் கொடுக்க வேண்டும். இல்லையேல் உன் கூட்டத்தில் இருப்பவர்களை நான் என் விருப்பப்படி பிடித்துத் தின்று என் பசியைப் போக்கிக் கொள்வேன் என்று அச்சுறுத்தியது. அந்த வயதான தவளை பாம்பு சொன்னதைக் கேட்டு பயந்து போயிற்று.

தினம்தோறும் ஒரு தவளையை பாம்புக்கு இரையாகக் கொடுத்து வந்தது. இறுதியில்அந்தத் தவளை தனது மகனையும் பாம்புக்கு பலி கொடுக்க வேண்டி ஏற்பட்டது. இப்போது அந்த முதிய தவளையும் அதன் மனைவியுமே எஞ்சியிருந்தனர்.


இப்போதுதான் விட்ட பெரிய தவறை முதிய தவளை உணர்ந்தது. தன் வினை தன்னையே சுடுவதை உணர்ந்தது. தன்னால் தன் இனம் அழிந்ததற்காக மிகவும் கவலைப் பட்டது. இறுதியில் தம்மையாவது காத்துக் கொள்ள கணவனும் மனைவியுமான இரு தவளைகளும் இராட்டினம் வழியே கிணற்றிலிருந்து வெளியேறி வேறு கிணற்றை நோக்கி செல்லத் தொடங்கின.

**நட்புக் கூட நல்லவர்களிடையேதான் அமைய வேண்டும் .
இல்லையேல் இழப்பு எமக்குத்தான்.**



# வாசிப்பு மாதம் ஆரம்பம்

- ஒக்ரோபர் மாதம் வாசிப்பு மாதமாகும்.
- வாசிப்பு ஒவ்வொரு மனிதனையும் பூரணமாக்குகின்றது.
- வாசிப்பு மாணவர்களிடத்தில் பல்வேறு திறன்களை விருத்தி செய்கின்றது.
- வாசிப்பில் பல விதங்கள் உண்டு.
- சைக்கிளில் சவாரி செய்வது போன்று ஆரம்பத்தில் மெதுவாக வாசிக்கத் தொடங்கி படிப்படியாக வேகமாக வாசிக்கலாம்.
- அமைதியான ஒரு சூழலில் அமர்ந்து மௌனமாக வாசிக்கலாம்.
- அடுத்தவருக்கு இடையூறு இல்லாமல் உரத்து வாசித்தும் பழகலாம்.
- வாசிக்கும் போது ஆடு நுனிப் புல் மேய்வதுபோல மேலோட்டமாக வாசிக்காமல் கருத்தூன்றி வாசிக்க வேண்டும்.




- வாசிக்கும் போது. முதலில் எழுத்துக்களைச் சரியாகக் கூட்டி சொற்களையும் பின்னர் படிப்படியாக சொற்களைச் சேர்த்து வாக்கியங்களையும் வாசிக்க வேண்டும்.
- முதலில் மெதுவாகவும் பின்னர் தொடர்ந்து வாசிப்பின் வேகத்தைக் கூட்டியும் விரைவாகவும் வாசிக்க வேண்டும்.
- வாசிக்கும்போது குறிகளுக்கேற்ப நின்று நிதானித்து வாசிக்க வேண்டும்.
- நாம் தினமும் பாடப்புத்தகம் தவிர்ந்த வேறு விடயங்களையும் சிறிதளவாவது வாசித்துப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.
- நாம் வாசித்துக் கிரகித்தவற்றை நண்பர்களிடம் பகிர்ந்து கொண்டு தெளிவுபடுத்திக் கொள்ளலாம்.
- தினமும் ஏதாவது ஒரு சிறிய கதை, கவிதை அல்லது சிறிய கட்டுரை அல்லது பாடப்புத்தகத்தின் ஒரு சிறு பகுதியையாவது தெளிவாக பிழையின்றி வாசிக்கலாம்.
- சிறுவயதில் இருந்தே வாசிப்புப் பழக்கம் ஏற்பட தினசரிப் பத்திரிகைச் செய்திகளை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.
- தினம் தினம் தொடர்ந்து வாசிப்பவனே சிறந்த கல்வியைப் பெற்று உயர்வடைகிறான்.
- எனவே ஒக்ரோபர் மாதம் முழுமையுமாக பயனுள்ள ஒரு விடயத்தை வாசிப்புக்கு என்று ஒதுக்கி வாசிக்கத் தொடங்குவோம்.
- வாசிப்பின் அவசியத்தை உணர்வோம்.
- வாசிப்பைச் சுவாசித்து நேசிப்போம்.

# வர்ணம் தீட்டுவோம்







# காந்தித் தாத்தா

காந்தி தாத்தா நம் தாத்தா
கருணை மிக்க பெருந்தாத்தா
சாந்த மூர்த்தி என்றென்றும்
சத்திய மூர்த்தி நம் தாத்தா

காலை மாலை எப்பொழுதும்
கடவுள் நினைவே கொண்டவராம்
வேலை இன்றிச் சிறு பொழுதும்
வீணாய்ப் போக்க மாட்டாராம்

கண்ணிற் சிறந்த
விடுதலையை
கருதி வாழ்ந்தார் நம் தாத்தா
மண்ணில் யாவர் வாழ்விற்கும்
வழிகாட்டிடுவார் நம் தாத்தா
சத்தியம் பேசுதல்
அவர் கொள்கை
தருமம் காத்தல் அவர் கொள்கை
இத்தல மக்கள் யாவர்க்கும்
இன்பச் சுதந்திரம்
அவர் கொள்கை



# சுற்றுலா!

த.கிருபாகரன்


“மூத்தோர் வாரத்தின் ஐந்தாவது நாளில் சிறந்த தேடலைச் செய்வது காலத்தின் தேவையாக உள்ளது. மூத்தோர்கள் வாழும் குடும்பங்களில் மகிழ்ச்சியைத் தேடிக்கொண்டிருக்கும் நாம், இயற்கையை நேசிப்பதன் ஊடே இறுக்கமாகக் கட்டப்பட்டிக்கும் எங்களது தன்னலவாதத்தில் இருந்து விடுபடலாம். இதன் மூலம் யாதர்த்தங்களை உள்வாங்கும் எமது கொள்கைகளும் மறுசீலனைக்கு உட்படுத்தப்படலாம் என்ற நம்பிக்கையின் வழி, இனி வரும் காலத்திலாவது முன்னோக்கிய பயணங்களை கண்டுகொள்வோம். மனிதர்கள் இத்தகைய மாயைகளுக்குள் இருந்து மீண்டு எழுவதற்கு சுற்றுலாக்கள் உதவுகின்றன. சுற்றுலாக்களின்போது மெய்மறந்த இயற்கைச் சூழல் ஏற்படுத்தப்படுகின்றது. சுற்றுலாக்கள் மூத்தோரின் வாழ்வில் விரிசல்களையும், கீறல்களையும் மாற்றி, சமூக உண்மைகளை ஏற்று வாழக் கூடிய மனப்பக்குவத்தை ஏற்படுத்திவிடுகின்றன.”



இன்றைய காலநகர்வில் குடும்பங்களில் சிதைவும், உடைவும், அதன்பாற்பட்ட அதிர்வலைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன. இதனிடை அவசரமான உலகத்தின் இயங்குநிலை வெளிப்பாடாக ஆர்ப்பரிப்புகளும், அட்டகாசங்களும் ஆங்காங்கே புரையோடிப் போயுள்ளன. ‘மனித அவலங்கள்’ நிரந்தரமாக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக மகிழ்ச்சி என்ற சமத்துவங்கள் காணாமல் போய்விட்டன.

**மகிழ்வே சிறந்த அனுபவம்**

இன்று, ‘திருமண நிகழ்வு, மரணச் சடங்கு, பூப்புனித நீராட்டு விழா, புதுமனைப் புகுவிழா, பிறந்தநாள் கொண்டாட்டம், 31ஆவது நினைவுநாள்’ என அனைத்து நிகழ்வுகளும் முடிவில் சோகமயமாகவே முடிவடைகின்றன. இதற்கு



எழுச்சி பெறாமல், பகிரப்படாமல் ஆழ்மனதில் படிந்துபோயுள்ள குரூரமான உணர்வுகளே காரணமாக அமைந்துவிடுகின்றன. குறைந்தது யாரோ ஒருவர் வில்லானக அல்லது வில்லியாக இருந்து இந்தநிலையை ஏற்படுத்தி விடுகின்றனர். ‘உர்’ என்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு பிரச்சினைகளை உருவாக்கி விடுகிறார்கள். ஏதோ ஒன்றைத் தூக்கிப்பிடித்துக்கொண்டு சன்னதம் ஆடுகின்றார்கள். உண்மையில் மகிழ்வுக்காகச் செய்யப்படும் நிகழ்வுகளைக் கூட ஏன் மகிழ்ச்சிகரமான சூழமைவில் செய்து கொள்ள முடியவில்லை என்பது தொடர்பில் சிந்திப்பதற்காகவே இந்த விடயங்கள் பகிரப்படுகின்றன. எங்களில் பலரும் மகிழ்வாக இருப்பதையே விரும்புகின்றனர். அதை செவ்வனே அனுபவம் கொள்வதற்கு சில தயார்ப்படுத்தல்களை நாம் செய்யவேண்டும்.

**பகுத்தறிவோடு செயற்படுவோம்**

எல்லைகளைப் போட்டு, அயலவர்கள் கூட எட்டிப்பார்க்க முடியாத அளவுக்கு காவலரண்கள் அமைத்து, தப்பித்தவறிக் கூட யாரும் வந்துவிடக்கூடாது என்பதற்காக கடிநாய்களைச் செல்லப் பிராணிகளாக வளர்க்கும் குடும்பக் கட்டமைப்புகள் மாற்றம் பெற வேண்டும். ஒருவரை ஒருவர் அளவளாவி அன்பு பாராட்டுகின்ற சமத்துவமான சகோதரத்துவம் குடும்ப நிலையிலும் சமூக நிலையிலும் தோற்றம் பெற வேண்டும். வார்த்தைளுக்குத் தடைபோட்டு அவற்றை வறுமை நிலைக்கு உட்படுத்தி விடக்கூடாது. பகுத்தறிவுடைய மனிதர்களாக இந்த மாயையில் இருந்து விடுபட்டு உயிர்த்தெழ வேண்டும்.

**சுற்றுலாக்கள்**

இதற்குரிய சிறந்த வழிவகையாக சுற்றுலாக்கள் அமைந்துள்ளன. ஆம், குடும்பங்கள் இணைந்து மேற்கொள்ளும் கூட்டுக்குடும்பச் சுற்றுலாக்கள் பலவிதமான தேடல்களுக்கும், மனநிலை மேம்பாட்டுக்கும் களம் அமைத்துக் கொடுத்துள்ளன. சுற்றுலாக்களின்போது மெய்மறந்த மகிழ்வான சூழல் ஏற்படுகின்றது. கைதடி அரச முதியோர் இல்லத்தின் மூத்தோர்கள் வாரத்தில் இரு தடவைகள் வெளி முதியோர்களுடன் இணைந்து சுற்றுலா அழைத்துச் செல்லப்படுகின்றனர். இதன் மூலம் மகிழ்வூட்டல் மற்றும் அனுபவங்களைப் பகிர்வதற்குரிய வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. புது இடங்கள், இரசனைக்குரிய இடங்களைப் பார்க்கும்போது பழைய நினைவுகள் மீட்டப்படுகின்றன. மூத்தோரின் நடத்தையிலும் மனப்பான்மையிலும் மாற்றங்கள் நிகழ்கின்றன. அவர்கள் சமூக உண்மைகளை ஏற்று வாழக்கூடிய மனப்பக்குவம் உருவாக்கப்படும். தென்பகுதியில் இருந்து வடபகுதிக்கு வந்து செல்லும் மக்கள்கூட நாளாந்த வாழ்வியலில் இவற்றை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். நாளாந்தம் வீடுகளில்கூட வெளியில் சென்று வருபவர் ஏகாந்தமாக இருக்க, வீட்டில் இருப்பவர்தான் அன்றைய பிரச்சினையின் பிரதானியாக விளங்குவது அவதானிக்கப்பட்டுள்ளது.

**இளமைகள் காணும் சுற்றுலாக்கள்**

பாடசாலைகளில் சிறுவர்கள் ஆசிரியர்களுடன் இணைந்து மேற்கொள்ளும் சுற்றுலாக்களில் கூட அனைத்துப் பிள்ளைகளும் பங்குபற்றுவதில்லை. இதற்குப் பெற்றோரின் அனுமதி கிடைக்காமையும் காரணமாகின்றது. ‘கற்றுணர்தல்’ என்பது மூளையில் நிலைத்திருக்கக்கூடியது. இதற்கான வாய்ப்பாக பாடசாலைச் சுற்றுலாக்கள் அமைகின்றன. இங்கு கட்டுப்பாட்டுடனான சுற்றுலா அவசியமாகின்றது. ஒரு தலைமை வழி காட்டுவதற்கு அமையும்போது தான் அங்கு சிறந்த பெறுபேறுகளும், மகிழ்ச்சியும் குடியமர்ந்து கொள்ளும். இளைஞர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் மேற்கொள்கின்ற சுற்றுலாக்களில் அதீதமாக மகிழ்வூட்டல் போக்குகளை நோக்கிய நகர்வுகள் காணப்படுவது பொருத்தப்பாடற்ற செயற்கூறாக அமைந்துவிடுகிறது. சுற்றுலாக்கள் என்பவை எப்போதுமே எங்களுடைய துயரங்களைத் துரத்துவதற்கும், அந்த வெறுமைக்குள் மகிழ்வை குடியிருத்திவிடுவதற்கும் ஏற்பாடு செய்வதாக அமைய வேண்டும். இந்தநிலைக்கு ஒருவர் தலைமையேற்க வேண்டும். சுற்றுலாக்களின் காட்சிகள் தத்தமது மனங்களைப் பேச வைக்கின்றன. சிறப்பான சிந்தனை ஓட்டங்களுக்கு வடிகால்களாக அமைக்கின்றன. மனங்களை வென்றெடுக்கக் கூடிய பல விடயங்களை கண்டுணரக் கூடியதாக சுற்றுலாக்கள் அமைந்துவிடுகின்றன.

**முதுமையில் சுற்றுலா**

குறிப்பாக மூத்தோர்கள் ஆன்மிகச் சுற்றுலாக்களில் மெய்மறந்து விடுகின்றார்கள். ‘இனி நான் செத்தாலும் பரவாயில்லை’ என்று மகிழ்வின் உச்சக்கட்டத்தில் அவர்கள் உதிர்க்கும் வார்த்தைகள் உண்மையில் சுற்றுலாவின் தார்ப்பரியத்தை உணர்த்திவிடுகின்றன. விலங்குகளில் சிரிக்கத் தெரிந்த பிராணி மனிதன் மட்டும் தான். இப்படியான மனிதன் மகிழ்வை சுற்றுலாவில் பெற்று வாய் நிறைய சிரிக்கின்றான் என்ற உண்மையை ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும்.

பண்டைய காலங்களில் நாடோடி வாழ்க்கையில் மகிழ்வு கிடைத்தமையால் குடும்பங்கள் இடர்நிலை காணவில்லை. உள்நாட்டுப் போர்ச் சூழ்நிலை காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்வுகள்கூட ஒரு வகையில் வலிந்த சுற்றுலாக்களாகவே அமைந்தன. அந்தவேளையில்க் கூட துன்பங்கள் குடும்பங்களில் நிலை பெற்றிருந்த மகிழ்வை அதிகமும் காவு கொள்ளவில்லை என்றே கூறலாம். நிரந்தரமான வீடமைத்து நேரமில்லை என்று எப்போது நாகரீகமாகக்கூறத் தொடங்கிவிட்டமோ, அன்று முதல் குடும்பங்களில் மகிழ்ச்சிக்குப் பஞ்சம் ஏற்பட்டுவிட்டது. இந்தநிலையில் இருந்து நாம் விடுபட வேண்டும்.



**நிஜமான மகிழ்வூட்டல்**

மூத்தோர்கள், சிறுவர்கள், இளைஞர்கள் என அனைவருமே சமூகத்தின் காத்திரமான பங்குதாரர்கள் . இவர்கள் ‘குடும்பம்’ என்ற கட்டமைப்புக்குள் வட்டமடிக்கும் போதுதான் கனதியான சுமைகள் குடியேறிக்கொள்கின்றன. இங்கு, ‘பார்த்தல்,இரசித்தல்,சிரித்தல்,மகிழ்தல்’ என்பவை சுற்றுலாக்களின் சிறப்பான பிரசவிப்புக்களாக விளங்குகின்றன. இவற்றின் தரிசிப்புக்கள் தான் நிஜ மகிழ்வூட்டலுக்கு உரித்தானவை. ஆம், ‘குடும்பக் கட்டமைப்பிலிருந்து தற்காலிக வெளியேறுகை, உள்வருகை’ என்ற செயற்பாட்டு வெளியாக ‘சுற்றுலா’ தனித்துவம்பெறுகிறது.

மனிதனுக்கு ஓய்வு தேவை. ஓய்வு வேறு சூழலில் ஏற்படுத்தப்படும் போது முழுமையான நிம்மதி கிடைக்கின்றது. ஒவ்வொரு குடும்பமும் வெளியில் போய்வருவது தேவையான ஒன்று. இதற்காகத்தான் பல காலங்களில் பலவித திருவிழாக்கள் என ஆலயங்களில் நிகழ்வுகள் மூதாதையர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. திருவிழாக்களுக்காக சுற்றுலா போதல் என்பது ஆரோக்கியமான விடயம்.

**சிரித்து வாழப் பழகுவோம்**

ஒருவர் ஆடலாம், பாடலாம், கதைக்கலாம். ஆனால் சிரிக்கின்றாரா என்பதே முக்கியமானதாகப் பார்க்கப்படுகின்றது. அழும்போது இயங்கும் நரம்புகளைவிடவும் சிரிக்கும் போது பல நரம்புகள் அசைவியக்கம் பெறுகின்றன. இது கூட உடலியல் ரீதியில் ஆரோக்கியமானதே. அண்மையில் சினிமாப்பாடல்களை துவிச்சக்கர வண்டியில் ஒலிக்கவிட்டபடி ஊர் சுற்றியாக வலம் வரும் ஒரு அன்பரைச் சந்தித்தேன். அவர், ‘அலங்கரித்த துவிச்சக்கர வண்டியில் சுற்றுவது பிரதானமல்ல, இறை பணிக்காக பயணிக்கின்றேன், இரவு வேளைகளில் பொது இடங்களிலும் தெரிந்தவர்களுடன் தங்குகின்றேன்.” - என்றார். உண்மையில் அவருடைய வார்த்தைகள் அவர்கொண்ட மகிழ்வின் பிரவாகத்தை தந்தன. முகத்தில் மிகப்பெரிய பிரகாசம் செந்தளித்தது.

**சிறந்த கைங்கரியம்**

ஆக, குடும்பங்களில் மகிழ்ச்சியை தேடிக்கொண்டிருக்கும் எங்களுடைய தான தன்னலவாதங்களை இல்லாமல் செய்வோம். இதனூடே யதார்த்தங்களை உள்வாங்கும் கொள்கைகளும் மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்படலாம். நம்பிக்கையின் பற்றுதலோடு முன்னோக்கியப் பயணிப்போம்.

இவ்வாறாக சுற்றலாக்கள் ஏழ்மையிலும் நேர்மையைத் தந்து, கோபத்திலும் பொறுமையை வென்று, தோல்வியிலும் விடாமுயற்சியைத் தந்து, வறுமையிலும் உதவி செய்யும் மனதை ஏற்படுத்தி துன்பத்திலும் துணிவு தந்து, செல்வத்திலும் எளிமையாக வாழும் நிலையுடன் பதவியிலும் பணிவை காத்திடும் கைங்காரியத்தை ஏற்படுத்தும்.

## மரண அறிவித்தல்



### திருமதி இரத்தினம் ஆசீர்வாதம்

உரும்பிராய் கிழக்கு, சிவன்வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் ஆசீர்வாதம் 03.10.2018 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசீர்வாதத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான விசுவாசம் - மரியம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நெடுந்தீவைச் சேர்ந்த நீக்கிலாஸ் - திரேசம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும், அன்ரன்ஜோர்ஜ் (கொழும்பு), கொன்சன்ரைன் (பிரான்ஸ்), ஜொஸ்பீனா (லண்டன்), மேரிமெற்றில்டா (சுவிஸ்), லக்ஸ்மன் (லண்டன்), பெனாட்றூட்டன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், இன்பராணி (கொழும்பு), வளரி (பிரான்ஸ்), பீலிக்ஸ்ரவி (சுவிஸ்), ரவிச்சந்திரன் (லண்டன்), செறின் (லண்டன்), சுபாஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும், யூட் ஜெனிஸ்ரன், கிளேபஸ்ரியன், அலெக்ஸ், நிக்கோலா, வீவிகா, மெல்சன், பிறீடா, லூடா, வெலிஸ்ரன், லிபிசா, லெறிசா, பிறைன், அல்சா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான பிலேந்திரன், தைரியநாதன், இராசையா, செல்வராசா, அன்னம்மா, இராசம்மா மற்றும் செல்லத்துரை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான கிறிஸ்தோப்பர், யாக்கோப்பு, சிசிலியா, எலிசபெத், ஞானப்பூ, இராசமணி, பூமணி, ஜோசப், தேவதிரவியம் மற்றும் அருளப்பு, கமலா, தாசன், கமலாம்பிகை, இராசலட்சுமி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 08.10.2018 திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் உரும்பிராய் புனித மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவன்வீதி,**
**உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS/20317)(11)

**பணியாளர்கள் தேவை**

வாடிக்கையாளர் சேவை உத்தியோகத்தர் மற்றும் பொதியிடல் வேலைகளுக்குப் பெண் பிள்ளைகள் தேவை.
**05.10.2018, 06.10.2018 ஆகிய தினங்களில் நேரில் வரவும்.**
**நேரம் - மு.ப. 11.00 - பி.ப. 5.00 வரை**
**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
**யாழ்ப்பாணம்.**
**077 657 9349**
(CS/20308)(11)

**நாகபூஷணி திருமணசேவை**

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.
**257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**021 222 9306, 077 138 7596**
(CS 18781/15/7/17)

## மரண அறிவித்தல்

### திருமதி ஆசைமுத்து ஞானம்



பிறப்பு 05.02.1932 இறப்பு 04.10.2018

யாழ்ப்பாணம் நீர்வேலி வடக்கு, பரலோக மாதா கோவில் வீதியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆசைமுத்து ஞானம் நேற்று (04.10.2018) வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னர் - மரியா தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான வலத்தீஸ் - வெரோணிக்கா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஞானத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான அருளப்பு, சிமியோன் செல்லத்துரை திரேசம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் யேசுநேசி (கனடா), கிறிஸ்ரினம்மா (வவா - பிரான்ஸ்), யேசுராணி (நீர்வேலி), காலஞ்சென்ற ஜெயசீலன் மற்றும் மரியகொறற்ரி (நீர்வேலி), இருதயமேரி (ஜேர்மனி), லலிதா (லண்டன்), நெல்சன் (கனடா), செல்வா (ரமேஸ் கனடா), றூபன் (அன்ரனிதாஸ் லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் யோசப் (கனடா), ஜீவா (கனடா), காலஞ்சென்றவர்களான யேசுராசா, யேசுதாஸ், சாள்ஸ் (ஜேர்மனி), குமார் (லண்டன்), றூபி (கனடா), ஜஸ்லின் (கனடா), விஜயா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி அடக்க ஆராதனை பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**யோசப் (கனடா +647 290 3873),**
**நெல்சன் (கனடா 416 312 2639),**
**செல்வா (ரமேஸ் கனடா 647 996 5908),**
**றூபன் (லண்டன் 44 7442 329349),**
**சாள்ஸ் சுசி (492 306 258148),**
**குமார் லலிதா (44 203 581 9271),**
**வவா (பிரான்ஸ் 33 758 377 161),**
**யேயந்திரன் (0777 968 155)**

**தகவல்: குடும்பத்தினர்**


# மரண அறிவித்தல்

**பிறப்பு 13.07.1987**

## பத்மநாதன் ஆதவன்
## (HUAWEI Marketing City Manager)

**இறப்பு 02.10.2018**

உடுவிலைப் பிறப்பிடமாகவும், இல.220, கச்சேரி நல்லூர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட பத்மநாதன் ஆதவன் (புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவன் - 2006) 02.10.2018 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.



அன்னார் பத்மநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - புனித பத்திரிசியார் கல்லூரி) - ஜெயநாயகி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், குமணன், வானதி, ஆரணி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெயறஞ்சனின் (லண்டன்) மைத்துனரும், யாத்விகா, கபிநாஷ் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கதிரேசு தம்பதிகள் (உடுவில்), திரு.திருமதி வைரமுத்து தம்பதிகள் (கோப்பாய்) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான இராசஇரத்தினம், ஈஸ்வரி ஆகியோரின் மருமகனும், நவரத்தினம், செல்வரத்தினம், காலஞ்சென்ற கனகநாயகம் மற்றும் செல்வராசா, கனகலிங்கம், நாகரட்ணம், காலஞ்சென்றவர்களான தவமணி, பரமேஸ்வரி மற்றும் தங்கமலர், காலஞ்சென்ற யோகவதி மற்றும் காளிதர்சினி, கௌசலாதேவி ஆகியோரின் பெறாமகனும், ராஜமனோகரன், மனோறஞ்சன் (லண்டன்), ஜெயப்பிரகாஷ், காயத்திரி, கஜேந்திரன் (லண்டன்), திவாகரன், நிஷாந்தி, நிலானி, கேசவன், சைலஜன், சோபிதா, ரிஷபா (ஆஸ்திரேலியா), பிரதீபா (ஆஸ்திரேலியா), ஜனகன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2018) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.220, கச்சேரி நல்லூர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**


**தகவல்**
**குடும்பத்தினர்**

**077 679 8656**

(CS/20311)(11)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யா/மீசாலை விக்னேஸ்வரா**
**மகா வித்தியாலயம்**



எமது மகா வித்தியாலய ஆசிரியர்

**திரு.கந்தசாமி சுதேஸ்கரன்**
**(BA,M.ed,PGDE SLTS - II)**

அவர்கள் கல்வி அமைச்சினால் 2018 ஆம் ஆண்டு சிறந்த ஆசிரியருக்கான **"குரு பிரதீபா பிரபா"** விருதினை இன்று (05.10.2018) வெள்ளிக்கிழமை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பெறுவதையிட்டு மகிழ்ச்சியடைவதுடன் அவர் மேலும் விருதுகள் பல பெறவும் வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்:- **பாடசாலைச் சமூகம்,**
**யா/ மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்**

(IN/16807)(11)

## உயர்வு கண்டு உளமார வாழ்த்துகின்றோம்



Best Wishes **திருமதி லலிதாமலர் முகுந்தன்** Best Wishes

(B.B.A(Hons), M.Phil (Edu), S.L.P.S I)

எமது கல்லூரி அதிபர் அவர்கள் **23.11.2015** முதல் **இலங்கை அதிபர் சேவை தரம் I** இற்கு பதவி உயர்வு பெற்றதையிட்டும், 05.10.2018 இன்று பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சிறந்த அதிபர்களுக்கான தேசியமட்ட **"குரு பிரதீபா பிரபா"** விருதினை இரண்டாவது தடவையாகப் பெறுவதையிட்டும் பாராட்டி வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

**வாண்மையும் மேன்மையும் மேலும் பெற்று சேவையால் உயர்ந்து, பேறுகளும் பெருவாழ்வும் துலங்க இறை ஆசி வேண்டுகின்றோம்.**

வாழ்த்துவோர்:- **சேவையாளர் சங்கம்,**
**யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி,**
**சாவகச்சேரி.**

(sub 1681)(11)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**கிளி/ தர்மக்கேணி அ.த.க.பாடசாலை**



எமது பாடசாலை அதிபர்

**திரு.வேலுப்பிள்ளை**
**செல்வகுமார்**
**(BA(Hons) Dip.in.Edu MA (marit)**
**M.ed, சமாதான நீதவான்)**

அவர்கள் இன்று (05.10.2018) வெள்ளிக் கிழமை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத் தொகுதியின் தாமரைத் தடாக மண்டபத்தில் நடைபெறும்கௌரவிப்பு விழாவில் **"குரு பிரதீபா பிரபா"** விருதினை பெற்றுக்கொள்வதையிட்டு பெரு மகிழ்வடைகிறோம். மேலும் பல பட்டங்கள் பதவி உயர்வுகள் கிடைக்கப்பெற இறை ஆசி வேண்டி பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்:- **பாடசாலைச் சமூகம்,**
**கிளி/தர்மக்கேணி அ.த.க.பாடசாலை**

(C/1682)(11)

# கண்ணீர் அஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
| --- | --- |
| 13 . 07 . 1987 | 02 . 10 . 2018 |

## பத்மநாதன் ஆதவன்

*நண்பனே உன் நாடகம் முடிக்கும் நேரம் தான் வந்ததோ.....*
*நம் நண்பனாக பிறந்தாய் - எம் ஊரில் அனைவருக்கும்*
*நண்பனாய் வாழ்ந்தாய். ஆசிரியரின் மகனாக,*
*எம் ஆசிரியர் அனைவருக்கும் மகனாக பாடசாலையின் பாக்கியமாய்*
*வாழ்ந்தாய் - இனியவனே, உன் நட்பு முகம் காணாதோர் வையகத்தில்*
*இல்லை வைகறையிலும் புள்ளி மானாய் துள்ளி திரியும் - எம் நண்பனே*
*உன் வாடிய முகம் - நாம் இன்றுவரை கண்டதில்லையே*
*நட்பின் அத்தியாயம் கற்றுத்தந்தவனே - எம் கர்ணனே*
*அஸ்தமனம் ஆனாயோ இன்று. சதிகாரன் அவன் கோட்டை*
*தேடி உனை மீட்க வழியில்லையோ.*

**உம் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.**
**ஆழ்ந்த கவலையை பகிர்ந்து கொள்கின்றோம்.**

**நண்பனின் பிரிவால் துயருறும் :**
**" புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர்கள் 2006."**

## மரண அறிவித்தல்

## நாராயணபிள்ளை கனகரத்தினம்

***(அன்னக்கிளி)***



நயினாதீவு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கச்சேரி நல்லூர் வீதி (கிருபா லேணர்ஸ் அருகில்) வசிப்பிடமாகவும் கொண்ட நாராயணபிள்ளை கனகரட்ணம் (அன்னக்கிளி ஹோட்டல் உரிமையாளர்) கடந்த (03.10.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாராயணபிள்ளை - தங்கமுத்து தம்பதிகளின் பாசமிகு புதல்வனும் காலஞ்சென்றவர்களான பூரணலிங்கம் - கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகனும் சந்தானலெட்சுமியின் அன்புக்கணவரும் கிருஷ்ணதாசன் (அன்னக்கிளி பான்சி ஹவுஸ்), கிருஷ்ணவதி, கிருஷ்ணவேணி (லண்டன்), காலஞ்சென்றவர்களான கிருஷ்ணகுமார், சுரேஸ்குமார் மற்றும் கிசோக்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுதர்சினிதேவி, வசந்தரூபன் (அன்னக்கிளி ஹோட்டல்), யசோதரன் (லண்டன்), சயிதரா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புமாமனாரும் காலஞ்சென்ற வர்களான கமலாச்சி, குணசிங்கம், பரராஜசிங்கம், வரதலெட்சுமி மற்றும் நாகலெட்சுமி (லண்டன்), சரசுலெட்சுமி ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான ராசரெத்தினம், நடராசா மற்றும் கோபாலன், காலஞ்சென்றவர்களான விக்கினேஸ்வரன் தனலட்சுமி, வரதலட்சுமி மற்றும் யோகரத்தினம், காலஞ்சென்ற பரமேஸ்வரன் மற்றும் இராசலட்சுமி, லலிதாம்பாள், மனோன், சரவணபவன் ஆகியோரின் மைத்துனரும் பாலசுப்பிரமணியம், தணிகாசலம், புவனேஸ்வரி, சுகந்தி, கதிரமலைநாதன், பரமானந்தம், தருமதேவி, காலஞ்சென்ற தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச்சகலனும் ரஜீபா (வேம்படி மகளிர் கல்லூரி), ஜதுஷா (இந்து ஆரம்ப பாடசாலை), வினோஜன் (புனித. பரியோவான் கல்லூரி), சுரேகா (சுண்டிக்குளி), பவித்ரா, ஹரிசாந், யருசன் (லண்டன்), ஷகிரா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள்எதிர்வரும்(07.10.2018)ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக் காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கச்சேரி நல்லூர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(CS 184539/15/18)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


வவுனியாவில் 16,000 ஏக்கர்
உழுந்து
உற்பத்தி
வலயம்
அக்டோபர்
05
வவுனியா
நகரசபை கலாசார
மண்டபத்தில்
வடபிராந்தியத்தில் 550 ஏக்கர்
பாரம்பரிய நெல்
உற்பத்தி
வலயம்
முல்லைத்தீவு
நிலக்கடலை
உற்பத்தி
வலயம்
அக்டோபர்
06
முல்லைத்தீவு
முத்தையன்கட்டில்
யாழ்ப்பாணம்
மாம்பழம்
உற்பத்தி
வலயம்
அக்டோபர்
06
யாழ்ப்பாணம்
சாவகச்சேரியில்
"நாம் பயிரிட்டே
நாம் உண்போம்"
வடக்கின் துரித விவசாய மீள் எழுச்சி
எமது நாட்டுக்குத் தேவையான பயிர்களை
எமது நாட்டிலேயே உற்பத்தி செய்தலுக்கான
வேலைத்திட்டங்களை வலுவூட்டுவதுடன்
விவசாய பயிர்ச்செய்கை
அபிவிருத்தி வலயங்களை
ஸ்தாபித்தல் உள்ளிட்ட
பல விவசாய அபிவிருத்தி
திட்டங்கள்
விவசாய அமைச்சர்
கௌரவ மஹிந்த அமரவீர அவர்களின்
தலைமையில்
விவசாய இராஜாங்க அமைச்சர்
கௌரவ வசந்த அலுவிஹார உட்பட
விவசாய பிரதி அமைச்சர்
கௌரவ அங்கஜன் இராமநாதன் அவர்கள்
ஆகியோரின் பங்குபற்றலுடன் இடம்பெறும்
கமத்தொழில் அமைச்சு
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
கமநல அபிவிருத்தித் திணைக்களம்




குருபகவான்தெய்வீகஅறிவுக்கும்,வேதாந்தஞானத்துக்கும்,செல்வவளத்துக்கும் பொருள் சேமிப்புக்கும் காரணகர்த்தா. அந்த வகையிலே இன்று குருப்பெயர்ச்சி இடம்பெற்றுள்ளது. வக்ரநிவர்த்திஅடைகின்றகுருபகவான்துலாம்ராசியில்இருந்து விருச்சிகராசிக்குஇடம்பெயர்கிறார். மேடம்முதல்மீனம்வரை12ராசிகளுக்குமான குருப்பெயர்ச்சி பலன்களை இப்பகுதியில் நோக்குவோம்.

## 4.10.2018 – 28.10.2019




எதிலும்புதுமையைப்புகுத்துபவர்களில்வல்லவர்களான நீங்கள், பொது உடைமைச் சிந்தனையும் அதிகம் உள்ளவர்கள். நிறை குறைகளை அலசி ஆராய்ந்து மற்றவர்களை துல்லியமாக கணிக்கும் நீங்கள் சிரமப்படுபவர்களை கைதூக்கி விடுபவர்கள். இதுவரை உங்கள் ராசிக்கு 5ஆம் வீட்டில் அமர்ந்து உங்களின் வருங்காலத் திட்டங்களை நிறைவேற்றியதுடன், குடும்ப வருமானத்தையும் ஓரளவு உயர்த்திய குருபகவான் 04.10.2018 முதல் 28.10.2019 வரை ராசிக்கு 6ஆம் வீட்டில் மறைகிறார். சகட குருவாச்சே! சங்கடங்களையும், எதிர்ப்புகளையும் தருவாரே என்று கலங்காதீர்கள். ஓரளவு நல்லதே நடக்கும். வாழ்க்கையின் சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள். சமூகத்தின் மீது சின்னச் சின்ன கோப தாபங்கள் வந்து நீங்கும்.

சிலர் உங்களை தவறான போக்கிற்குத் தூண்டுவார்கள். உதவி செய்கிறேன் என்று சொல்லியிருந்தவர்கள் உங்களுக்கு உதவாமல் போகக்கூடும். எனவே மாற்றுவழியை யோசிப்பது நல்லது. சிலர் உங்களைப் பார்த்தால் புகழ்ந்து பேசுவர், நீங்கள் இல்லாத போது உங்களை விமர்சிக்கவும் செய்வர். அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகளில் தாமதம் வேண்டாம். எல்லா இடங்களிலும் நான் தான் விட்டுக் கொடுத்துப் போக வேண்டுமா என்றெல்லாம் சில நேரங்களில் உணர்ச்சிவசப்படுவீர்கள். மனிதர்களின் இரட்டை வேடத்தை நினைத்துக் கோபப்படுவீர்கள். நீங்கள் சிரித்தால் உலகமும் சிரிக்கும், நீங்கள் கோபப்பட்டால் உலகமும் கோபப்படும் என்பதை மறந்துவிடாதீர்கள். முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க நேரிடும்.

### குருபகவானின் பார்வை தரும் பலன்கள்

குருபகவான் குடும்ப ஸ்தானத்தை பார்ப்பதால் பணவரவு உண்டு. குடும்பத்தில் நிம்மதி உண்டு. அடுத்தடுத்து சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். பெரிய மனிதர்களின் நட்பு கிடைக்கும். சாமர்த்தியமாகப் பேசி காய் நகர்த்துவீர்கள். பழைய நகையை மாற்றி புது வடிவமைப்பில் ஆபரணம் வாங்குவீர்கள். வாகனத்தை சீர்செய்வீர்கள். மகளுக்குத்திருமணம்நிச்சயமாகும். மகனின் அலட்சியப்போக்கு மாறும். குரு10ஆம்வீட்டைப்பார்ப்பதால்புது வேலைகிடைக்கும். தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். கடினமான வேலைகளையும் எளிதாக முடிக்கும் சக்தி கிடைக்கும். ஒரு சொத்தைக் காப்பாற்ற மற்றொரு சொத்தை விற்கவேண்டிவரும். குரு12ம்வீட்டை பார்ப்பதால் கோயில் கும்பாபிஷேகத்தை முன்னின்று நடத்துவீர்கள். சுபசெலவுகளும் அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் புத்துணர்ச்சி பெறுவீர்கள். நீண்ட நாள்களாக போக நினைத்த புண்ணியத் தலங்களுக்குச் சென்று வருவீர்கள்.

### குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்

04.10.2018 முதல் 20.10.2018 வரை உங்களின் சப்தமஜீவனாதிபதியான குருபகவான் விசாக நட்சத்திரத்தில் செல்வதால் வேலைச்சுமை, வீண் அலைச்சல், கணவன்மனைவிக்குள் மனஸ்தாபம், எதிலும் பற்றற்ற போக்கு, மனைவிக்கு மருத்துவச் செலவுகள், உத்தியோகத்தில் மறைமுகத் தொந்தரவுகள் வந்து போகும். உங்களைப் பற்றி சிலர் அவதூறு பேசுவார்கள். அரசுக்கு செலுத்த வேண்டிய வருமான வரி, சொத்து வரிகளையெல்லாம் தாமதமின்றி செலுத்தப் பாருங்கள். 21.10.2018 முதல் 19.12.2018 வரை உங்களின் அஷ்டமபாக்யாதிபதியான சனி பகவானின் அனுஷம் நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் பணம் வரத் தொடங்கும். வருமானம் உயரும். விலை உயர்ந்த ஆபரணங்கள் வாங்குவீர்கள்.

தந்தையின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பிதுர்வழி சொத்துப் பிரச்சினை முடிவுக்கு வரும். வேற்றுமதத்தவர்கள், அண்டைமாநிலத்தில் இருப்பவர்களால் அனுகூலம் உண்டு. புதுப் பதவி, பொறுப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். 20.12.2018 முதல் 12.03.2019 மற்றும் 09.08.2019 முதல் 27.10.2019 வரை உங்கள் ராசிநாதனும் சுகாதிபதியுமான புதனின் கேட்டை நட்சத்திரத்தில் செல்வதால் திடீர் பணவரவு உண்டு. தோற்றப்பொலிவு கூடும். கல்வியாளர்களின் நட்பு கிடைக்கும். அறிவு பூர்வமாகப் பேசி எல்லோரையும் கவருவீர்கள். பழைய பிரச்சினைகள் தீரும். தாயாரின் உடல் நிலை சீராகும். பழைய கடனில் ஒருபகுதியை செலுத்துவதற்கு உதவிகள் கிடைக்கும். வாகனம் வாங்குவீர்கள். தாய்வழி உறவினர்கள் உறுதுணையாக இருப்பார்கள்.

### குருபகவானின் அதிசார வக்ர சஞ்சாரம்

13.03.2019 முதல் 18.05.2019 வரை குருபகவான் அதிசாரத்தில் ராசிக்கு 7ஆம் வீட்டில் கேதுவின் நட்சத்திரமான மூல நட்சத்திரத்தில் செல்வதால் அக்காலக்கட்டத்தில் செல்வாக்குக் கூடும். பணவரவு உண்டு. மனைவி வழியில் உதவிகள் கிடைக்கும்.

### குருபகவானின் வக்ர சஞ்சாரம்

10.04.2019 முதல் 18.5.2019 வரை மூல நட்சத்திரத்தில் வக்ர கதியிலும் மற்றும் 19.05.2019 முதல் 08.08.2019 வரை கேட்டை நட்சத்திரத்திலும் வக்ர கதியில் செல்வதால் இக்காலக்கட்டத்தில் உறவினர், நண்பர்கள் வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். பூர்வீக சொத்தில் உங்கள் ரசனைக் கேற்ப சில மாற்றங்கள் செய்வீர்கள். வெளிவட்டாரத்தில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். கோயில் கும்பாபிஷேகத்தில் முதல் மரியாதை கிடைக்கும். கடன் பிரச்னைகள் வந்து செல்லும்.




தொலைதூரச்சிந்தனையுடையநீங்கள், நாளைநமதேஎன்ற நம்பிக்கையுடன் எதையும் செய்பவர்கள். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்கும் நீங்கள், எதிரிகளையும் சிந்திக்க வைக்கும் செயல்திறன் கொண்டவர்கள். இதுவரை உங்களின் ராசிக்கு சுகவீடான 4ஆம் வீட்டில் அமர்ந்து கொண்டுவீண் விரயத்தையும், ஏமாற்றங்களையும், இனம் புரியாத பயத்தையும், தாயாருடன் பகைமையையும் ஏற்படுத்திய குருபகவான் 04.10.2018 முதல் 28.10.2019 வரை ராசிக்கு 5ம் வீட்டில் அமர்வதால் உங்களை புதிய பாதையில் பயணிக்க வைப்பார். உங்கள் வாழ்வில் எதிர்பாராத அதிரடி மாற்றங்கள் உண்டாகும். அடிப்படை வசதி, வாய்ப்புகள் உயரும். தயக்கம், தடுமாற்றம் நீங்கும்.

குழப்பங்களிலிருந்து விடுபட்டு தெள்ளத் தெளிவாக சில முக்கிய முடிவுகளெல்லாம் எடுப்பீர்கள். குடும்பத்தில் கலகமூட்டியவர்களை இனம் கண்டறிந்து ஒதுக்கித் தள்ளுவீர்கள். வீண் சந்தேகத்தாலும், சச்சரவுகளாலும் பேசாமல் இருந்த கணவன் மனைவிக்குள் இனி அன்யோன்யம் பிறக்கும். மகளின் திருமணத்தை கோலாகலமாக நடத்துவீர்கள். மகனுக்கும் நல்ல இடத்தில் மணப்பெண் அமையும். அவருக்கு அயல்நாடு செல்லும் வாய்ப்பும் வரும். குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தைப் பாக்கியம் உண்டாகும். பூர்வீகச்சொத்துபங்குகைக்குவரும். தாயாருக்குஇருந்தநோய்விலகும். அவருடனான மோதல்களும் நீங்கும். தாய்வழி உறவினர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள்.

### குருபகவானின் பார்வை தரும் பலன்கள்

குருஉங்களின்9ம்வீட்டைபார்ப்பதால்உங்களின்இலக்கைநோக்கிமுன்னேறுவீர்கள். வெற்றி பெற்ற மனிதர்களின் நட்பு கிடைக்கும். பாகப்பிரிவினை சுமுகமாக முடியும். கோயில்கும்பாபிஷேகத்தைதலைமையேற்றுநடத்துவீர்கள். தந்தையாருடன்இருந்த மனஸ்தாபம் நீங்கும். அவரின் ஆரோக்கியம் சீராகும். சொந்த ஊரில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். பதினோறாவது வீட்டை குரு பார்ப்பதால் உங்களின் புகழ், கௌரவம் கூடும். மூத்த சகோதரர் வகையில் ஒற்றுமை பலப்படும்.

### குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்

04.10.2018 முதல் 20.10.2018 வரை உங்களின் சஷ்டமபாக்யாதிபதியான குருபகவான்சுயநட்சத்திரமானவிசாகம்நட்சத்திரத்தில்செல்வதால்பணப்புழக்கம்கணிசமாக உயரும். அடுத்தடுத்த சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். எதிர்ப்புகள் குறையும். கல்யாணம் கூடி வரும். குடும்பத்தில் இருந்த சச்சரவுகள் குறையும். வழக்கு சாதகமாகும். தந்தையார் ஆதரிப்பார். அவருக்கு இருந்த ஆரோக்கியக் குறைவு சீராகும். பிதுர்வழி சொத்து பிரச்சினை முடிவுக்கு வரும். வாகனத்தை சீர் செய்வீர்கள். 21.10.2018 முதல்19.12.2018வரைஉங்களின்சப்தஅஷ்டமாதிபதியானசனிபகவானின்அனுஷ நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் வேலைச்சுமையால் பதட்டம் அதிகரிக்கும். வீண் சந்தேகத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க நேரிடும்.

உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்துவார்கள். மனைவிக்கு மருத்துவச் செலவுகள் ஏற்படும். வாகனத்தில் செல்லும் போது கவனம் தேவை. சிறுசிறு விபத்துகள் ஏற்படக் கூடும். 20.12.2018 முதல் 12.03.2019 மற்றும் 09.08.2019 முதல் 27.10.2019 வரை சேவகாதிபதியும் விரயஸ்தானாதிபதியுமான புதனின் கேட்டை நட்சத்திரத்தில் குரு செல்வதால் திடீர் பயணங்கள், வீண் செலவுகள், கனவுத் தொல்லை, சளித் தொந்தரவு, கழுத்துவலி, வாகனப்பழுது வந்துநீங்கும். இளைய சகோதரர்களால் சங்கடங்கள் வரும். தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். முக்கிய விஷயங்களை நீங்களே நேரடியாக சென்று முடிப்பது நல்லது.

### குருபகவானின் அதிசார வக்ர சஞ்சாரம்:

13.03.2019 முதல் 18.05.2019 வரை குருபகவான் அதிசாரத்தில் ராசிக்கு 6ஆம் வீட்டில் கேதுவின் நட்சத்திரமான மூலம் நட்சத்திரத்தில் செல்வதால் அக்காலக்கட்டத்தில் வாகனம் தொடர்பில் செலவுகள் ஏற்படும். விலை உயர்ந்த மின்னணு, மின்சார சாதனங்கள் அவ்வப்போது பழுதாகும். யாருக்கும் பணம் வாங்கித் தருவதில் குறுக்கே நிற்க வேண்டாம்.

### குருபகவானின் வக்ர சஞ்சாரம்

10.04.2019 முதல் 18.5.2019 வரை மூலம் நட்சத்திரத்தில் வக்ர கதியிலும் மற்றும் 19.05.2019 முதல் 08.08.2019 வரை கேட்டை நட்சத்திரத்திலும் வக்ர கதியில் செல்வதால் இக்காலக்கட்டத்தில் பழைய பிரச்சினைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள்.

தேவையற்ற செலவுகளை தவிர்க்கப்பாருங்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். சாணக்கியத்தனமாக பேசி காரியம் சாதிப்பீர்கள். தள்ளிப்போன விஷயங்கள் முடியும். தூரத்துச் சொந்தங்கள் தேடி வருவார்கள். குடும்பத்தினருடன் சென்று குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். சிலர் வீடு மாறுவீர்கள். ஒரு சொத்தை விற்று மறுசொத்து வாங்குவீர்கள்.

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாணக் கணக்காய்வுக் குழு, கணக்காய்வாளர் அதிப திக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. வடக்கு மாகாண சபையில் மாகாணக் கணக்காய்வுக் குழு அறிக்கை தொடர்பில் விவாதம் இடம்பெற்றது. இதன்போது, வடக்கில் இடம்பெற்ற மிகப் பெரிய ஊழல் மோசடியான நெல்சிப் தொடர்பில் உறுப்பினர்களால் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. நெல்சிப் மோசடி தொடர்பில் மாகாணசபை உறுப்பினர்களை உள்ளடக்கிய குழு விசாரணை நடத்தியது. வடக்கு மாகாண தலைமைச் செயலரால் ஒரு விசாரணை நடத்தப்பட்டது. இந்த விசாரணைகளுக்கு என்ன நடந்தது? இந்த மிகப் பெரிய ஊழல் தொடர்பில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது என்று உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வல்வெட்டித்துறை நகர சபையில் 14 லட்சமும், பருத்தித்துறை பிரதேச சபையில் 7 லட்சமும் அந்தச் சபைகளின் தவிசாளர் மற்றும் செயலர்களிடமிருந்து மேன்மிகை அறவீடு செய்ய கணக்காய்வாளர் அதிபதியினால் எமது ஒப்புதல் கேட்கப்பட்டது. ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அவர்களாலேயே இதனை அறவிட முடியும். தொடர் நடவடிக்கை அவர்கள் எடுப்பார்கள் -என்றார். (5,26)

கமுகு மட்டைகள் உங்களிடம் உள்ளதா ? விற்க விரும்புகிறீர்களா ?

அழையுங்கள் - 077 209 0661

### தவறிவிட்டது

பருத்தித்துறை, சிவன்கோயிலடியைச் சேர்ந்த குகராஜா சாந்திக்குமார் என்பவரின் தேசிய அடையாள அட்டை (773442754V) மற்றும் மோட்டார் வாகனத்தின் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேஸ் 02.10.2018 அன்று பருத்தித்துறை நகரத்தினுள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

077 310 7402 (CS/20315)(11)

### அறை வாடகைக்கு

நல்லூர் கிழக்கில் சமையலறை வசதிகளுடன் கூடிய அறை ஒன்று வாடகைக்கு உண்டு. சிறிய குடும்பத்திற்கு அல்லது பெண்களுக்கு மாலை 7.00 மணிக்கு பின்னர் தொடர்புகொள்ளவும்.

துசி - 075 2039 589 நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம்.

### பணிப்பெண் தேவை

யாழ். நகரை அண்டிய பகுதியில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு குழந்தை பராமரிப்பதற்கு 40 வயதிற்குட்பட்ட பணிப்பெண் தேவை

தொடர்பு - 076 262 1511, 077 248 7967

### இப்பொழுது திரையில்

A Cinema Entertainments (Pvt) Ltd Release



வடக்கு, கிழக்கு

| | | |
|---|---|---|
| | | Majestic Jaffna 10.30/1.30/4.15/7.30 pm |
| Raja Jaffna 10.30/1.30/4.30/7.00/9.30 | Saru Cinema Point Pedro 10.30/2.30/6.30 | Shanthi Batticaloa 10.30/2.30/6.30/9.30 |
| Vijaya Batticaloa 10.30/2.30/6.30 | G.K.Cinemax Kalmunai 10.30/2.30/6.30 | Vasanthi Vavunia 10.30/2.30/6.30 |
| Archana Akkaraipattu 10.30/2.30/6.30 | Nelson Trinco 6.30 / 9.30 | SELLAM PREMIER Chenkalady 10.00/2.00/6.00/9.45 |
| Bala Chavakachcheri 10.30/2.30/6.30 | SARASWATHY Trinco 10.30/6.30 | |

மற்றும் நாடெங்கிலும் உள்ள ஏனைய திரையரங்குகளிலும்

Distributed by:
Cinema Entertainments (Pvt) Ltd (CEL)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது பாடசாலை அதிபர்

**திருவாளர் செல்லையா இராமநாதன்**

**(B.A, Dip.in.Edu,DSM, SLPS I)**

அவர்கள் அதிபர் சேவை I இற்கு (SLPS I) தரமுயர்த்தப்பட்டதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். அவர்கள் தம் வாழ்வில் பல சிறப்புக்களைப் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/ அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை

(CS/20310)(11)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது பாடசாலை ஆசிரியை

**திருமதி மலர்மகள் பத்மநாதன்**

**(S.L.T.S - I, B.ed)**

அவர்கள் இன்றைய தினம் கொழும்பு பண்டார நாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் **குரு பிரதீபா பிரபா** விருதினைப் பெற்றுக் கொள்வதையிட்டு அவரை உளமாரப் பாராட்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:- பாடசாலைச் சமூகம்,
யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

(CS/20297)(11)

## மரண அறிவித்தல்

### பென்ஜமின் செல்லையா பாலசிங்கம்

*(சட்டத்தரணி, கரவெட்டி மத்தி)*



பெத்தேல், கரவெட்டி மத்தி, கரவெட்டியை பிறப்பிடமாகவும் கிறிஸ்தவ இறையியல் கல்லூரி மருதனார்மடத்தினை தமது வாழ்விடமாகவும் கொண்டுள்ள பென்ஜமின் செல்லையா பாலசிங்கம் (சட்டத்தரணி) 03.10.2018 புதன்கிழமை அதிகாலை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு செல்லையா மற்றும் பத்தினிப்பிள்ளை தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற ரூத் மகேஸ்வரியின் கணவரும் காலஞ்சென்ற ராஜசிங்கத்தின் சகோதரனும் திருமதி சிந்தியா சாந்தினி சத்தியமூர்த்தி (லண்டன்), திருமதி செரினா சுனேத்திரா தேவநேசன் (ஆசிரியர் - உடுவில் மான்ஸ் தமிழ் கலவன் பாடசாலை), சாமுவேல் தேவானந்தன் (சிங்கப்பூர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தாமு சத்தியமூர்த்தி, அருட்திரு. தேவசகாயம் தேவநேசன் (தலைவர் - அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை), திருமதி செல்வினி தேவானந்தன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் மகேந்திரன் செந்தூரன், எமி அர்ச்சனா செந்தூரன், போல் பிரசன்னா சத்தியமூர்த்தி, றெஜிணோல்ட் றவின் தேவானந்தன், லிண்டா மரீனா தேவானந்தன், மோலி தேவசுதன் தேவநேசன், ஜோஆஷ் சுதர்சன் தேவானந்தன் ஆகியோரின் அன்புசால் பேரனும் ஈத்தன், மைக்கா, ஷோன் ஆகியோரின் பூட்டனும், றெஜினோல்ட் தேவநேசன், திருமதி ராஜினி ஆசீர்வாதம் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரது உடலானது மக்கள் பார்வைக்காக கரவெட்டியிலுள்ள பெத்தேல் இல்லத்தில் வைக்கப்பட்டு நாளை (06.10.2018) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லடக்க வழிபாடு நடைபெற்று நல்லடக்கத்திற்காக கரவெட்டியிலுள்ள மெதடிஸ்த சேமக்காலைக்கு கொண்டுசெல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

**லிண்டா: 0777100324**
**மோலி: 0765475055**

**தகவல்: திருமதி செரினா எஸ். தேவநேசன் (மகள்)**

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் **கணித பாட ஆசிரியர் ப.அசோகன்** அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி விசாலாட்சி பரமானந்தம்**



அவர்கள் 02.10.2018 செவ்வாய்க் கிழமை இறைபதம் அடைந்துள்ளார். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**மலர்வு 09.06.1935**
**உதிர்வு 02.10.2018**

**ஆசிரியர், நலன்புரிச் சங்கம், கல்விசாரா ஊழியர்கள், யா/ கச்சாய் மகா வித்தியாலயம்.**

(ACH/480)(11)

## கேள்வி ஆவணங்கள் பெற்றுக்கொள்ளல் சபை நிதி - 2018

### புதுக்குடியிருப்பு பிரதேச சபை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு வடமாகாணம்.

2018.09.20 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் எம்மால் பிரசுரிக்கப்பட்ட சபை நிதி - 2018 மூலமான ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள புதுக்குடியிருப்பு பொதுச்சந்தையில் இறைச்சிக்கடைகள் அமைத்தல், முத்தையன்கட்டு ஜீவநகர்பாலம் அமைத்தல் திட்டங்களிற்கான கேள்வி திறத்தல் திகதி 09.10.2018 ஆம் திகதி வரை நீடிப்பு செய்யப்படுவதுடன் 08.10.2018 ஆம் திகதி பி.ப. 2.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 09.10.2018 ஆம் திகதி பி.ப. 2.00 மணிவரையும் கேள்வி ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் அறியத்தரப்படுகின்றது.

**தலைவர், பிரதேசசபைபெறுகைக்குழு, புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.** 2018.10.05

## இணுவில் கந்தசுவாமி கோயில் ஆதனங்கள் தொடர்பான விசேட அறிவித்தல்


மேற்படி ஆலயத்துக்கு அசையும் அசையாத நம்பிக்கைப் பொதுச் சொத்துக்கள் யாவும் நீதிமன்ற தீர்ப்புக்கிணங்க மீளாய்வு செய்யப்பட்டு பதிவாக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது. ஏற்கனவே அசையும் சொத்துக்கள் யாவும் கணக்கெடுக்கப்பட்டு (Stock) பதிவு செய்யப்பட்ட நிலையில் அசையாச் சொத்துக்கள் வெற்றுக்காணிகள், கட்டடங்கள், மனைகள் உள்ள காணிகள் விளை நிலங்கள், வியாபாரத் தளங்கள் உள்ள கோயிலுக்குச் சொந்தமான அனைத்துச் சொத்துக்களும் யாவும் நில அளவை செய்யப்பட்டுப் புதிய பதிவுகள் மேற்கொண்டு நீதிமன்றுக்குச் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.

கோயில் காணிகளைக் கையாளும் அனைத்துத் தரப்பினரும் உடனடியாக நிர்வாக சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

**தர்மகர்த்தா சபை,**
**இணுவில் கந்தசுவாமி கோயில்.** (CS/20316)(11)

## மரண அறிவித்தல்

### சின்னையா சோமு (வர்த்தகர்)



யாழ். காரைநகரைப் பிறப்பிடமாகவும், வட்டக்கச்சி, நயினாதீவு, கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சோமு நேற்று (04.10.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வீரகத்தி செல்லாச்சி தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மீனாட்சி, சங்கரப்பிள்ளை, செல்லம்மா, சின்னம்மா மற்றும் வள்ளிப்பிள்ளை காலஞ்சென்ற சரஸ்வதி ஆகியோரின் அன்புச்சகோதரரும் குணசீலன் (Guna Best Pc), குணராஜா (கொழும்பு), சசிகலா (கொழும்பு), கமல்ராஜ் (கொழும்பு) ஆகியோரின் அன்புத்தந்தையும் தாரகா (கிராம அலுவலர் யாழ். பிரதேச செயலகம்), பவுசியா (கொழும்பு), கேதீஸ்வரன் (கமல், கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் டர்வின்ஸ்ரீ, டரூண்ராஜ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2018) வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் இல. 91, கட்சன் வீதி, வட்டக்கச்சி கிளிநொச்சியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வட்டக்கச்சி மம்மில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 748 3840,
076 416 4171, 077 938 5584

**தகவல் : பிள்ளைகள், மருமக்கள்.**

# முதலமைச்சர் விக்கிக்கு எதற்குசொகுசுவாகனம்

வடக்கு மாகாண சபை கலைக்கப்பட ஒரு சில வாரங்களே உள்ள நிலையில் வடக்கு மாகாண முதலமைச்சருக்கு எதற்காக சொகுசு வாகனம் என்று கேள்வி எழுப்பியுள்ள , அமைச்சர் மஹிந்த சமரசிங்க, தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரம் வழங்கப்படமாட்டாது என தீர்மானம் எடுக்கப்பட்டுள்ள நிலையில் அவருக்கு மட்டும் வாகனம் வழங்க முடியாது என்று தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செய்தியாளர் சந்திப்பில் நேற்று கேள்வி எழுப்பப்பட்டபோதே, அமைச்சர் மகிந்த சமரசிங்க இவ்வாறு பதிலளித்துள்ளார்.

மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி விவகார அமைச்சின் ஊடாக வட மாகாணசபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் 60 ஆயிரம் டொலர் பெறுமதியான வாகனம் ஒன்றை கொழும்பு அரசிடம் கோரியிருந்த நிலையில் இறுதியாகக் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் அவரது கோரிக்கை கொண்டு வரப்பட்டிருந்தது. எனினும் அவரது கோரிக்கையை அமைச்சரவையில் நிராகரிக்கப்பட்டது. (8)

## பாலியாற்றுத்...

மாறு வடக்கு மாகாண சபை ஒருமனதாகத் தீர் மானித்துள்ளது. வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் முன்மொழிய, வடக்கு மாகாண முதல்மைச்சர் சி.வி.விக்னேஸ் வரன் வழிமொழிய, எதுவித எதிர்ப்புமின்றி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற கூட்டத்தில், குடாநாட்டின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மன்னார் மாவட்டத்தின் பாலியாற்றிலிருந்து குடிநீரைக் கொண்டு வரும் திட்டம் அவைத் தலைவரால் முன்வைக்கப்பட்டது. அந்தத் திட்த்துக்கான சாத்தியம் தொடர்பில் துறைசார் திணைக்கள அதிகாரிகள் ஆராய்ந்தனர். மாகாணநீர்பாசனத் திணைக்களத்தினர் ஆரம்பக்கட்ட சாத்தியக் கூற்று அறிக்கையைத் தயாரித்துள்ளனர். இது தொடர்பில் கடந்த மாதம் 2ஆம் திகதி தலைமை அமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்திலும் ஆராயப்பட்டுள்ளது.

கூட்டத்தில் ஆராயப்பட்டதற்கு அமைவாக வடக்கு மாகாண தலைமைச் செயலரினால், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் விநியோக அமைச்சின் செயலருக்கு வடக்கு மாகாண தலைமைச் செயலர் அ.பத்திநாதனினால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

அந்தக் கடிதத்தில், மாகாண நீர்ப்பாசனத் திணைக்களமானது வவுனிக்குளம் திட்டத்தின் கீழ் நீரோட்டத்தில் கீழ்ப் பாலியாற்று வடிநிலத்தில் அண்ணளவாக 165 சதுரகிலோமீற்றர் விஸ்தீரணமுடைய நீரேந்துப் பகுதியை யாழ். குடாநாட்டுக்கு நீர் விநியோகம் செய்வதற்குச் சாத்தியமான மேற்பரப்பு வளமாக இனங்கண்டுள்ளது.

மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மூலமாக நடாத்தப்பட்ட ஆரம்பக்கட்ட சாத்தியப்பாட்டு ஆய்வானது மன்னார் மாவட்டத்தின் பெரும்பரப்புக்குளத்தில் அண்ணளவாக 37 எம்.சி.எம். கொள்ளளவுடைய நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதன் மூலமாக யாழ். குடாநாட்டின் நீர் விநியோகத்துக்கான கேள்வியானது அடையப்பட முடியும் என்று வெளிப்படுத்தியுள்ளது. தொழில்நுட்ப சாத்தியப்பாட்டை உறுதிசெய்வதன் பொருட்டும் விபரமாண செலவீன மதிப்பீடுகளுடன் கூடிய கூட்டிணைந்த கருத்திட்ட முன்மொழிவை வரைவதன் பொருட்டும் உரிய சாத்தியப்பாட்டு ஆய்வினை நடாத்துவதற்குரிய ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை தாங்கள் முன்னெடுப்பது வரவேற்கப்படுகிறது. கூட்டத்தில் பங்குபற்றிய ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகள் சாத்தியப்பாட்டு ஆய்வுக்குத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்வதற்குத் தயாராக இருந்தமையையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும்.

ஆய்வுகள் பூர்த்தி செய்யப்பட்டு பங்குதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் விநியோக அமைச்சும், வட மாகாணசபையும் கருத்திட்டத்தின் நிறைவேற்றம், இயக்கம் மற்றும் நீர்த்தேக்கத்தின் பராமரிப்பு ஆகியவற்றின் பொருட்டு புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடல் வேண்டும் என்றுள்ளது.

வடக்கு மாகாண தலைமைச் செயலர் அ.பத்திநாதன், இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகளுக்குப் பாராட்டுத் தெரிவிப்பதாக கூறிய அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், சபை பதவியில் இல்லாத காலத்திலும் இந்தத் திட்டத்தை அதிகாரிகள் முன்னெடுக்கவேண்டும் எனத் தெரிவித்து தீர்மான வரைவை முன்மொழிந்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், இதை முழுமனதுடன் வரவேற்பதாகவும் தான் வழிமொழிவதாகவும் கூறினார்.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஆளும் கட்சி மாகாணசபை உறுப்பினர் பா.டெனீஸ்வரன், யாழ்ப்பாணத்தின் குடிதண்ணீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். இரணைமடுத் திட்டம் கடந்த காலத்தில் சரியாக கையாளப்படவில்லை. மன்னார் மாவட்ட மக்களுக்கு இந்தத் திட்டம் தொடர்பில் விளக்கம் கொடுக்கவேண்டும். ஆரம்பக்கட்ட சாத்தியப்பாட்டு அறிக்கைகள் எமக்குக் கிடைக்கவில்லை. அவை எமக்கு வழங்கப்பட்டால் மக்களுக்கு தெளிவுபடுத்தக்கூடியதாக இருக்கும். இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால், வயல்க் காணிகள் பெருமளவு எடுக்கப்படும் என்று மக்கள் மத்தியில் கூறப்படுகின்றது. மக்களுக்கு சரியான விடயத்தை நாங்கள் ஆரம்பத்திலேயே தெளிவுபடுத்தவேண்டும். தவறினால் மக்கள் திட்டத்தை எதிர்க்கத் தொடங்கிவிடுவார்கள் என்றார்.

வடக்கு மாகாண சபை ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் வை.தவநாதன் இருவரும், இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்போது கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேசத்து மக்களின் குடிதண்ணீர்த் தேவையையும் பூர்த்தி செய்ய வேண்டும் என்று கோரிக்கை முன்வைத்தார்கள். (5,26)

## வடக்குச்...

சபையின் அமர்வு நேற்று இடம்பெற்றது. அமர்வில் உரையாற்றிய ஆளும் கட்சி உறுப்பினர் சயந்தன், அமைச்சரவைப் பிரச்சினை காரணமாக நாங்கள் வழங்காமல் விட்ட 400 சுகாதாரத் தொண்டர்கள் நியமனத்தையும் ஆளுநர் வழங்கப் போகின்றார், என்றார்.

ஆளும் கட்சி உறுப்பினர் த.குருகுலராஜா தெரிவித்ததாவது, வடக்கு மாகாண சபையின் பதவிக் காலம் முடிவடைந்த பின்னர் தேர்தல் நடத்தாமல் இருப்பது சூழ்ச்சியே. ஏனெனில் சபையின் காலம் முடிந்த பின்னர் ஆளுநர் ஆட்சியே நடக்க இருக்கின்றது. கொழும்பு அரசின் ஆளும் கட்சி தான் விரும்பியதை அவர் ஊடாக நிறைவேற்றும்.

வடக்கு மாகாண ஆளுநர் லண்டனுக்குச் செல்கிறார். அங்கு எம்மவர்களும் அவருக்கு ஆதரவளிக்கின்றனர்.

நாங்கள் பல விடயங்களைத் தவறவிட்டுவிட்டோம். ஆளுநர் ஊடாக அவை நிறைவேற்றப்படப் போகின்றன என்றார்.

நாங்கள் விழித்திருந்தால், முடிவு விடிவாக இருக்கும் என்று அவைத் தலைவர் குறிப்பிட்டார். (5,26)

## மறுவாழ்வு...

தொடர்பில் தமக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்று அரச சட்டத்தரணி கூறியுள்ளார்.

சிவப்பிரகாசம் சிவசீலன், ஜெ.சூரியகாந்தி இருவரது வழக்கும் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது குற்றத்தை ஏற்றுக் கொண்டால், அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கு ஆயுள் தண்டனையே விதிக்கப்பட வேண்டும் என்ற போதும், 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.

இதன்போது அரசியல் கைதிகள் இருவரும், சட்டமா அதிபர் மறுவாழ்வு வழங்க இணங்கியமை தொடர்பில் தாங்கள் பத்திரிகைச் செய்திகள் ஊடாக அறிந்து கொண்டதாகத் தெரிவித்துள்ளனர்.

அவ்வாறான எந்தவொரு அறிவித்தலும் கிடைக்க வில்லை என்று குறிப்பிட்ட அரச சட்டத்தரணி, 20 ஆண்டுகளில் சிறையிலிருந்த 9 ஆண்டுகளை கழித்து எஞ்சிய ஆண்டுகாலத் தண்டனையை ஏற்கவேண்டும் என்று கூறியுள்ளார். அரசியல் கைதிகள் இருவரும் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளனர். (5)

## கூட்டமைப்பின்...

முதலமைச்சர் தெரிவித்தார். வடமாகாண முதலமைச்சரின் இல்லத்தில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார் முதலமைச்சர். அப்போதே இதனைத் தெரிவித்தார். நீங்கள் புதிய கட்சி ஆரம்பிப்பது தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினை தொடர்பாக உங்கள் கட்சியின் தலைவர் மௌனம் சாதிக்கின்றார், கட்சி தலைவரை சந்திப்பதற்கான ஏற்பாடுகள் செய்துள்ளீர்களா எனச் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினார்கள்.

அதற்குப் பதிலளித்த முதலமைச்சர் எதிர்வரும் 07ஆம் திகதி சந்திப்பதாக கூறியிருந்தார், ஆனால் இந்தியா சென்றுவிட்டதனால் சந்திக்க முடியவில்லை என்றார்.

"எனது நிலைப்பாடு குறித்துப் பத்திரிகைக்கு கொடுத்த செய்தி அவருக்கு கோபம் ஏற்படுத்தியுள்ளதாக கேள்விப்பட்டுள்ளேன்" என்றும் தெரிவித்தார்.

மீண்டும் சந்திப்பதற்கு ஏற்பாடுகள் செய்துள்ளீர்களா எனக் கேட்ட போது, தலைவர் சம்பந்தனை சந்திப்பதற்கான அவசியம் எனக்கு இருக்கவில்லை என்றார்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனா அல்லது வேறு நபர்களா என்ற கேள்வி எழுந்துள்ளது. கட்சியில் யார் தீர்மானங்கள் எடுப்பவராக இருக்கின்றாரோ அவரின் தீர்மானங்கள் ஏற்கனவே சொல்லப்பட்டுவிட்டன. தலைவர் என்ற ரீதியில் சம்பந்தன் மௌனம் காப்பதனால், நன்மைகள் ஏற்படுமென்பதனை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது" என்றார் அவர்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்ட நேரத்தில் தலைவர் சம்பந்தன் தானே உங்களுக்கு ஆதர்வாக இருந்தார் என மீண்டும் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினார்கள்.

"பொது மக்கள் கொடுத்த அழுத்தத்தின் பின்னர், நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டதனால், நடவடிக்கை எடுத்தார்" என்று எடுத்துரைத்தார் முதலமைச்சர். (உ-106)

## இனி...

கான பதில் தூதுவர் றொபேட் கில்ரனிடம் வலியுறுத்தியதாக முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடகிழக்கு மாகாணங்களுக்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்க நாட்டின் இலங்கைக்கான பதில் தூதுவர் றொபேட் கில்ரன் வடமாகாண முதலமைச்சரை யாழ்ப்பாணத்தில் உள்ள முதலமைச்சரின் இல்லத்தில் நேற்று மாலை சந்தித்து கலந்துரையாடினார்.

சுமார் ஒரு மணித்தியாலயங்களுக்கு மேலாக சந்திப்பு நீடித்தது. சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

அமெரிக்க அரசு அரசியல் ரீதியாக முன்னெடுக்கும் நடவடிக்கைகள் பற்றி பதில் தூதுவர் என்னிடம் குறிப்பிட்டார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இருந்து அமெரிக்க வெளியேறியிருந்தாலும் தாம் கொண்டு வந்த இணக்கப்பாடுடைய பிரேரணையை முழுமையாக நடைமுறைப்படுத்த சகல விதத்திலும் ஒத்துழைப்பு வழங்கப்படுமெனவும் குறிப்பிட்டார். பேரவையில் இருந்து அமெரிக்கா வெளியேறினாலும் அருகில் இருந்து சகல நடவடிக்கைகளையும் அவதானித்துக் கொண்டிருப்போம் என்றதுடன் இலங்கை அரசு ஏற்றுக் கொண்ட அனைத்தையும் நிறைவேற்ற உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் அரசியல் ரீதியான நடவடிக்கைகளை யார் முன்னெடுக்கின்றார்களோ அவர்கள் ஒன்று இணைந்து செயற்பட வேண்டுமென்று வலியுறுத்தினார். அதனை நானும் ஏற்றுக்கொண்டதுடன் கடந்த 2015 ஆம் ஆண்டு மக்கள் ஒன்றிணைந்த காரணத்தினால் தான் வேறு சிந்தனையுடைய மக்களை முறியடிக்க முடிந்தது. மக்களிடையே ஒற்றுமையும் ஒத்துழைப்பும் இருந்தால் மாத்திரமே தமிழ் மக்களுக்கான நன்மைகள் கிடைக்கும் சாத்தியம் ஏற்படும்.

மைத்ரிபால சிறிசேனவும், ரணில் விக்கிரமசிங்கவும் ஒன்றிணைந்து ஒற்றுமையுடன் பயணிக்க வேண்டுமென்பது என்பதே எனது விருப்பம் என்ற கருத்தினை அவரும் ஏற்றுக் கொண்டதுடன் தமது விருப்பமும் அதே தான் என்பதனை சுட்டிக்காட்டினார்.

பொறுப்புக்கூறல் விடயத்தில் எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் இலங்கை அரசு உரிய பதிலைத் தருவார்கள் என பதில் தூதுவர் நம்பிக்கை வெளியிட்டதுடன் அதற்கான அழுத்தங்களை அமெரிக்க அரசு கொடுக்குமென்றும் அவர் குறிப்பிட்டார். (8-106)

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1506
சீட்டிழுப்பு திகதி 04.10.2018
வெற்றி இலக்கங்கள் 16 24 52 60
ஆங்கில எழுத்து O
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட்
ரூ 35, 565, 020/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அழைப்பு
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 393
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2018.10.04
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 57,120,135/-
வெற்றி இலக்கங்கள் 14 23 26 66
ஆங்கில எழுத்து I
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▶ 183
சீட்டிழுப்பு திகதி ▶ 04.10.2018 நீலம்
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 05 21 53
விதி எண் 02
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 13, 675, 348 /=

ஸ்வர்ண திலின

| | |
|---|---|
| 2255023 | கம்பஹா |
| 8583044 | பதுளை |
| 2916138 | மொனராகலை |
| 7524189 | கிளிநொச்சி |
| 9922495 | திருகோணமலை |

2018.10.06 ம் திகதி சனிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk



## வீதியை விட்டு விலகி அரச பேருந்து விபத்து

யாழ்ப்பாணம், ஒக்.5

யாழ்ப்பாணத்திலிருந்து வடமராட்சி கிழக்குக் கட்டைக்காடு ஊடாகப் பயணித்த இ.போ.ச. பேருந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து நேற்றுக் காலை நடந்துள்ளது. மருதங்கேணி இரும்புப் பாலத்துக்கும், கல்லடி வைரவர் ஆலயத்துக்கும் இடையே இந்த விபத்து நடந்துள்ளது. விபத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

இயந்திரக் கோளாறு காரணமாகவே விபத்து நடந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந)

## உடல் நடுக்கம் ஏற்பட்டு பெண் திடீரெனச் சாவு

சாவகச்சேரி, ஒக்.5

திடீரென உடல் நடுக்கம் ஏற்பட்டுப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று சரசாலை வடக்கில் நடந்துள்ளது.

நேற்றுக் காலை வளவு துப்புரவாக்கிவிட்டு குளித்துவிட்டு வந்த அவர் காலை உணவு அருந்தியுள்ளார். அப்போது அவருக்கு உடல் நடுக்கம் ஏற்பட்டுள்ளது. அதன்பின்னர் அவர் படுக்கச் சென்றார். அவர் அசைவின்றிக் காணப்பட்டதால் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றோம். பரிசோதனை செய்த மருத்துவர் அவர் இறந்துவிட்டார் என்று கூறினார் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் 36 வயதுடையவர் என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (ந-9)

## இ.போ.ச. வாகனத்தில் மதுப் போத்தல்கள்

யாழ்ப்பாணம், ஒக்.5

இலங்கை போக்குவரத்துச் சபையினரின் சாரதி பயிற்சி வாகனத்தில் இருந்து 23 மதுபானப் போத்தல்களை இணுவில் பகுதியில் வைத்து நேற்று மதுவரி திணைக்களத்தினர் மடக்கிப் பிடித்துள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது:

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான வாகனம் ஒன்றில் பெருந்தொகையான மதுபான போத்தல்கள் கொண்டு செல்லப்படுவதாக மதுவரி திணைக்களத்தினருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது. தகவல் அறிந்து செயற்பட்ட அதிகாரிகள் சோதனையிட்டத்தில் போக்குவரத்து சபையின் சாரதி பயிற்சி சேவைக்கு பயன்படுத்தப்படும் வாகனம் ஒன்றில் இருந்து 23 மதுபான போத்தல்கள் கைப்பற்றப்பட்டதுடன் குறித்த வாகனத்தையும் கைப்பற்றியுள்ளனர். இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (8)

### *5 ஈச்சரங்களையும்...*

வேற்றப்பட்டது. வடக்கு மாகாணசபையின் நேற்றைய அமர்வில், மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் இந்தத் தீர்மானத்தை முன் மொழிந்தார்.

அவர் தனது தீர்மானத்தை சமர்ப்பித்து தெரிவித்ததாவது, திருக்கோணமலை திருக்கோணேச்சரம், மன்னார் திருக்கேதீஸ்வரம், சிலாபம் முன்னேஸ்வரம், மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம், யாழ்ப்பாணம் கீரிமலை நகுலேஸ்வரம் ஆகிய ஆலயப் பிரதேசங்களைப் புனிதப் பிரதேசங்களாக அறிவிக்க வேண்டும் என்ற தேவை எழுந்துள்ளது.

திருக்கோணமலை சேருவில பௌத்த ஆலயப் பிரதேசம் இலங்கை அரசினால் புனிதப் பிரதேசமாக அண்மையில் அறிவிக்கப்பட்டிருந்தது. மன்னார் மடுமாதா ஆலயப் பிரதேசத்தை புனிதப் பிரதேசமாக அறிவித்தமைக்காக இலங்கை அரசுக்கு வடக்கு மாகாண சபை நன்றி தெரிவிக்க விரும்புகிறது.

திருக்கோணமலை திருக்கேதீஸ்வரம் புனிதப் பிரதேசமாக அறிவிக்கப்பட வேண்டும் என்ற இந்துக்களின் கோரிக்கை கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாகப் புறக்கணிக்கப்பட்டு வருவதையும் சுட்டிக் காட்டுவதோடு மேற்குறிப்பிட்ட ஐந்து இந்து ஆலயங்களின் பிரதேசங்களைப் புனிதப் பிரதேசங்களாக அறிவிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கை அரசை வடக்கு மாகாண சபை கோருகின்றது என்றார்.

ஆளும் கட்சி உறுப்பினர் சபா.குகதாஸ் தீர்மானத்தை வழிமொழிந்தார். சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது. (5,26)

### *குறைநிரப்பு...*

பெறுமதியான குறைநிரப்பு நியதிச் சட்டத்துக்கு அனுமதி வழங்க முடியாது என்று வடக்கு மாகாண ஆளுநர் அறிவித்துள்ளதாக, அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் சபையில் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்று இடம்பெற்றது. சபை அமர்வுக்கான நிகழ்சி நிரலில், குறைநிரப்பு நியதிச் சட்டத்துக்கு அனுமதி கோரும் விடயமும் உள்ளடக்கப்பட்டிருந்தது. அந்த விடயத்தை எடுத்துக் கொள்ள முடியாத நிலமை ஏற்பட்டுள்ளதாக அவைத் தலைவர் சபைக்கு அறிவித்தார்.

மாகாணசபையின் பதவிக் காலம் முடிவடைந்த பின்னர் அதிகாரிகள் நெருக்கடிக்குள் சிக்கக் கூடாது என்பதற்காக குறை நிரப்பு நியதிச் சட்டம் முதலமைச்சரும், நிதி அமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரனின் கையெழுத்துடன், தலைமைச் செயலரினால் ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. நிதி சார்ந்த விடயங்களில் ஆளுநரின் ஒப்புதல் அவசியம்.

ஆளுநரின் ஒப்புதல் கிடைக்கப்பெறாததையடுத்து வடக்கு மாகாண தலைமைச் செயலர், நிதிக்குப் பொறுப்பான பிரதித் தலைமைச் செயலர் ஆகியோர் ஆளுநர் செயலகத்துடன் தொடர்பு கொண்டுள்ளனர். இந்த நிலையில் ஆளுநருடன் நான் நேரடியாகத் தொடர்பு கொண்டு பேசினேன். வழமையாக நியதிச் சட்டங்கள் அமைச்சரவை அனுமதியுடன் தான் எனக்கு வரும். தற்போது அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டவேண்டாம் என்று பணித்துள்ளதால், அமைச்சரவையின் அனுமதியில்லாமல் வரும் குறைநிரப்பு நியதிச் சட்டத்தை அனுமதிக்க முடியாது என்று ஆளுநர் தெரிவித்ததாக அவைத் தலைவர் சபையில் கூறினார்.

வடக்கு மாகாண சபை நடப்பு ஆண்டுக்கு அனுமதி வழங்கியதற்கு மேலதிகமான நிதிக் கொடுப்பனவுகளை அனுமதிப்பதற்கே குறை நிரப்பு நியதிச் சட்டம் கொண்டு வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5,26)

### *விக்கி...*

மாகாண அமைச்சரவைக் கூட்டம் இடம்பெறாமையினால் நியமனங்கள் வழங்கப்படவில்லை. இவ்வாறு வடக்கு மாகாண சபை ஆளும் கட்சி உறுப்பினர் கே.சயந்தன் சபையில் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ.ஜெயசேகரன், வடக்கு மாகாணத்திலுள்ள கொழும்பு மற்றும் மாகாண அரசுகளின் திணைக்களங்களில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கக் கோரும் தீர்மான வரைவைச் சமர்ப்பித்தார். இந்த வரைவு மீது விவாதம் நடைபெற்றது.

ஆளும் கட்சி உறுப்பினர் கே.சயந்தன் தனது உரையில், மாகாண அமைச்சரவைகூடாததால் 400 பேரின் நிரந்தர நியமனம் பாதிக்கப்பட்டுள்ளமை குறித்து எடுத்துக்கூறினார்.

"சுகாதாரத் தொண்டர்கள் நிரந்தர நியமனங்களுக்காகப் போராடுகின்றார்கள். கொழும்பு அரசு, 400 பேரை சுகாதாரத் தொண்டர்களாக நியமிக்க அனுமதி வழங்கியுள்ளது. ஆனால் அவர்களுக்கு இன்னமும் நியமனம் வழங்கப்படவில்லை. வடக்கு மாகாண அமைச்சரவைக் கூட்டம் நடைபெறாமையினால் நியமனங்கள் வழங்கப்படவில்லை. எமது சபையின் ஆயுள்காலம் முடிந்ததும் ஆளுநர் அந்த நியமனங்களை வழங்கி வைக்கவுள்ளார்.

மேலும், இங்குள்ள வேலையற்ற பட்டதாரிகள் முதலமைச்சரைச் சந்தித்துப் பேசியுள்ளனர். வடக்கு மாகாணத்திலுள்ள மாகாணத் திணைக்களங்களின் வெற்றிடங்களுக்குத் தம்மை நியமிக்கக் கோரியுள்ளனர். அதற்கு வடக்கு மாகாண முதலமைச்சர், மாகாண சபை நடைபெறும் நாளில் மாகாணசபைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் செய்யுங்கள். அதன் போது உங்களுக்கு வந்து பதில் சொல்வேன் என்று கூறியுள்ளார். சில நாள்களில் அவரே அதை மறந்துவிட்டார். வேலையற்ற பட்டதாரிகள் சபை அமர்வுக்கு முன்னர் முதலமைச்சரைச் சென்று சந்தித்துள்ளார்கள். அப்போது முதலமைச்சர், மாகாணசபையில் வெற்றிடம் இல்லை என்று நேற்றுத்தான் சொன்னார்கள். இலங்கை போக்குவரத்துச் சபையில் 50 வெற்றிடங்கள் இருக்கின்றதாம். அங்கு சென்று கதையுங்கள்" என்று கூறியுள்ளார்.

இப்படிப்பட்டவரைத்தான் அடுத்த தடவை முதலமைச்சராக்கப் போகின்றோமா என்று கேள்வி எழுப்பினார். (உ-5,26)

### *மாகாணசபைத்...*

முன்வைத்தார். சபையில் ஏனைய உறுப்பினர்களும் அதற்கு ஆதரவு தெரிவித்தனர்.

வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்று இடம்பெற்றது. அமர்வின் இறுதியில் சபையை ஒக்ரோபர் 23ஆம் திகதிக்கு ஒத்திவைக்கும் அறிவித்தலை அவைத் தலைவர் விடுத்தார். இதன்போது கருத்துத் தெரிவித்த செனவிரட்ன, நீங்கள் மாகாணசபைத் தேர்தலை உடன் நடத்தச் சொல்லி அரச தலைவர் மைத்திரிபாலவிடம் கோருங்கள் என்றார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த ஆளும் கட்சி உறுப்பினர் அஸ்மின், மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஆனால் அதனை நடத்தும் திராணி மைத்திரிபாலவுக்கு இல்லை. நல்லாட்சி அரசு மீது தமிழ் மக்கள் படிப்படியாக நம்பிக்கையிழந்து வருகின்றார்கள். இப்படிப்பட்ட ஒருவருக்கு ஆதரவு கோரியதை நினைத்து வெட்கப்படுகின்றோம். சாட்டுப்போக்குச் சொல்லிகாலம் கடத்துகின்றார். அவர் தனது கட்சியைப் பாதுகாக்கவேண்டும் என்ற எண்ணத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். அவரின் பொருளாதாரக் கொள்கைகள் காரணமாகவே நாடு பாதாளத்துக்குப் போய்க் கொண்டிருக்கின்றது.

மேற்குலக நாடுகள் இலங்கை அரசுக்கு பொருளாதார உதவி வழங்கத் தயாராக இருந்தன. தமிழர்கள் விடயத்தில் அரசின் போக்கு மாறியதும், மேற்குலக நாடுகள் இலங்கைக்கான உதவியை நிறுத்திவிட்டன என்றார். (5,26)

### *சம்பிரதாய...*

வடக்குமாகாணசபையின்நேற்றையஅமர்வை, எதிர்வரும் 23ஆம் திகதிக்கு அவைத் தலைவர் ஒத்திவைத்தார். அன்றைய தினம், சபையில் தீர்மானங்கள், கேள்விகள், விவாதங்கள் எதுவும் இடம்பெறாது என்று அறிவித்தார். ஒவ்வொரு உறுப்பினருக்கும் 3 தொடக்கம் 5 நிமிடங்கள் வரையில் பேசுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். உறுப்பினர்கள் பேசும் போது, நல்லவிதமாக, முரண்பாடுகளை ஏற்படுத்தாத வ்கையில் பேசுமாறு கோரிக்கை விடுவதாகக் கேட்டுக் கொண்டார். அன்றைய அமர்வு பி.ப. 4.30 மணியுடன் நிறைவுக்கு வரும். தேநீர் விருந்துபசாரம் நடைபெறும் என்றும் அதனுடன் சபையின் செயற்பாடுகள் யாவும் முடிவுக்குக் கொண்டு வரப்படும் - என்றார். (5,26)

### *மைத்திரி...*

இடைக்கால அரசு அமைப்பது தொடர்பாக சிறுபான்மைக் கட்சிகளுடன் கலந்துரையாடி வருகின்றோம் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசநாயக்க தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் 16 பேர் மாற்று அணி நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் ஏமாற்றடையாமல் இனப் பிரச்சினைக்குத் தீவைப் பெற்கொள்ள வேண்டுமானால் பெரும்பான்மை சிங்கள மக்களின் ஆதரவு தேவையாகும். சிங்கள மக்களின் ஆதரவை மகிந்த, மைத்திரி கருத்தொருமைப்பாட்டுடனேயே பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறில்லாமல் ஒருபோதும் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டாது - என்றார். (உ-8)

### *5ஆவது...*

மாகாண உறுப்பினர்களுக்கான பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டில் அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தியதற்காக அமைச்சர் ஜி.குணசீலன் பதவி துறக்கவேண்டும் என்று முன்னாள் கல்வி அமைச்சரும், சபை உறுப்பினருமான த.குருகுலராஜா வலியுறுத்தினார்.

வடக்கு மாகாணசபையின் நேற்றைய அமர்வில், மாகாண பொதுக் கணக்குகள் குழுவினால் ஆராயப்பட்ட விடயம் சபைக்கு சமர்பிக்கப்படவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா சுட்டிக்காட்டினார்.

மன்னார் மாவட்டத்தில், மாகாணப் பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டில் 2015, 2016, 2017 ஆம் ஆண்டுகளில் மூக்குக் கண்ணாடிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. ஒரே கடையிலிருந்து மூன்று ஆண்டுகள் கண்ணாடிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அந்தக் கடை கண்ணாடி விற்பனை செய்யும் கடையும் அல்ல. அது பான்சிக் கடை. அவை வாசிப்புக்கான கண்ணாடிகள். ஒன்றின் பெறுமதி 350 ரூபா. ஆனால் 950 ரூபா என்று தெரிவித்து பணம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. கணக்காய்வுத் திணைக்களத்தினால், இது கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் 2017ஆம் ஆண்டு காசோலை விடுவிக்கப்படவில்லை என்று தவராசா கூறினார்.

"ஒரு சில அரசியல்வாதிகளின் தவறினால் சகல அரசியல்வாதிகளையும் மக்கள் கள்ளர் என்று எண்ணும் நிலமை ஏற்படுகின்றது. தவறிழைக்கும் அரசியல்வாதிகள் யாராக இருந்தாலும், அவர்கள் எந்தத் தரத்தில் இருந்தாலும் மக்கள் முன் அம்பலப்படுத்த வேண்டும்" என்றார் உறுப்பினர் சுகிர்தன்.

மற்றொரு ஆளும் கட்சி உறுப்பினரான கே.சயந்தன், உறுப்பினர்கள் தங்கள் நிதிக்கான முன்மொழிவுகளை மாத்திரம் சமர்ப்பிக்கலாம். அதிகாரிகள்தான் அவற்றைக் கொள்வனவு செய்வார்கள். உறுப்பினர்கள், அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்திருந்தால் அதிகாரிகளின் முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரிக்கலாம். அல்லாவிடின் பொதுமைப்படுத்தப்பட்ட குற்றச்சாட்டாக மாறிவிடும் - என்றார்.

"ஓர் உறுப்பினரை புகழும்போது அவரின் பெயரைச் சபையில் தெரிவிக்கின்றோம். தவறிழைக்கும்போது அந்த உறுப்பினரின் பெயரை சபையில் சொல்வதை ஏன் தவிர்க்கின்றோம். இந்த விடயத்தில் அமைச்சர் குணசீலனின் பெயர் தொடர்புபட்டுள்ளது. அவர் தனது சுயவிளக்கத்தை வெளிப்படுத்த வேண்டும்" என்று உறுப்பினர் அஸ்மின் தெரிவித்தார்.

இதன் பின்னர் கருத்துரைத்த த.குருகுலராஜா, கணக்காய்வாளர் திணைக்களம் சில குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது. சம்பந்தப்பட்ட அமைச்சர் தொடர்பில் சில வதந்திகளை முன்பு கேள்விப்பட்டுள்ளோம். இந்தப் பெரிய அவைக்கு அவமானமாக இருக்காமல் அவர் பதவி விலகிச் செல்ல வேண்டும். தானாகவே செல்ல வேண்டும் என்று குறிப்பிட்டார்.

குறுக்கிட்ட எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, முக்கிய விடயங்கள் நடக்கும்போது முதலமைச்சர் சபையில் இருக்க மாட்டார் என்று கவலைப்பட்டார்.

மீண்டும் கருத்துத் தெரிவித்த குருகுலராஜா, அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தினேன் என்று தெரிவித்தே என்னைப் பதவியிலிருந்து நீக்கினீர்கள். இப்போதும் அமைச்சர் அதிகார முறைகேட்டைச் செய்துள்ளார். என்ன செய்யப்போகின்றீர்கள் என்று கேள்வி எழுப்பினார். (உ-5,26)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 5

**கரப்பந்தாட்டம்**

நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் ஏ பிரிவு அணிகளுக்கான ஆட்டங்கள் இன்று வியாழக்கிழமை நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டு கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெறவுள்ளன. இந்தத் தொடரில் இன்று இரவு இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்சுவேலி யுத் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**கால்பந்தாட்டம்**

முரசு மோட்டை விளைபூமி விளையாட்டுக் கழகம் மற்றும் முரசுமோட்டை விளைபூமி இளைஞர் கழகம் என்பன இணைந்து நடத்தத் திட்டமிட்ட நெல்மணிகள் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் முரசு மோட்டை விளைபூமி விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். ஆன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து செந்தணல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜெயந்திநகர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழக அணி

# யங்ஸ்ரார் அணி மகுடம் சூடியது!

யாழ்ப்பாணம், ஒக். 5

வட்டக்கச்சி மத்திய கல்லூரியால் நடத்தப்பட்ட வட்டக்கச்சி பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் யங்ஸ்ரார் அணி சம்பியனானது.

வட்டக்கச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யங்ஸ்ரார் அணியை எதிர்த்து வி.சி.சி. பீனிக்ஸ் அணி மோதியது.

கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவதுபாதி முடிவதற்கு 2 நிமிடங்கள் இருக்கையில் யங்ஸ்ரார் அணிக்கான கோல் பதிவு செய்யப்பட்டது. இதையடுத்து 1:0 என்ற கோல் கணக்கில் யங்ஸ்ரார் அணி வெற்றிபெற்றது. (ம-23)



## சாகிராக் கல்லூரியின் கால்பந்தாட்டம் நாளை

யாழ்ப்பாணம், ஒக். 5

கொழும்பு சாகிராக் கல்லூரியின் பழைய மாணவத் தலைவர்கள் சங்கம் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடர் கொழும்பு சாகிராக் கல்லூரியில் நாளை ஆரம்பமாகிறது. 16 பாடசாலைகள் இந்தத் தொடரில் பங்குபற்றுகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி இந்தத் தொடரில் பங்குபற்றுகின்றது.

(ம-23)



# அராலி யுனைற்ரெட் இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஒக். 5

சங்கானைப் பிரதேசக் கழகங்களை ஒன்றிணைத்து நடத்தப்பட்டுவரும் சங்கானை பிறீமியர் லீக் தொடரில் அராலி யுனைற்ரெட் அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

துணைவி சென் ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் அராலி கிங்ஸ்ரார் அணியை எதிர்த்து அராலி யுனைற்றெட் அணி மோதியது.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்ததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 8:6 என்ற கோல் கணக்கில் யுனைற்ரெட் அணி வெற்றி



## கிளிநொச்சி கரப்பந்தாட்டத்தில் புதிய பாரதி கழகம் சம்பியன்

கிளிநொச்சி, ஒக். 5

கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் புதிய பாரதி அணி கிண்ணம் வென்றது.

கிளிநொச்சி தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கரப்பந்தாட்ட திடலில் அண்மையில் இறுதியாட்டம் இடம்பெற்றது. இதில் புதியபாரதி மற்றும் ஆதவன் விளையாட்டுக் கழகங்கள் பலபரீட்சை நடத்தின. 25:19, 25:23, 25:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் புதிய பாரதி அணி வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம-6)




கொழும்பு சாகிராக் கல்லூரியின் பழைய மாணவர் தலைவர்கள் சங்கம் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் பங்குபற்றும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிக்கான சீருடை அண்மையில் கையளிக்கப்பட்டது. (ம-23)

# உதயசூரியன் சம்பியனானது

யாழ்ப்பாணம், ஒக். 5

முல்லைத்தீவு மாவட்ட கால்பந்தாட்ட லீக்கால் நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் வட்டுவாகல் உதயசூரியன் அணி சம்பியானது.

இரணைப்பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் வட்டுவாகல் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து முல்லைத்தீவு சென். யூட் விளையாட்டுக் கழக அணி மோதியது.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் கோல்கள் எதையும் பதிவு செய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் உதயசூரியன் அணி வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம-23)

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு எதிரான

# பாகிஸ்தான் கிரிக்கெட் சபையினது முறைப்பாட்டை ஐ.சி.சி. விசாரணை

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் சுமார் ஆயிரத்து 200 கோடி ரூபா (இலங்கை மதிப்பில்) இழப்பீடு கேட்டுப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கொண்டுசென்ற முறைப்பாட்டை பன்னாட்டுக் கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) விசாரிக்க ஆரம்பித்துள்ளது.



இந்தியா - பாகிஸ்தான் இடையிலான இருதரப்புத் தொடர் மும்பைத் தாக்குதலுக்குப் பின்னர் கைவிடப்பட்டிருந்தது. இந்த நிலையில் இந்திய அணிக்கும் பாகிஸ்தான் அணிக்கும் இடையில் கிரிக்கெட் தொடரை நடத்த இரு நாடுகளின் கிரிக்கெட் சபைகளும் கடந்த 2014 ஆம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் என்ற பெயரில் ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டன. ஆனால் எல்லையில் நிலவிய பதற்றநிலை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இருதரப்புத் தொடருக்குச்சம்மதிக்கவில்லை. பாகிஸ்தான் பல்வேறு அழுத்தங்கள் கொடுத்த போதிலும் இந்தியாவின் தரப்பில் எவ்வித துலங்க ல்களும் காட்டப்படவில்லை. இந்த நிலையில் ஒப்பந்தத்தைச் செயற்படுத்த வேண்டும் இல்லாவிடில் இழப்பீடு தரவேண்டும் என்று பாகிஸ்தான் தரப்பில் பலமுறை வலியுறுத்தப்பட்டது. இதற்கும் இந்தியா எவ்வித பதிலையும் வழங்கவில்லை. இந்த நிலையில் இந்தத் தொடர் நடைபெறாதமையால் தமக்கு ஏற்பட்டுள்ள ஆயிரத்து 200 கோடி ரூபா (இலங்கை மதிப்பில்) இழப்பை இந்தியக் கிரிக்கெட் சபை வழங்க வேண்டும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கடந்த வருடம் செப்ரெம்பர் மாதத்தின் இறுதிப் பகுதியில் பன்னாட்டுக் கிரிக்கெட் சபையிடம் முறையிட்டது. இந்த முறைப்பாட்டின் மீதான விசாரணையைத் தற்போது சுமார் ஓர் ஆண்டு கழித்து ஆரம்பித்துள்ளது பன்னாட்டுக் கிரிக்கெட் சபை.

இருதரப்புத் தொடர்கள் நடைபெறாவிட்டாலும், பன்னாட்டுக் கிரிக்கெட் சபையின் பொதுவான தொடர்களான உலகக்கிண்ணம், ரி20 உலகக்கிண்ணம், மினி உலகக்கிண்ணம், ஆசியக் கிண்ணம் ஆகிய தொடர்களில் இரு நாட்டு அணிகளும் விளை யாடுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

ஸ்ரெய்னின் சகலதுறை ஆட்டத்தால்

## தென்னாபிரிக்காவின் வசப்பட்டது தொடர்

சிம்பாப்வேக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் டேல் ஸ்ரெய்னின் சகலதுறை பெறுபேற்றால் தொடரை வெல்வதை உறுதி செய்தது தென்னாபிரிக்கா.

மூன்று ஆட்டங்களைக் கொண்டதாக இந்தத் தொடர் நடைபெற்று வருகிறது. முதலாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்றதால் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற கட்டாய நிலமை சிம்பாப்வேக்கு இருந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 198 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அந்த அணி ஒரு கட்டத்தில் 101 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளை இழந்து தவித்துக் கொண்டிருந்தது.

பின்வரிசை வீரரான ஸ்ரெய்ன் தனது அதிரடி ஆட்டத்தின் மூலம் தென்னாபிரிக்காவை தலைதூக்க வைத்தார். 85 பந்துகளில் 60 ஓட்டங்களை ஸ்ரெய்ன் குவித்தார். அவரை விட மார்க்ரம் 35 ஓட்டங்களையும், பிளுக்வையோ 28 ஓட்டங்களையும் பெற்றனர்.


பந்துவீச்சில் சாடர 3 இலக்குகளையும், ஜாவிஸ், திரிபானோ, மாவுட மூவரும் தலா 2 இலக்குகளையும், வில்லியம்ஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய சிம்பாப்வே அணி வெறும் 78 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. இதையடுத்து 120 ஓட்டங்களால் வெற்றிபெற்றது தென்னாபிரிக்கா. சிம்பாப்வேயின் சார்பில் அணித் தலைவர் மசகட்சா பெற்ற 27 ஓட்டங்களே அதிகபட்சம்.

பந்துவீச்சில் தாகிர் 6 இலக்குகளையும், ஸ்ரெய்ன் 2 இலக்குகளையும், நெக்டி, பிளுக்வையோ இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)

## வீரர்களைத் தெரிவுசெய்வது என்னுடைய வேலையில்லை

கோக்லி கடும் காட்டம்



அணிக்கு வீரர்களைத் தெரிவு செய்வது எனது வேலையில்லை. விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமைத் தெரிவுசெய்வதே எனது வேலை என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லி.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான இந்திய அணியில் இருந்து கருண் நாயர் நீக்கப்பட்டார். இது அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில் இந்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.

"கருண் நாயர் ஏன் மேற்கிந்தியத்தீவுகள் தொடருக்கு தேர்வு செய்யப்படவில்லை என்பது குறித்து ஏற்கெனவே தேர்வுக்குழுவினர் பேசிவிட்டார்கள். இதில் நான் சொல்வதற்கு ஏதும் இல்லை. தேர்வுக்குழுவினர் அவர்களின் வேலையைச் செய்திருக்கிறார்கள். வெளியில் உள்ளவர்கள் என்ன வேண்டுமானாலும் பேசிக்கொள்ளட்டும். அதைக் கவனத்தில் கொள்ளாமல், எங்களுக்கு எது வசதியாக இருக்குமோ அதில் ஈடுபட்டுப் பணியைச் சிறப்பாகச் செய்ய வேண்டும். ஏற்கெனவே ஒருவர் இது குறித்துப் பேசிவிட்டால், மீண்டும் அதைப் பற்றி இங்குப் பேசக்கூடாது. எனக்குத் தெரிந்தவரை தேர்வுக்குழுத் தலைவர் கருண் நாயரிடம் பேசிவிட்டார். ஆதலால், இந்த விடயத்தில் நான் கருத்து சொல்வதில் நியாயமில்லை. மற்றொரு விடயம் வீரர்கள் தேர்வு என்பது என்னுடைய பணி அல்ல. எங்களுக்கு என்ன விதிக்கப்பட்டதோ அதை ஒரு அணியாகச்செய்கிறோம். ஒவ்வொருவரும் தங்களுக்குரிய பணி குறித்து அறிந்திருக்க வேண்டும். கருண் நாயர் தேர்வு செய்யப்படாததற்கும் எனக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. இதை அனைவரும்புரிந்துகொள்ள வேண்டும்" என்று கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)



## தற்காப்புக் கலையில் வெள்ளி வென்ற மாணவிக்கு வவுனியாவில் மதிப்புறுத்தல்

வவுனியா, ஒக். 5



தேசிய மட்டத்தில் தற்காப்புக் கலையில் வெள்ளிப்பதக்கம் வென்ற வவுனியா இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலய பாடசாலை மாணவியான செல்வி மதிதரன் மோக்சிதாவை பாராட்டி மதிப்புறுத்தும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வாடி வீடு மண்டபத்தில் வர்த்தகர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் மாலை 7.30 மணியளவில் இந்த நிகழ்வு நடைபெற்றது. வர்த்தக நலன்புரிச் சங்கத்தலைர் ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், பொது அமைப்பினர் என்று பலர் கலந்து கொண்டனர். (ம)

வலி, வேதனைகளுக்கான சிறந்த நிவாரணி
இலங்கையின் தரம் 1
கொஸ்கந்தவல
ஜீவக வாத தைலம்®
■ இடுப்பு வலி ■ மூட்டு வலி
■ முழங்கால் வலி ■ தசைப் பிடிப்பு
■ ஆத்தரைடீஸ் ■ நரம்பு வலி
■ சுளுக்குப் பிடிப்பு
உள்ளிட்ட நோய்களுக்கு நிவாரணி அளிக்கிறது...!



Jeewaka Herbal Products (Pvt) Ltd
0777 322 574

TATA SUPPER ACE A/C வாகனம் வாடகைக்கு
கிழமை, மாதாந்த அடிப்படையில் வாகனம் வாடகைக்குத் தரப்படும். நாள் ஒன்றுக்கு
யாழ்.மாவட்டம் - 4500/-
கிளி, முல்லை மாவட்டம் - 4900/-
(குறிப்பு :- சாரதி, எரிபொருள் உட்பட)
076 660 6970 (AKN/549)(11)

வீடு விற்பனைக்கு
வவுனியா, உக்குளான்குளப் பகுதியில் 2.2 பரப்பு உறுதிக் காணியினுள் புத்தம் புதிதாக அமைக்கப்பட்ட 4 அறைகள் 2 இணைந்த குளியலறைகள், நான்கு பக்கமும் மதில்கள் மற்றும் கிணறு சகல வசதிகளுடன்கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.
- 071 023 2288, 077 615 2992

கருத்தரங்குகள்
கணக்காய்வு பரீட்சகர்
சனி, ஞாயிறு
8.00 - 4.00
இலஞ்ச / ஊழல் புலனாய்வு உத்தியோகத்தர்
சனி, ஞாயிறு
9.30 - 3.30
சுங்கத்திணைக்கள பரீட்சைகள்
ஞாயிறு 11.00 - 3.00
ஆசிரியர் தெரிவு மற்றும் P.G.D.E, M.Ed தெரிவுகளுக்கு
ஞாயிறு 10.00 - 3.00
NSB வங்கி
ஞாயிறு 9.00 - 2.00
SLAS, SLEAS
ஞாயிறு 9.00 - 3.00
யாழ். பல்கலைக்கழக B.A தெரிவு
சனி, ஞாயிறு 11.00 - 3.30
076 688 3394
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)

# இந்திய அணி அசுர ஆரம்பம்



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி அசுர ஆரம்பம் கண்டது.

ராஜ்கோட்டில் இந்த ஆட்டம் நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரராக அறிமுகமானார் பிருத்வி ஷா. அவருடன் ராகுல் ஆரம்ப வீரராகக் களமிறங்கினார். முதலாவது பந்துப்பரிமாற்றத்தின் இறுதிப் பந்தில் எல்.பி.டபிள்யு. முறையில் ஆட்டமிழந்தார் ராகுல். வழக்கம்போல் அவர் ஒரு மறுபரிசீலனையை வீணாக்கிச் சென்றார். அதன் பின்னர் இரண்டாவது இலக்குக்காகச் சேர்ந்த பிருத்வி புஜாரா கூட்டணி மேற்கிந்தியத் தீவுகளின் பொறுமையை மிகையாகவே சோதித்தது.

இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் கடக்க பிறிதொரு இலக்கை இழக்காமல். 100 ஓட்டங்களைத் தொட்டது இந்திய அணி. ஒருநாள் ஆட்டங்களின் பாணியில் அமர்க்களப்படுத்திக் கொண்டிருந்த பிருத்வி 99 பந்துகளை எதிர்கொண்டு சதத்தை நிறைவுசெய்தார். 18 வயதில், அறிமுக ஆட்டத்தின் முதலாவது இன்னிங்ஸிலேயே சதம்!!. அவர் 134 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது பிஸ்கூவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அதன் பின்னர் அணித் தலைவர் கோக்லியுடன் இணைந்து இணைப்பாட்டமாக 100 ஓட்டங்களைப் பகிர்ந்தார் துணைத் தலைவர் ரகானே. இந்தி அணி 337 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 41 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரகானே. எனினும் தொடர்ந்தும் நிலைத்து நின்று அற்புதமான வகையில் துடுப்பெடுத்தாடினார் கோக்லி. நாள் முடிவில் இந்திய அணி 4 இலக்குகளை இழந்து 364 ஓட்டங்களைப் பெற்றது. கோக்லி 72 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார். (ம)

கருத்தமர்வும் கலந்துரையாடலும்

பெற்றோர்களே! மாணவர்களே!

பொருத்தமான உயர்கல்வி துறையை தேர்ந்தெடுத்து சிறந்த தொழில் துறையை தெரிவுசெய்வதற்கான கருத்தமர்வானது 07.10.2018 நடைபெற உள்ளது.
இக்கலந்துரையாடலில் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் கலந்து சிறப்பித்து கருத்துரை வழங்க உள்ளார்.

இடம்:- IIS CITY CAMPUS
200,சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்
நேரம்:- காலை 9.30 மணி

ஆர்வமுள்ள அனைவரும் இக் கலந்துரையாடலுக்கு வருகைதந்து பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறோம்

IIS CITY CAMPUS
மேலதிக விபரங்களுக்கு:- 071 777 5666 / 0777 570 038

## மரண அறிவித்தல்

### திருமதி அரியமலர் சதாசிவம்



நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அரிமலர் சதாசிவம் 03.10.2018 புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - கனகமணி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சதாசிவத்தின் பாசமிகு மனைவியும், ரவிச்சந்திரன் காலஞ்சென்ற மஞ்சுளா ஆகியோரின் பாசமிகு தாயாரும், றூபலதா காலஞ்சென்ற சுகுணதாஸ் ஆகியோரின் அன்பு மாமியும், அரியரத்தினம், தேவமலர், ரஞ்சிதமலர், சந்திரமலர், அரசரத்தினம், செல்வரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சீதா, காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் சுகிர்ததாசன், காலஞ்சென்ற கந்தையா மற்றும் மேரி ஜோசப்பின், செல்வமலர் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (05.10.2018) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை, நாயன்மார்கட்டில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று நல்லூர் பரி. யாக்கோபு ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை,
நாயன்மார்கட்டு.

தகவல்:
ச.ரவிச்சந்திரன் (ரவி - மகன்)
077 905 1432
(CS/20309)(11)



# சிறந்த துடுப்பாட்ட வீரராக கிளிநொச்சி இந்துவின் வீரர்

யாழ்ப்பாணம், ஒக். 5

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் சிறந்த வீரராக கிளிநொச்சி இந்துக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த எஸ். பிரதீபன் தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரின் இறுதிநாள் நிகழ்வு கொழும்பு சுகதாஸ விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்றது. அண்மையில் நடைபெற்ற ஆண்களுக்கான தேசிய மட்ட கிரிக்கெட்டில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி கிண்ணம் வென்றது. சிறந்த விளையாட்டு வீரராக அந்த அணியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.பிரதீபன் தெரிவு செய்யப்பட்டார். (ம-422,108)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.10.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.